International Trade Centre | SheTrades

UK International Development
Partnership | Progress | Prosperity



# பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்தல்:

## விவசாய உணவு துறையில் இலங்கை பெண்கள் தலைமையிலான வர்த்தக முயற்சிகளுக்கான கைநூல்

In partnership with

EDB SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD

**வெளியீட்டாளர்:** International Trade Centre (ITC)

**தலைப்பு:** பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்தல்: விவசாய உணவு துறையில் இலங்கை பெண்கள் தலைமையிலான வர்த்தக முயற்சிகளுக்கான கைநூல்

**வெளியீட்டுத் திகதி மற்றும் இடம்:** ஜெனீவா, 2024 நவம்பர்

**பக்கங்களின் எண்ணிக்கை:** 64.

மேலதிக தகவல்களுக்கு, தொடர்புகொள்ளவும்: Kristy@intracen.org இல் மிச்சேல் கிரிஸ்டி

ITC அதன் வெளியீடுகளை அதிக அளவில் பரப்புவதற்கு மீள்பதிப்பு மற்றும் மொழிபெயர்ப்பை ஊக்குவிக்கிறது. இந்த கைநூலின் சுருக்கமான அம்சங்கள், மூலத்தின் உரிய அங்கீகாரத்துடன், சுதந்திரமாக மீள் பதிப்புசெய்யப்படலாம். இன்னும் விரிவான மீள்பதிப்பு அல்லது மொழிபெயர்ப்புக்கு அனுமதி கோரப்பட வேண்டும். மீள்பதிப்பு செய்யப்பட்ட அல்லது மொழிபெயர்க்கப்பட்ட பொருளின் ஒரு பிரதி ITC க்கு அனுப்பப்பட வேண்டும்.

அட்டைப்படத்தில் உள்ள டிஜிட்டல் படம் (கள்) AI இனால் உருவாக்கப்பட்டதாகும்.

© International Trade Centre (ITC)

ITC நிறுவனமானது உலக வர்த்தக தாபனம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டு முகவர் நிறுவனமாகும்.





# நன்றி நவிலல்

சர்வதேச வர்த்தக நிலையமானது (ITC) இந்த வெளியீட்டின் தயாரிப்பில் பங்களித்தவர்களுக்கு தனது நன்றியைத் தெரிவிக்கிறது.

மைக்கேல் கிறிஸ்டி மற்றும் மாதங்கி ஹரிஹரன் (இருவரும் ITC) ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் கௌரி தியாகி (ITC) இந்த அறிக்கையைத் தயாரித்தார்.

இந்த அறிக்கையை தயாரிப்பதற்கு பங்களித்த இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கு ITC நன்றி தெரிவிக்க விரும்புகிறது. இந்த கைநூல் ITC மற்றும் TradeLab இன்டர்நேஷனல் எகனமிக் லோ கிளினிக், வர்த்தகம் மற்றும் ஒருங்கிணைப்புக்கான நிலையம், ஜெனீவா சர்வதேச மற்றும் அபிவிருத்தி கற்கைகள் பட்டப்படிப்பு நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையேயான முன்னைய ஒத்துழைப்பிலிருந்து ஓரளவு பயன்பெற்றுள்ளது.

அறிக்கையைத் திருத்தும் பணிகளை மேற்கொண்ட மார்னி மெக்டொனால்ட் மற்றும் வடிவமைப்பு பணிகளைச் செய்த மாக்டலேனா ஸ்டாட்னிக் ஆகியோருக்கும் ITC நன்றி தெரிவிக்க விரும்புகிறது.

இந்த அறிக்கை ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச அபிவிருத்தியின் மூலம் நிதியளிக்கப்பட்டது.

# இந்த கைநூலை யார் பயன்படுத்த வேண்டும்?

இந்த கைநூல் இலங்கை பெண்கள் தலைமையிலான சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு (SMEs) சில உற்பத்திகளை பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு முக்கிய மற்றும் பொருத்தமான சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைப்பாடுகள் குறித்து விளக்குகிறது. இங்கு விளக்கப்பட்டுள்ள சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைப்பாடுகள் இங்கிலாந்து, வேல்ஸ் மற்றும் ஸ்கொட்லாந்து சந்தைகளில் வைக்கப்படும் உற்பத்திப்பொருட்களுக்கு மட்டுமே ஏற்புடையதாகும். இந்த கைநூல் வடக்கு அயர்லாந்து சந்தைகளில் வைக்கப்படும் பொருட்களுக்கு ஏற்புடையதாகாது.

விவசாயத் துறையில் உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளை இந்த கைநூல் குறிப்பிடுகிறது. மிகவும் குறிப்பாக, உண்மையான அல்லது சாத்தியமான ஏற்றுமதிகளின் அடிப்படையில், இந்த கைநூல் வாசனை திரவியங்கள், மூலிகை தேநீர், மூலிகை பொருட்கள், உலரவைக்கப்பட்ட பழங்கள், பதப்படுத்தப்பட்ட பழங்கள் மற்றும் காய்கறிகள், தேங்காய் மற்றும் தேங்காய் தொடர்பான உற்பத்திப்பொருட்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

இந்தக் கையேட்டில் விளக்கப்பட்டுள்ள பல ஒழுங்குமுறைத் தேவைகள் மிகவும் தொழில்நுட்பம் சார்ந்தவை என்பதோடு, விரிவானவை. அத்தகைய தேவைப்பாடுகள் பொதுவாக பிரித்தானியாவுக்கு இறக்குமதிகளை செய்பவர்களுடன் பணி புரியும் தொழில்சார் ஏற்றுமதியாளர்களால் கவனத்திற் கொள்ளப்படுகின்றன. இந்த யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் வகையில், உண்மையான பௌதீக ஏற்றுமதிகள் நடுத்தர அல்லது பெரிய அளவிலான இலங்கை ஏற்றுமதி திரட்டிகளைப் (export aggregators) பயன்படுத்தும் என்று இந்த கைநூல் கருதுகிறது. ஆயினும்கூட, சிறிய அளவிலான உற்பத்தியாளர்கள் ஒரு நிபுணரைப் பயன்படுத்தாமல் நேரடியாக ஏற்றுமதி செய்ய இந்த கைநூலைப் பயன்படுத்தலாம். இந்த நோக்கத்திற்காக, கைநூலில் ஏற்றுமதி உற்பத்திப் பொருட்களுக்கு ஏற்புடைய தொழில்நுட்ப தேவைப்பாடுகளை அணுகுவதற்கான தொடர்புடைய இணைப்புகளும் உள்ளன. இந்தக் கைநூலில் உள்ள ஒவ்வொரு அத்தியாயத்திலும் விளக்கப்பட்டுள்ள ஒழுங்கு முறைத் தேவைப்பாடுகள், ஒவ்வொரு ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளையும் மேலும் விளக்கும் தொடர்புடைய இணைப்புகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் ஏற்புடைய புதிய ஒழுங்குமுறை தேவைப்பாடுகள் பற்றிய ஒரு மேலோட்டத்தை வழங்குவதன் மூலம் இந்தக் கைநூல் முன்னோக்கிய பார்வையைக் கொண்டுள்ளது.

மேலும், கைநூலில் கலந்துரையாடப்பட்ட உற்பத்திப்பொருட்களுக்கு ஒத்த ஒழுங்குமுறை தேவைகளைக் கொண்ட உற்பத்திப்பொருட்களின் தொடர்புடைய வகைகளை உள்ளடக்கிய உட்கிடையான விற்பனை வாய்ப்புகள் இருக்கலாம்.

இறுதியாக, தொழில்நுட்ப ஒழுங்குமுறை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தேவைப்பாடுகள் தவிர, கைநூல் பயனர்கள் சந்தை அடையாளம், வேகமாக மாறிவரும் நுகர்வோர் விருப்பத்தேர்வுகள், போட்டித் தன்மையான தயாரிப்பு விலை நிர்ணயம் மற்றும் பிரித்தானியாவில் தற்போதைய நுகர்வோர் தேவையை பூர்த்தி செய்தல் போன்ற பல்வேறு ஏற்றுமதி தொடர்பான வர்த்தக கரிசனைகளைக் கொண்டிருப்பது முற்றிலும் புரிந்துகொள்ளத்தக்கதாகும். இந்த கைநூல் அத்தகைய சட்டப்பூர்வமற்ற வர்த்தக கரிசனைகளை நிவர்த்தி செய்யவில்லை.

இந்த கைநூலில் உள்ள அனைத்து தகவல்களும் 2024 ஒக்டோபர் வரையான நிலவரப்படியானதாகும். இந்தக் கைநூலைப் படிப்பவர்கள், தங்கள் ஏற்றுமதியைப் பாதிக்கக்கூடிய புதிய ஒழுங்குமுறைத் தேவைகள் குறித்துத் தெரிந்துகொள்ள வலுவாக ஊக்குவிக்கப் படுகிறார்கள்.






## முன்னெழுத்துச்சொற்கள் மற்றும் சுருக்கக்குறியீடுகள்

வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிட்டாலேயன்றி, தொன்களுக்கான அனைத்து குறிப்புகளும் மெட்ரிக் தொன்களைக் குறிக்கும்

**ASYCUDA** – சுங்கத் தரவுகளுக்கான தன்னியக்க முறைமைகள

**BoL** – பில் ஒப் லேடிங் (Bill of lading)

**BRCGS** – பிரித்தானிய சில்லறை வணிக கூட்டமைப்பு உலகளாவிய தரநிலை

**CDA** – தெங்கு அபிவிருத்தி அதிகார சபை

**CITES** – காட்டு விலங்குகள் மற்றும் தாவரங்களின் அழிந்து வரும் உயிரினங்களில் சர்வதேச வர்த்தகம் தொடர்பான ஒப்பந்தம்

**COO** – உற்பத்தி நாடு

**CusDec** – ஏற்றுமதி பிரகடனம்

**DCTS** – அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வர்த்தகத் திட்டம்

**DoC** – வர்த்தக திணைக்களம்

**EDB** – இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

**EORI** – பொருளாதார செயற்படுத்துனர்கள் பதிவு மற்றும் அடையாளம் காணல்

**FRC** – வன அபாய பொருட்கள்

**FSSC** – உணவுப் பாதுகாப்பு முறைமை சான்றுப்படுத்தல்

**HS** – ஒத்திசைந்த முறைமை

**IFS** – சர்வதே சிறப்பம்ச தரநிலை

**Incoterms** – சர்வதேச வர்த்தக விதிமுறைமைகள

**ISO** – சர்வதேச தரநிர்ணய அமைப்பு

**ITC** – சர்வதேச வர்த்தக நிலையம்

**MRL** – அதிகபட்ச எச்ச அளவு

**NOCU** – தேசிய சேதன கட்டுப்பாட்டு அலகு

**NPQS** – தேசிய தாவரத் தனிமைப்படுத்தல் சேவை

**ROO** – உற்பத்தி இடம் தொடர்பான விதிகள்

**SME** – சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி

**TIN** – வரி அடையாள இலக்கம்

**UKCC** – ஐக்கிய இராச்சிய பண்ட குறியீடு

**VAT** – பெறுமதி சேர் வரி

**VSS** – தன்னார்வ பேண்தகுதன்மை தரநிலை

### Incoterms abbreviations

**CIF** – செலவு காப்புறுதி சரக்கனுப்புக் கட்டணம்

**CIP** – ஏந்தூர்தி மற்றும் காப்புறுதி செலுத்தப்பட்டது

**CFR** – செலவு மற்றும் சரக்கனுப்புக் கட்டணம்

**CPT** – செலவு செலுத்தப்பட்டது

**DAP** – இடத்தில் வழங்கப்பட்டது

**DDP** – வழங்கப்பட்ட தீர்வை செலுத்தப்பட்டது

**DPU** – இறக்கப்பட்ட இடத்தில் வழங்கப்பட்டது

**EXW** – Ex Works

**FCA** – Free Carrier

**FOB** – Free on Board

# Table of Contents


**நன்றிநவிலல்** ............ I

**இந்த கைநூலை யார் பயன்படுத்த வேண்டும்?** ............ 2

**முன்னெழுத்துச்சொற்கள் மற்றும் சுருக்கக்குறியீடுகள்** ............ 3

**அத்தியாயம் ச I ஏற்றுமதிகளுக்காக வணிகத்தை தயார்செய்தல்** ............ 8

- **இலங்கையில் வணிக பதிவு** ............ 9
- கட்டம் 1: வணிக பதிவு ............ 9
- கட்டம் 2: வரி அடையாள இலக்கம் பதிவு ............ 10
- கட்டம் 3: பெறுமதி சேர் வரி பதிவு ............ 10
- கட்டம் 4: இலங்கை சுங்கத்தில் பதிவு செய்தல் ............ 10
- கட்டம் 5: உற்பத்தி சார்ந்த பதிவுகள் ............ 11
- கட்டம் 6: ஏனைய நிறுவனங்களில் பதிவு செய்தல் (தெரிவுக்குறியது) ............ 12
- கட்டம் 7: விற்பனை ஒப்பந்தம் ............ 12
- **பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்தல்** ............ 15
- கட்டம் 8: ஒத்திசைவான முறைமை குறியீடுகள் மற்றும் தயாரிப்பு வகைப்பாடு ............ 15
- கட்டம் 9: உணவுப்பொருட்களுக்கான சுகாதார சான்றிதழ் ............ 16
- கட்டம் 10: தாவர சுகாதார சான்றிதழ்கள் (Phytosanitary) ............ 16
- கட்டம் 11: ஏற்றுமதி அனுமதிகள் ............ 17
- கட்டம் 12: ஏற்றுமதி நிதி ............ 18
- **ஐக்கிய இராச்சிய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வர்த்தகத் திட்டம்** ............ 19
- ஏற்புடைய கட்டணங்கள் ............ 20
- உற்பத்தி இடம் தொடர்பான விதிகள் ............ 20
- தரநிலைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் ............ 21
- DCTS இன் கீழ் விருப்பத்தேர்வுகளைக் கோருதல் ............ 21

**அத்தியாயம் 2 தயாரிப்பு மற்றும் உற்பத்தி தேவைப்பாடுகள்** ............ 22

- **பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு ஏற்புடைய தரநிலைகள்** ............ 23
- அடையாளக் குறியிடல் தரநிலைகள் ............ 23
- சந்தைப்படுத்தல் தரநிலைகள் ............ 25
- **இறக்குமதி தேவைப்பாடுகள்** ............ 26
- **இறக்குமதி கட்டுப்பாடுகள்** ............ 27
- **தயாரிப்பு பேண்தகுதன்மை தரநிலை** ............ 28
- **அழிவடைந்து வரும் தாவரங்கள் மற்றும் விலங்குகளில் இருந்தான தயாரிப்புகள்** ............ 29

**அத்தியாயம் 3 தன்னார்வ பேண்தகுதன்மை தரநிலைகள்** ............ 30

- **நிறுவனத்தின் குறியீடுகள்** ............ 33







**அத்தியாயம் 4 சுங்க மற்றும் தொடர்புடைய நடைமுறைகள்** ............ 34

- **சுங்க வெளிப்படுத்தல்** ............ 35
- **சுங்க அனுமதிக்கான ஆவணங்கள்** ............ 36
- **சுங்க அனுமதி** ............ 37

**அத்தியாயம் 5 போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல்கள்** ............ 38

- **பில் ஒப் லேடிங் (Bill of lading)** ............ 38
- **விமானப் போக்குவரத்துச் சான்றிதழ் (Air waybill)** ............ 39
- **காப்புறுதி** ............ 39

**இணைப்பு I ஒரு இலங்கை ஏற்றுமதியாளராக இருக்க தயாராதல்** ............ 41

- **உற்பத்தி சார்ந்த அனுமதிகள்** ............ 41
- **ஒரு மாதிரி விற்பனை ஒப்பந்தத்தின் பகுதி** ............ 43
- **இன்கோடெர்ம்ஸ் (Incoterms)** ............ 44
- **தயாரிப்பு வகைப்பாடு: HS குறியீடுகள்** ............ 45
- HS குறியீடுகள் மற்றும் UKCCகள் பற்றிய மேலோட்டம ............ 45
- **அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வர்த்தகத் திட்டம்** ............ 47
- DCTS இன் கீழ் கட்டண விகிதங்கள் ............ 47
- உற்பத்தி இடம் தொடர்பான விதிகள் ............ 48

**இணைப்பு II அடையாளக் குறியிடல் தரநிலைகள் ---------- 49**
நுகர்வோருக்கு உணவுத் தகவல்களை வழங்குதல் ---------- 49
உணவு கலவை தரநிலைகள் ---------- 50
உணவு விலைக்குறியிடல் தேவைப்பாடுகள் ---------- 51
சேதன உணவு அ டையாளக் குறியிடல் தரநிலைகள் ---------- 51
**இணைப்பு III தன்னார்வ பேண்தகுதன்மை தரநிலைகள் ---------- 52**
சான்றிதழ்களைப் பெறுவதற்கான படித்தரங்கள் ---------- 52
கட்டம் 1: சரியான தரநிலையை அடையாளம் காணவும் ---------- 52
கட்டம் 2: ஒரு இடைவெளி பகுப்பாய்வினை மேற்கொள்ளவும் ---------- 52
கட்டம் 3: சான்றிதழுக்கு விண்ணப்பிக்கவும் ---------- 53
கட்டம் 4: கண்காணிப்பு மற்றும் திருத்த நடவடிக்கை கோரிக்கைகள் ---------- 53
கட்டம் 5: சான்றுப்படுத்தல், கண்காணிப்பு மற்றும் புதுப்பித்தல் ---------- 53
தொடர்புடைய சான்றுப்படுத்தல்கள் ---------- 54
ISO 22000 ---------- 54
உணவுப் பாதுகாப்பு முறைமை சான்றுப்படுத்தல் (FSSC) 22000 ---------- 54
பிரித்தானிய சில்லறை வணிக கூட்டமைப்பு உலகளாவிய தரநிலை (BRCGS) ---------- 55
பெயார்ட்ரேட் இன்டர்நேஷனல் (Fairtrade International) ---------- 55
சர்வதே சிறப்பம்ச தரநிலை (IFS) ---------- 55
**இணைப்பு ஐரசுங்க நடைமுறைகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் ---------- 56**
வணிக விலைப்பட்டியல் ---------- 56
பொதிவுப் பட்டியல் (packing list) ---------- 57
உற்பத்தி இடத்தின் சான்று ---------- 57
உற்பத்தி இட பிரகடனம் ---------- 58
படிவம் A ---------- 59
பொருளாதார செயற்படுத்துனர்கள் பதிவு மற்றும் அடையாள இலக்கம் ---------- 59
கப்பலேற்றல் குறிப்பு ---------- 59
சரக்கு அனுப்பும் குறிப்பு ---------- 59
**இணைப்பு ஏ போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் ---------- 60**
ஒரு பில் ஒப் லேடிங் (Bill of lading) உதாரணம் ---------- 60
ஒரு விமானப் போக்குவரத்துச் சான்றிதழ் (Air waybill) உதாரணம் ---------- 61



படம் 1: ஐக்கிய இராச்சிய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வர்த்தகத் திட்டம் பற்றிய கண்ணோட்டம் ---------- 19
படம் A1: மாதிரி விற்பனை ஒப்பந்தம் ---------- 43
படம் A2: மிளகு/வாசனைத் திரவியங்களுக்கான UKCC-களுக்கான அத்தியாயக் குறிப்புகளின் உதாரணம் ---------- 46
படம் A3: DCTS நாடுகள் வகைப்பாடு ---------- 47
படம் A4: DCTS .ன் கீழ் அறவிடப்படும் வெவ்வேறு கட்டணங்கள் ---------- 48
படம் A5: மாதிரி பில் ஒப் லேடிங் (Bill of lading) ---------- 60
படம் A6: விமானப் போக்குவரத்துச் சான்றிதழ் (Air waybill) மாதிரி ---------- 61

அட்டவணை 1: விற்பனை ஒப்பந்தத்தின் முக்கிய விதிமுறைகளின் சுருக்கம் ---------- 13
அட்டவணை 2: Incoterms 2020 இன் உதாரணம் ---------- 14
அட்டவணை A1: உற்பத்தி சார்ந்த அனுமதிகள்/ உரிமங்கள்/ சான்றிதழ்கள் ---------- 41
அட்டவணை A2: Incoterms பற்றிய சுருக்கம் ---------- 44
அட்டவணை A3: HS குறியீடு மற்றும் UKCC இன் படி மிளகுக்கான தயாரிப்பு வகைப்பாடு ---------- 45
அட்டவணை A4: இந்த கைநூலில் உள்ளடக்கப்பட்ட தயாரிப்புகளுக்கான UKCC களின் குறிப்பான பட்டியல் ---------- 46

பெட்டி 1: வணிக பதிவுக்கான மேலதிக ஆவணங்கள் ---------- 9
பெட்டி 2: ஏற்றுமதியாளர் பதிவுக்கான ஆவணங்கள் ---------- 10
பெட்டி 3: ASYCUDA என்றால் என்ன? ---------- 11
பெட்டி 4: சேதன தேயிலை / உற்பத்திப் பொருட்களுக்கான பதிவு ---------- 15
பெட்டி 5: தயாரிப்பு வகைப்பாட்டின் உதாரணம் ---------- 17
பெட்டி 6:வாசனைத் திரவியங்களுக்கான ஏற்றுமதி அனுமதி ---------- 25
பெட்டி 7: மூலிகைகள் மற்றும் வாசனைத் திரவியங்களுக்கான தரநிலைகள் ---------- 28
பெட்டி 8: வன-ஆபத்து பண்டம் என்றால் என்ன? ---------- 28
பெட்டி 9: ஒரு பேண்தகு எதிர்காலத்திற்கு தயாரிப்பாளர்கள் எவ்வாறு தயாராகலாம்? ---------- 29
பெட்டி 10: நடைமுறையில் CITES நடைமுறைப்படுத்தலின் உதாரணம் ---------- 31
பெட்டி 11: கோடெக்ஸ் அலிமென்டேரியஸ் (Codex Alimentarius) உணவுக் குறியீடு ---------- 31
பெட்டி 12: விநியோகஸ்தர் பேண்தகுதன்மை வளங்கள் ---------- 32
பெட்டி 13: நேரடி வர்த்தகர் உள்ளீடு ---------- 36
பெட்டி A1: உற்பத்தி நாடு மற்றும் களஞ்சியப்படுத்தல் தகவல் ---------- 49
பெட்டி A2:மூலப்பொருட்கள் பட்டியல் ---------- 50
பெட்டி A3: உற்பத்தி இட விதிகள் (ROO) உடன் இணங்குவதை நிரூபிக்க தேவையான ஆவணங்கள் ---------- 57
பெட்டி A4: உற்பத்தி இட பிரகடனத்தைத் தயாரிப்பதற்கான நிபந்தனைகள் ---------- 58
பெட்டி A5: உற்பத்தி இட பிரகடன வாசகங்கள் ---------- 58


© Freepik.com

# 01 ஏற்றுமதிகளுக்காக வணிகத்தை தயார் செய்தல்

## இலங்கையில் வணிக பதிவு

### கட்டம் 1: வணிக பதிவு

இந்த செயன்முறையின் முதற் கட்டம் வணிகத்தின் பெயரையும் கட்டமைப்பையும் தேர்ந்தெடுப்பதாகும். நீங்கள் ஒரு தனியுரிமை, ஒரு கூட்டாண்மை அல்லது ஒரு நிறுவனத்தைத் தேர்வு செய்யலாம். வெவ்வேறு கட்டமைப்புகள் வெவ்வேறு வணிக பதிவு செயன்முறைகளைப் பின்பற்றுகின்றன. ஒரு நிறுவனத்தை பதிவு செய்ய, eRoc போர்ட்டலைப் பயன்படுத்தி கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திற்கு ஆவணங்களைச் சமர்ப்பித்து, ஒரு தனித்துவமான அடையாள இலக்கம் மற்றும் கூட்டிணைப்புச்சான்றிதழைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த செயன் முறை பற்றிய விரிவான தகவலுக்கு இந்த வழிகாட்டியைப் பார்க்கவும்.

ஒரு தனியுரிமைக்கு, வணிகம் அமைந்துள்ள மற்றும் பதிவு செய்யப்படும் பிரதேசத்தின் அடிப்படையில் மாகாண சபையில் இருந்து/ பிரதேச செயலகத்தில் இருந்து பொருத்தமான படிவங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும். விண்ணப்பப் படிவங்களில் பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து துணை ஆவணங்களையும் பிரதேச செயலாளரிடம் சமர்ப்பித்து தனிப்பட்ட வணிகப் பதிவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

உங்கள் வணிகத்திற்கான சரியான வணிகக் கட்டமைப்பைக் கண்டறிய உங்களுக்கு உதவ ஒரு சட்டத்தரணியிடம் பேச பரிந்துரைக்கப்படுகிறது. வணிகப் பெயர் மற்றும் கட்டமைப்பைத் தேர்ந்தெடுத்த பின்னர், பொருத்தமான வணிக அலுவலகம் அல்லது தொழிற்சாலை வளாகத்தை (ஏற்புடையதாயின்) அடையாளம் கண்டு வாடகை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும். வணிகத்தின் பெயரில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட வங்கிக் கணக்கைத் திறக்கவும். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட அனைத்து இலங்கை வணிகங்களும் தொழில் திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டும்.

### பெட்டி 1: வணிக பதிவுக்கான மேலதிக ஆவணங்கள்

உற்பத்தியாளர்கள் தங்கள் வணிகத்தைப் பதிவுசெய்ய மேலதிக ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டியிருக்கலாம். உதாரணமாக, உணவு தொடர்பான ஒரு வணிகத்தை தனியொரு உரிமையாளராகப் பதிவு செய்வதற்கு, மாகாண சபைக்கு/ பிரதேச செயலகத்திற்குத் தேவையான ஆவணங்களைத் தவிர்த்து, உற்பத்தியாளர்கள் பிரதேச செயலாளருக்கு முகவரியிடப்பட்ட, பொதுச் சுகாதார பரிசோதகரிடம் இருந்து ஒரு பரிந்துரைக் கடிதத்தைப் பெற்று, வணிக பதிவு விண்ணப்பத்தில் அதை உள்ளடக்க வேண்டும். தேவையான அனைத்து ஆவணங்கள் பற்றிய தகவல்களையும் அருகில் உள்ள மாகாண சபையிலிருந்து/பிரதேச செயலகத்தில் இருந்து பெறலாம்.

## கட்டம் 2: வரி அடையாள இலக்கம் பதிவு

ஒரு வரி அடையாள இலக்கம் (TIN) சான்றிதழைப் பெற உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு விண்ணப்பிக்கவும். ஒரு வரி அடையாள இலக்கம் (TIN) பதிவு தொடர்பான அனைத்து தகவல்களும் இங்கே கிடைக்கின்றன. விண்ணப்பப் படிவத்தை திணைக்களத்தின் போர்டல் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். திணைக்களத்தின் இலத்திரனியல்-சேவைகளை பயன்படுத்தி ஒரு TIN இலக்கத்தை ஒன்லைனில் பெறலாம். வணிக கட்டமைப்பின் அடிப்படையில் TIN பதிவுக்கான செயன்முறை மாறுபடும். பின்வரும் துணை ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இருக்க வேண்டும்:

- வர்த்தக பதிவுச் சான்றிதழ் (கூட்டிணைப்பு சான்றிதழ்)
- முகவரி சான்று அல்லது குத்தகை உடன்படிக்கை
- வங்கி கணக்குக்கூற்று அல்லது கணக்குப் புத்தகம்
- (பங்காளர்கள் உட்பட) தேசிய அடையாள அட்டைகள்/ கடவுச் சீட்டுகளின் பிரதிகள்.

## கட்டம் 3: பெறுமதி சேர் வரி பதிவு

ஒரு பெறுமதி சேர் வரி (VAT) சான்றிதழைப் பெற உள்நாட்டு இறைவரித் திணைக்களத் தலைமையகத்தின் வரிப் பதிவுப் பிரிவு அல்லது திணைக்களத்தின் அருகிலுள்ள ஏதேனும் பிராந்திய அலுவலகங்களுக்கு விண்ணப்பிக்கவும். இல்திரனியல் சேவைகள் மூலம் இதை அணுக உற்பத்தியாளரின் TIN ஐப் பயன்படுத்தவும்.

- **கட்டாய பதிவு:** மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் உட்பட எந்தவொரு நபரின் நிதிச் சேவைகள் அல்லாத வேறு பொருட்கள் மற்றும் சேவைகளின் வரிக்குட்பட்ட விநியோகத்தின் பெறுமதி காலாண்டுக்கு 15 மில்லியன் ரூபாய் அல்லது ஆண்டுக்கு 60 மில்லியன் ரூபாய்க்கு மேல் இருந்தால் மட்டுமே உற்பத்தியாளர்கள் VAT சான்றிதழைப் பெற வேண்டும். உங்கள் வணிகம் பதிவு வரம்புக்கு உட்பட்டதா என்பது பற்றிய மேலதிக தகவலுக்கு, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் உள்ள வரி (VAT) பதிவுப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.
- **தன்னார்வ பதிவு:** உற்பத்தியாளர்கள் ஏயுவு வரிக்கு தானாக முன்வந்து பதிவு செய்யலாம்.

VAT தொடர்பான கூடுதல் தகவல்களை இங்கே காணலாம்.

## கட்டம் 4: இலங்கை சுங்கத்தில் பதிவு செய்தல்

ஒரு ஏற்றுமதியாளராக இலங்கை சுங்கத்தில் பதிவு செய்யுங்கள். சுங்க இலத்திரனியல்-பதிவு போர்ட்டல் மூலம் "ஏற்றுமதியாளர் பதிவு" ஒன்லைன் ஊடாக செய்யப்படலாம். பதிவு செயன்முறை பற்றிய விரிவான தகவல்களுக்கு ஏற்றுமதியாளர்களுக்கான இந்த பயனர் கையேட்டை பார்க்கவும். சுங்கத் தரவுகளுக்கான தானியங்கு முறைமையில் (ASYCUDA) உற்பத்தியாளர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.

### பெட்டி 2: ஏற்றுமதியாளர் பதிவுக்கான ஆவணங்கள்

பதிவை பூர்த்திசெய்ய, பின்வரும் ஆவணங்களை பதிவேற்ற வேண்டும்.

- அனைத்து பணிப்பாளர்கள்/பங்குதாரர்களின் தேசிய அடையாள அட்டைகள் / செல்லுபடியாகும் கடவுச்சீட்டுகளின் பிரதிகள்.
- VAT சான்றிதழ்
- TIN சான்றிதழ்
- வர்த்தக பதிவுச் சான்றிதழ் (கூட்டிணைப்பு சான்றிதழ்)
- முகவரி சான்று அல்லது குத்தகை உடன்படிக்கை

### பெட்டி 3: ASYCUDA என்றால் என்ன?

ASYCUDA என்பது வெளிநாட்டு வர்த்தக நடைமுறைகளை உள்ளடக்கிய ஒரு சுங்க முகாமைத்துவ முறைமை ஆகும். ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் இருசாராரும் இதைப் பயன்படுத்துகின்றனர். கணக்கியல், பரிமாற்று (transit) மற்றும் இடைநிறுத்தல் (suspense) நடைமுறைகளுடன், ஏற்றுமதிச் சீட்டுகள் (manifests) மற்றும் சுங்க அறிவிப்புகளை (declarations) இது கையாளுகிறது. இது புள்ளிவிபர பொருளாதார பகுப்பாய்விற்கு பயன்படுத்தக்கூடிய வர்த்தக தரவையும் உருவாக்குகிறது.



## கட்டம் 5: உற்பத்தி சார்ந்த பதிவுகள்

தேயிலை (சேதன / மூலிகை / ஆயுர்வேத) மற்றும் தென்னை உற்பத்திப் பொருட்கள் இலங்கையில் ஒழுங்குமுறைப்படுத்தப் படுகின்றன. வணிகத்தைத் தொடங்கும் முன் வர்த்தக அனுமதிப் பத்திரம் அல்லது குறிப்பிட்ட பதிவைப் பெறவும். ஆண்டுதோறும் பதிவு புதுப்பிக்கப்பட வேண்டும். தேயிலை மற்றும் தேயிலை கலவைகளுக்கு (10% இற்கு குறைந்த மூலிகைகள் கலந்த கமெலியா சினென்சிஸ் ) இலங்கை தேயிலை சபையின் தேயிலை ஏற்றுமதி பிரிவில் பதிவு செய்யவும். செயன்முறையை பூர்த்திசெய்ய தேவையான விபரங்களைப் பகிர்ந்து, பதிவுக் கட்டணத்தைச் செலுத்தவும். ஏற்றுமதியாளர் பதிவைப் பெறுவதற்கு பண்டகசாலை பதிவு (உற்பத்திப்பொருள் களஞ்சியப்படுத்தப்படும் இடத்தில்) ஒரு முன்நிபந்தனை என்பதை ஏற்றுமதியாளர்கள் கவனத்திற்கொள்ள வேண்டும். இலங்கை தேயிலை சபையுடனான பண்டகசாலை பதிவு செயன்முறை பற்றி அறிய இந்த வழிகாட்டியை பார்க்கவும். மேலும், மூலிகை பானங்கள் ஏற்றுமதியாளர்கள் தங்களை ஆயுர்வேத திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டும்.

தென்னை மற்றும் தென்னை தொடர்பான பொருட்களுக்காக தென்னை அபிவிருத்தி அதிகாரசபையில் (CDA) ஒரு உற்பத்தியாராகவும் ஏற்றுமதியாளராகவும் பதிவு செய்யுங்கள். உற்பத்திப் பதிவுக்கு, CDA ஐ நேரடியாகத் தொடர்புகொண்டு, ஏற்புடைய பதிவுக் கட்டணத்தைச் செலுத்தவும். ஏற்றுமதியாளர் பதிவுக்கு, CDA இன் ஏற்றுமதியாளர் பதிவு போர்டல் மூலம் விண்ணப்பிக்கவும். நீங்கள் ஒரு ஏற்றுமதியாளராக மட்டும் இருந்தால் மற்றும் தெங்குப் பொருட்களை உற்பத்தி செய்யவில்லை என்றால் உற்பத்தி பதிவு தேவையில்லை.

சேதன தேயிலை அல்லது சேதன தேங்காய் மா, சேதனப் பழங்கள், சேதன மூலிகைகள் போன்ற சேதனப் பொருட்களை ஏற்றுமதி செய்ய ஏற்றுமதியாளர்கள் மேலதிக பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் தகவலுக்கு பெட்டி 4ஐப் பார்க்கவும்.

### பெட்டி 4: சேதன தேயிலை / உற்பத்திப் பொருட்களுக்கான பதிவு

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் (EDB) தேசிய சேதனக் கட்டுப்பாட்டுப் பிரிவில் (NOCU) பதிவு செய்யுங்கள். வணிகம் தொடர்பான தகவல்கள் தொடர்பு விவரங்கள் உற்பத்திப்பொருட்களின் மூலம் வடிவம், உற்பத்தி மூலம், வகை மற்றும் குறிப்புகள் போன்ற உற்பத்தி விவரங்கள் மற்றும் சான்றிதழ்களின் விவரங்களை சமர்ப்பிக்கவும். NOCU இல் ஒரு ஏற்றுமதியாளராகப் பதிவு செய்ய, ஏற்றுமதியாளர்கள், Control Union Inspection (Pvt) Ltd, Mayacert, IMO Control India, EcoCert-Germany அல்லது வேறு ஏதேனும் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் அமைப்பு போன்ற அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கும் அமைப்பிலிருந்து ஒரு சேதனச் சான்றிதழைப் பெற வேண்டும். சேதனச் சான்றிதழைப் பதிவேற்றி, பதிவு செயன்முறையை பூர்த்திசெய்யவும். பதிவு செயன் முறையை கட்டம் கட்டமாக விளங்கிக்கொள்ள, மேூஊரு இன் இந்த காணொலியை பார்க்கவும்.

**விரைவான உதவிக்குறிப்பு: ஆயுர்வேத உற்பத்திப் பொருள்கள் வர்த்தகம் செய்வதற்கான முன் சந்தைப்படுத்தல் அனுமதிப்பத்திரம்**

மூலிகைகள், மூலிகை உற்பத்திப் பொருட்கள் அல்லது மூலிகை தேயிலை உற்பத்தியாளர்கள், அவர்களின் உற்பத்திப்பொருள்கள் "ஆயுர்வேத உற்பத்திகள்" பட்டியலின் கீழ் வருமா என்பதைச் சரிபார்க்க ஆயுர்வேத உற்பத்திப்பொருட்களை ஒழுங்கு படுத்துவதற்கான தரநிலை செயற்பாட்டு நடைமுறையின் பத்தி 2.2 ஐப் பார்க்கவும். விண்ணப்பப் படிவத்தை, பதிவிறக்கம் செய்து, சரிபார்ப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களின் கோப்பையும் தயார் செய்து, வணிகத்தைத் தொடங்குவதற்கான அங்கீகாரத்தைப் பெற தேவையான உற்பத்தி மாதிரிகளுடன் சேர்த்து ஆயுர்வேதத் திணைக்களத்தின் தொழில்நுட்பக் கிளையில் சமர்ப்பிக்கவும். ஒரு ஏற்றுமதி அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்க, விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து, தேவையான ஆவணங்களை ஆயுர்வேதத் திணைக்களத்தின் தொழில்நுட்பக் கிளையில் சமர்ப்பிக்கவும். பதிவு செயன்முறை, படிவங்கள் மற்றும் சரிபார்ப்புப் பட்டியல் பற்றிய விரிவான தகவலுக்கு தரநிலை செயற்பாட்டு நடைமுறையைப் பார்க்கவும்.

## கட்டம் 6: ஏனைய நிறுவனங்களில் பதிவு செய்தல் (தெரிவுக்குறியது)

ஏற்றுமதிக்கு தயாராகும் போது ஏற்றுமதியாளர்கள் பின்வரும் நிறுவனங்களுடன் பதிவு செய்ய விரும்பலாம்:

- **இலங்கை வர்த்தக சம்மேளனம்:** வலையமைப்பு வாய்ப்புகள், வணிக உதவி சேவைகள், பயிற்சி திட்டங்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்குப் பயன்தரும் ஏனைய மூலங்கள் ஆகியவற்றிலிருந்து உறுப்பினர்கள் பயனடைகிறார்கள். வர்த்தக சம்மேளனத்தில் இணைய, வணிகப் பதிவு சான்று மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட உறுப்பினர் விண்ணப்பப் படிவத்தை, சமர்ப்பித்து, ஏற்புடைய உறுப்பினர் கட்டணத்தைச் செலுத்தவும்.

- **ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB):** ஏற்றுமதி சார்ந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் புதிய ஏற்றுமதியாளர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையில் தன்னார்வமாக முன்வந்து பதிவு செய்து கொள்ள முடியும் என்பதோடு, ஏற்றுமதியாளர்கள் மற்றும் சாத்தியமான ஏற்றுமதியாளர்களுக்காக வடிவமைக்கப்பட்ட திறன் விருத்தி,தர மேம்பாடு, சந்தை வாய்ப்புகள், திறன் மேம்பாடு, ஆலோசனை மற்றும் ஏற்றுமதி சந்தைப்படுத்தல் ஆலோசனை சேவைகளை அணுகலாம்.

- பெண்கள் கைத்தொழில் மற்றும் வர்த்தக சபை: வலையமைப்பு வாய்ப்புகள், வர்த்தக கண்காட்சிகள் மற்றும் கண்காட்சிகளில் பங்கேற்றல், வாடிக்கையாளர்களுக்கான அணுகல் மற்றும் தொழில் முயற்சியாளர் திறன் விருத்திக்கான பயிற்சி அமர்வுகள் போன்றவற்றிலிருந்து உறுப்பினர்கள் பயனடைகிறார்கள். ஒரு உறுப்பினராக, பெண் தொழில்முயற்சியாளர்கள் DFCC வங்கியில் ஆலோகா சேமிப்புக் கணக்குகளை திறக்கலாம், இது உயர்- வட்டி சேமிப்புக் கணக்குகள், பாராட்டுக்குரிய டிஜிட்டல் சுகாதார தீர்வுகள், கடன்களுக்கான முன்னுரிமை வட்டி விகிதங்கள் போன்ற நன்மைகளை வழங்குகிறது. உறுப்பினர் ஆவதற்கு இங்கே விண்ணப்பிக்கவும். ஐந்து வகையான உறுப்புரிமைகளைப் பெறலாம். உங்கள் தேவைகளுக்கு மிகவும் பொருத்தமான உறுப்புரிமையைத் தேர்ந்தெடுக்கவும்.

- இலங்கை பெண்கள் தொழில்முனைவோர் சங்கம்: ஒரு வணிகத்தை ஆரம்பிக்க விரும்பும் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு இந்த சங்கம் பல பயிற்சி மற்றும் வலையமைப்பு வாய்ப்புகளை வழங்குகிறது. மேலும், சங்கம் மற்றும் தூதரகங்கள் அல்லது ஏனைய நாடுகளின் சங்கங்களுக்கு இடையே ஏற்பாடு செய்யப்பட்ட மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் மூலம் உறுப்பினர்கள் பயனடைகிறார்கள். அங்கத்தினர்கள் கைத்தொழில் மற்றும் விவசாய வணிக யாழ் மகளிர் வர்த்தக சங்கம், மத்திய மாகாண சிறு கைத்தொழில் மற்றும் வர்த்தக பெண்கள் சங்கம் மாத்தளை பெண்கள் சங்கம் முதலிய சங்கத்தின் மற்ற அங்கத்துவ சங்கங்களுக்கான அணுகலைப் பெறுகின்றனர் பதிவு செய்ய, இந்த உறுப்பினர் பதிவு படிவத்தை பூர்த்தி செய்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை வழங்கவும். உறுப்பினராக சேர்வது பற்றிய மேலதிக தகவல்கள் இங்கே கிடைக்கின்றன.

**விரைவான உதவிக்குறிப்பு: EDB மகளிர் தொழில் முயற்சியாளர் அபிவிருத்தித் திட்டம்**

உலகளவில் வணிக ரீதியாக சாத்தியமான வாய்ப்புகள் மற்றும் விநியோகச் சங்கிலிகளுடன் உங்கள் வணிகத்தை இணைக்க நுனுட இன் பெண்கள் தலைமையிலான இந்த ஏற்றுமதி முயற்சியில் இணயவும். இது பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் திறன் விருத்தி, வணிக அபிவிருத்தி சேவைகளை அணுகுவதற்கான ஆதரவு போன்ற பல சேவைகளை வழங்குகிறது. EDB பெண்கள் தொழில் முயற்சியாளர் மேம்பாட்டுத் திட்டத்தில் சேர இந்த இணைப்பின் மூலம் ஒன்லைனில் பதிவு செய்யவும்.

## கட்டம் 7: விற்பனை ஒப்பந்தம்

நம்பிக்கை மற்றும் தொடர்பாடல் அடிப்படையில் ஒரு உறவை கட்டியெழுப்புவது கொள்வனவாளர்களை ஈர்ப்பதற்கும் தக்கவைப்பதற்கும் அவசியமானதாகும். ஒரு விரிவான ஒப்பந்தம் ஒவ்வொரு தரப்பினரின் உரிமைகள் மற்றும் கடமைகள், அத்தகைய உரிமைகள் மற்றும் கடமைகள் பயனுள்ளதாக இருப்பதற்கான நிபந்தனைகள் மற்றும் அவை மீறப்பட்டால் என்ன நடக்கும் என்பவற்றை குறிப்பிடுகிறது. விற்பனை ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு வழிவகுக்கும் அனைத்து பேச்சுவார்த்தைகளும் எழுத்துப்பூர்வமாக இருப்பதை உறுதிசெய்யவும்.

பல காரணிகளைப் பொறுத்து தரப்புகள் நீண்ட அல்லது குறுகிய கால விற்பனை ஒப்பந்தங்களில் கையெழுத்திடலாம். இருப்பினும், உற்பத்தியாளர்கள் அட்டவணை 1 இல் வழங்கப்பட்ட உட்பிரிவுகள் தங்கள் விற்பனை ஒப்பந்தங்களில் சேர்க்கப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும். அவ்வாறு செய்வது, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிணக்குகளை தெளிவாகவும் நட்பு ரீதியாகவும் தீர்க்க தரப்பினருக்கு உதவலாம்.



### அட்டவணை 1: விற்பனை ஒப்பந்தத்தின் முக்கிய விதிமுறைகளின் சுருக்கம்

| TERM | EXPLANATION |
|---|---|
| **முன்வரை விலைப்பட்டியல்**<br>Pro forma invoice | • கொள்வனவு கட்டளையின் விதிமுறைகளை உறுதிப்படுத்த விற்பனையாளரால் கொள்வனவாளருக்கு அனுப்பப்பட்டது. பல விலைப்பட்டியல்கள் ஒரே விற்பனை ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்படலாம்<br>• உற்பத்தி விபரம், அளவு, விலை மற்றும் விநியோக விதிமுறைகள் போன்ற தகவல்களை உள்ளடக்கியது<br>• கொள்வனவாளரிடமிருந்து கட்டணத்தைக் கோரவும் பயன்படுத்தப்படுகிறது |
| **கட்டண விதிமுறைகள்** | • விலைப்பட்டியல் செலுத்துவதற்கான இணக்கம் காணப்பட்ட நிபந்தனைகள்<br>• செலுத்த வேண்டிய திகதி, நாணயம் மற்றும் பணம் செலுத்தும் முறை மற்றும் நிலுவையில் உள்ள கட்டணத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட அபராதங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது |
| **முன்னணி நேரம்**<br>Lead time | • உற்பத்தி, ஏற்றுமதியாளர் மற்றும் கப்பலேற்றல் முறையைப் பொறுத்து, கொள்வனவு கட்டளை செய்யப்பட்ட நேரத்திலிருந்து பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் வழங்குவதற்கும் எடுக்கும் நேரத்தின் அளவு.<br>• லீட் டைம் குறித்த இணக்கம் இரு தரப்பினருக்கும் இடையே நம்பிக்கை மற்றும் சுமூகமான வர்த்தக உறவுகளுக்கு வழிவகுக்கும் |
| **குறைந்தபட்ச கொள்வனவு கட்டளை அளவுகள்** | • ஒரு கொள்வனவாளர் ஏற்றுமதியாளரிடம் இருந்து கொள்வனவு கட்டளை செய்ய வேண்டிய குறைந்தபட்ச அலகுகளின்<br>• எண்ணிக்கை<br>உற்பத்தியில் வினைத்திறனை மேம்படுத்த உதவுகிறது |
| **முத்திரையிடல் மற்றும் பொதியிடல்**<br>Labelling and packaging | • கொள்வனவாளரின் பாத்திரங்களை கோடிட்டுக் காட்டுகிறது. சில உதாரணங்கள்:<br>– ‘ஒழுங்குமுறை முகவரமைப்பின் முத்திரையிடல் தேவைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்வதற்கு உற்பத்தியாளர் பொறுப்பேற்க வேண்டும்…’<br>– ‘கொள்வனவாளர் சார்பாக போதுமானளவு முத்திரைகள் மற்றும் வேறு பொதியிடல் பொருட்களை கொள்வனவு கட்டளை செய்வதற்கு உற்பத்தியாளரே பொறுப்பாவார்…’<br>– ‘உற்பத்தி மாற்றங்கள் காரணமாக பயன்படுத்தப்படாத முத்திரைகள் அல்லது பொதியிடல் பொருட்களுக்கு கொள்வனவாளர் பொறுப்பேற்க மாட்டார்…’ |
| **தனிப்பயனாக்கப்பட்ட அபிவிருத்திகள்** | • கொள்வனவாளரின் குறிப்பிட்ட தயாரிப்பு மற்றும் உற்பத்தி கோரிக்கைகள் உற்பத்தியாளரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இரு தரப்பினரும் ஒப்புக்கொள்கிறார்கள் என்பதைக் காட்ட விற்பனை ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. |
| **விநியோக விதிமுறைகள் அல்லது சர்வதேச வர்த்தக விதிமுறைகள்**<br>(Incoterms) | • அட்டவணை 2 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி, சர்வதேச பரிவர்த்தனைகளில் பொருட்களை விற்பனை செய்வதற்கான ஏற்றுமதியாளர்கள் மற்றும் வாங்குபவர்களின் பொறுப்புகள், விநியோக மையம் மற்றும் செலவுகள் ஆகியவற்றை வரையறுக்கும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட விதிகளின் தொகுப்பு<br>• விநியோகம் செய்யும் இடம் அல்லது சேருமிடம் முடிந்த வரையில் குறிப்பிடப்பட்டுள்ளதை தரப்புகள் உறுதி செய்ய வேண்டும். சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின்படி, பின்வரும் சொற்றொடர்களைப் பயன்படுத்துவதே சிறந்த நடைமுறையாக உள்ளது ‘ஜதெரிவுசெய்யப்பட்ட ஐஉெழவநசஅஸ ஜபெயரிடப்பட்ட மையம் அல்லது இடம்ஸ ஐஉெழவநசஅள 2020“ |

மாதிரி விற்பனை ஒப்பந்தத்தின் ஒரு சுருக்க சாரம்சத்திற்கு இணைப்பு ஐ ஐப் பார்க்கவும்

அட்டவணை 2 சில விருப்ப விநியோக விதிமுறைகள் மற்றும் தயாரிப்பாளர்/விற்பனையாளர் (S) மற்றும் கொள்வனவாளர் (B) இடையே சாத்தியமான நிகழ்நிலவரங்களைக் காட்டுகிறது. மீதமுள்ளவை, உதாரணங்களுடன், இணைப்பு I இல் வழங்கப்பட்டுள்ளன.

## அட்டவணை I: Incoterms 2020 இன் உதாரணம்

| INCOTERM | DESCRIPTION | RESPONSIBILITIES |
|---|---|---|
| **பன்முக போக்குவரத்து** | | |
| **கப்பலேற்றல் ஏற்பாடுகள்**<br>Ex Works (EXW) | S இன் (விற்பனையாளரின்) வளாகமாக இருக்க வேண்டிய அவசியமில்லாத ஒரு பெயரிடப்பட்ட இடத்தில் S (விற்பனையாளர்) பொருட்களை B (கொள்வானவாளரு)க்கு வழங்குகிறார். ஏற்றுதல், விநியோகம் மற்றும் தொடர்புடைய அனைத்து அபாயங்கள் மற்றும் செலவுகளுக்கு B (கொள்வனவாளர்) பொறுப்பாகும். | S இன் எல்லைக்குள் விநியோகம் நடந்தால், ஏற்றுமதி அனுமதிகள் பெறப்படுவதை உறுதிசெய்ய S கடப்பாடுடையவரன்று. அது B இன் பொறுப்பாகும். தொடர்புடைய தகவல் மற்றும் ஆவணங்களைப் பெறுவதற்கு மட்டுமே S உதவ வேண்டும். |
| **இடத்தில் விநியோகம் செய்யப்பட்டது**<br>Delivered at Place (DAP) | S, பெயரிடப்பட்ட இடத்தில் Bக்கு பொருட்களை வழங்குகிறார். B இன் இழப்பு அல்லது பொருட்களுக்கு சேதம் ஏற்படும் அபாயத்திற்கு எதிராக காப்புறுதித் திட்டத்தை வாங்க S கடப்பாடுடையவரன்று. | S பணம் செலுத்தி ஏற்றுமதி அனுமதிகளைப் பெற வேண்டும் ஆனால் மூன்றாம் நாடுகளின் வழியாகப் போக்குவரத்துக்கான இறக்குமதி அனுமதிகள் அல்லது அனுமதிகளைப் பெற வேண்டிய கட்டாயம் இல்லை. பரிமாற்றம் மற்றும்/அல்லது இறக்குமதி அனுமதிகளைப் பெறுவதற்கு ஆவணங்கள் மற்றும்/அல்லது தகவல்களைப் பெறுவதற்கு B இன் செலவில் S Bக்கு உதவ வேண்டும். |
| *Sea and inland waterway transport* | | |
| Free on Board (FOB) | S, B-ஆல் பரிந்துரைக்கப்பட்ட கப்பலில் B-க்கு பொருட்களை கப்பலேற்றல் துறைமுகத்தில் வழங்குகிறார். பொருட்கள் கப்பலில் இருக்கும் தருணத்தில் பொருட்கள் மற்றும் தொடர்புடைய அனைத்து செலவுகளுக்கும் B பொறுப்பாவார். | S பணம் செலுத்தி ஏற்றுமதி அனுமதிகளைப் பெற வேண்டும் ஆனால் மூன்றாம் நாடுகளின் வழியாகப் போக்குவரத்துக்கான இறக்குமதி அனுமதிகள் அல்லது அனுமதிகளைப் பெற வேண்டிய கட்டாயம் இல்லை. |
| **செலவு மற்றும் சரக்கனுப்புக் கட்டணம்**<br>Cost and Freight (CFR) | S கப்பலில் B க்கு பொருட்களை வழங்குகிறார். பொருட்கள் உண்மையில் அவர்களின் இலக்குக்கு வந்தாலும் இல்லா விட்டாலும் S இன் கடமை முடிந்ததாக கொள்ளப்படும். B இன் இழப்பு அல்லது பொருட்களுக்கு சேதம் ஏற்படும் அபாயத்திற்கு எதிராக காப்புறுதித் திட்டத்தை வாங்க S கடப்பாடுடையவரன்று. | S பணம் செலுத்தி ஏற்றுமதி அனுமதிகளைப் பெற வேண்டும் ஆனால் மூன்றாம் நாடுகளின் வழியாகப் போக்குவரத்துக்கான இறக்குமதி அனுமதிகள் அல்லது அனுமதிகளைப் பெற வேண்டிய கட்டாயம் இல்லை.<br><br>பரிமாற்றம் மற்றும்/அல்லது இறக்குமதி அனுமதிகளைப் பெறுவதற்கு ஆவணங்கள் மற்றும்/அல்லது தகவல்களைப் பெறுவதற்கு B இன் செலவில் S Bக்கு உதவ வேண்டும். |
| **செலவு காப்புறுதி சரக்கனுப்புக் கட்டணம்**<br>(CIF) | S கப்பலில் B க்கு பொருட்களை வழங்குகிறார். பொருட்கள் உண்மையில் அவர்களின் இலக்குக்கு வந்தாலும் இல்லா விட்டாலும் S இன் கடமை முடிந்ததாக கொள்ளப்படும். B இன் இழப்பு அல்லது பொருட்களுக்கு சேதம் ஏற்படும் அபாயத்திற்கு எதிராக காப்பீட்டுத் தொகையை வாங்க S கடமைப்பட்டுள்ளது | S பணம் செலுத்தி ஏற்றுமதி அனுமதிகளைப் பெற வேண்டும் ஆனால் மூன்றாம் நாடுகளின் வழியாகப் போக்குவரத்துக்கான இறக்குமதி அனுமதிகள் அல்லது அனுமதிகளைப் பெற வேண்டிய கட்டாயம் இல்லை.<br><br>பரிமாற்றம் மற்றும்/அல்லது இறக்குமதி அனுமதிகளைப் பெறுவதற்கு ஆவணங்கள் மற்றும்/அல்லது தகவல்களைப் பெறுவதற்கு B இன் செலவில் S Bக்கு உதவ வேண்டும். |



# பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்தல்

## கட்டம் 8: ஒத்திசைவான முறைமை குறியீடுகள் மற்றும் தயாரிப்பு வகைப்பாடு

பிரித்தானியாவுக்கு இறக்குமதி செய்வதற்கு, ஒவ்வொரு தயாரிப்புக்கும்  ஐக்கிய இராச்சிய பண்ட குறியீடு (UKCC) அமைப்பினால் வழங்கப்படும் 10 இலக்க ஒத்திசைந்த முறைமை (HS) குறியீடு உள்ளது. ஏற்றுமதியாளர்கள் சரியான UKCC தயாரிப்புக் குறியீட்டை அடையாளம் காண வேண்டும். HS குறியீடு மற்றும் UKCC வகைப்பாடு பற்றிய ஒரு மேலோட்டத்தைப் பெற, அட்டவணை A3, இணைப்பு I  இல் வழங்கப்பட்டுள்ள விரிவான உதாரணத்தைப் பார்க்கவும்.

இருப்பினும், உற்பத்தியின் சிக்கலான தன்மை அதிகரிக்கும் போது, தயாரிப்பு வகைப்பாடு ஏற்றுமதியாளர்களுக்கு கடினமான நடைமுறையாக மாறும். புதிய கறுவாவை (நொறுக்கவோ அல்லது அரைக்கவோ படாத) எவ்வாறு விவரிப்பது என்பதைப் புரிந்து கொள்ளவும், ஏற்புடைய தயாரிப்புக் குறியீட்டைத் தீர்மானிக்கவும் பெட்டி 5 ஐப் பார்க்கவும். இந்தக் கைநூலில் உள்ள தயாரிப்புகளுக்கு ஏற்படைய UKCCகள் பற்றிய ஒரு மேலோட்டமான பார்வைக்கு அட்டவணை A4, இணைப்பு I ஐ பார்க்கவும்

**விரைவான உதவிக்குறிப்பு**

ஏற்றுமதியாளர்கள் ஐக்கிய இராச்சிய வருவாய் மற்றும் சுங்கத்தால் வழங்கப்படும் கட்டண அறிவிப்புகளை சரிபார்க்கலாம். இவற்றில் சில தயாரிப்புகளை எவ்வாறு வகைப்படுத்துவது என்பது குறித்த குறிப்பான தகவல்கள் உள்ளன. உதாரணமாக,  2022 ஆம் ஆண்டின் கட்டண அறிவிப்பு 26  சரியான விளக்கத்துடன் உலரவைக்கப்பட்ட தயாரிப்புகளின் வெப்ப பதனிடலுக்கான (காய்கறிகள்) UKCC குறியீட்டைக் குறிப்பிடுகிறது. .

### பெட்டி 5: தயாரிப்பு வகைப்பாட்டின் உதாரணம்

**புதிய கறுவாவுக்கான (நொறுக்கவோ அல்லது அரைக்கவோ படாத) தயாரிப்பு வகைப்பாடு**

கறுவா ஒரு வாசனைத் திறவியமாகும். UKCC இல், இது ‘ கோப்பி, தேயிலை, மேட் மற்றும் வாசனைத்திறவிய பொருட்கள்’ என்ற அத்தியாயத்தின் கீழ் வருகிறது. சம்பந்தப்பட்ட தயாரிப்பு புதிய கறுவா என்பதால், அது நொறுக்கப்படவோ அல்லது அரைக்கப்படவோ இல்லை. UKCC வழிகாட்டியைப் பார்த்த பின்னர், அதன் குறியீட்டை பின்வருவனவற்றின் கீழ் உள்ளதா என தீர்மானிக்க முடியும்.

| தயாரிப்பு | விபரம் | சாத்தியமான குறியீடு |
|---|---|---|
| **புதிய கறுவா** | கறுவா மற்றும் கறுவா பூ<br>• நொறுக்கப்படவோ அல்லது அரைக்கப்படவோ இல்லை<br>– கறுவா (Cinnamomum zeylanicum blume) | 0906.1100.00 |

தயாரிப்பு விளக்கத்தைத் தயாரிக்க, இந்த கைநூலின் அட்டவணை யு3 இணைப்பு ஐ  இல் வழங்கப்பட்டுள்ள தயாரிப்பாளர்கள் தங்கள் தயாரிப்பை விவரிக்க உதவும் கேள்விகளுடன் தயாரிப்பு விபர அமைவுருவைப் பார்க்கவும்

## கட்டம் 9: உணவுப்பொருட்களுக்கான சுகாதார சான்றிதழ்

தயாரிப்பானது மனித நுகர்வுக்கு ஏற்றது என்பதை உறுதிப்படுத்துவது ஏற்றுமதியாளரின் பொறுப்பாகும், இதற்காக ஏற்றுமதியாளர் இலங்கையில் உள்ள அதிகாரத் தரப்புகளால் தேவைப்படுத்தப்படும் சுகாதார அல்லது ஏற்றுமதி சான்றிதழ்களை வழங்க வேண்டும். வாசனைத் திறவியங்கள் மற்றும் சுவையூட்டுப் பொருட்கள், தேங்காய் மற்றும் தேங்காய் சார்ந்த தயாரிப்புகள், தேயிலை, பதப்படுத்தப்பட்ட அல்லது அரை பதப்படுத்தப்பட்ட உணவுகள் போன்ற உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்ய, குறித்த உணவுப் பொருட்கள் மனித நுகர்வுக்கு ஏற்றவை என்பதை உறுதிப்படுத்தி சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவில் இருந்து ஒரு சுகாதார/ ஏற்றுமதிச் சான்றிதழைப் பெற  இணையவழியாக விண்ணப்பிக்கவும். விண்ணப்பத்தை சமர்ப்பிக்க தேவையான ஆவணங்களைக் இங்கே காணலாம். இந்த சான்றிதழ் இல்லாத ஏற்றுமதிகள் இறக்குமதி நிராகரிப்புகளைச் சந்திக்க நேரிடும்

## கட்டம் 10: தாவர சுகாதார சான்றிதழ்கள்

இலங்கையில், தாவர சுகாதார சான்றிதழ்கள் விவசாயத் திணைக்களத்தின் தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவை (NPQS) மூலம் வழங்கப்படுகின்றன. இ-பைட்டோ முறைமையில் (e-phyto system) பதிவு செய்யுங்கள். ஏற்றுமதியாளர் பதிவின் பின்னர், NPQS இலிருந்து ஒரு தாவர சுகாதார சான்றிதழைக் கோருவதுடன், சரக்குகளை ஆய்வு செய்வதற்கான ஒரு திகதியை அமைக்கவும். உற்பத்தி வளாகம், சரக்கு மற்றும் மாதிரிகள் கண்காணிப்பு ஆலை தனிமைப்படுத்தல் அதிகாரிகளால் மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்துத் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்தவுடன், NPQS ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்து, தாவர சுகாதார சான்றிதழை வழங்கும். மேலதிக விபரங்கள் இங்கே கிடைக்கும்.


© Shutterstock.com



## கட்டம் 11: ஏற்றுமதி அனுமதிகள்

பொறுப்பான அதிகாரியிடமிருந்து பாதுகாப்பான தயாரிப்பு-குறிப்பிட்ட ஏற்றுமதி அனுமதிகள், உரிமங்கள் அல்லது சான்றிதழ்கள். தேயிலை, தேங்காய் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் போன்ற பல்வேறு தயாரிப்புகளுக்கு குறிப்பிட்ட உரிமங்களும் சான்றிதழ்களும் தேவை - அவை ஏற்றுமதி செய்யப்படுவதற்கு முன்பு. வெவ்வேறு தயாரிப்பு வகைகளுக்கான ஏற்றுமதிக்குத் தேவையான தயாரிப்பு சார்ந்த அனுமதிகள் மற்றும் சான்றிதழ்கள் பற்றிய ஒருங்கிணைந்த தகவல்களை இணைப்பு |  இல் காணலாம்.

**விரைவான உதவிக்குறிப்பு**

தயாரிப்பு சார்ந்த ஏற்றுமதி அனுமதிகள், உரிமங்கள் அல்லது சான்றிதழ்கள் பல திணைக்களங்களில் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டாலும், அவை ஏற்றுமதி அனுமதியின் அதே நோக்கத்தையே வழங்குகின்றன என்பதை ஏற்றுமதியாளர்கள் கவனிக்க வேண்டும். இணக்கத்தை உறுதிசெய்ய, ஏற்றுமதியாளர்கள் இந்த வழிகாட்டியை பயன்படுத்தி தங்கள் தயாரிப்பு எந்த வகைக்குள் வருகிறது என்பதையும், தங்கள் ஏற்றுமதிக்கு தேவையான சான்றிதழ்களையும் பார்க்க வேண்டும்.

### பெட்டி 6: உற்பத்தி நாடு பற்றிய (COO) சான்றிதழ்

வாசனைத் திறவியங்களின் ஏற்றுமதிக்கு, வர்த்தகத் திணைக்களம் (DoC) உற்பத்தி நாடு பற்றிய (COO) சான்றிதழை வழங்குகிறது. வர்த்தகத் திணைக்களத்திற்கு இணைய வழியாக விண்ணப்பிக்கவும், விண்ணப்பத்தை பூர்த்தி செய்து, வணிகப் பதிவு, வரி அடையாள இலக்கம் (TIN),  வெற் (VAT) சான்றிதழ் போன்ற படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களைச் சமர்ப்பிக்கவும். இந்த ஆவணங்களைச் சமர்ப்பித்த பின்னர், ஏற்புடைய பதிவுக் கட்டணத்தைச் செலுத்தி, உற்பத்தி நாடு (COO) பற்றிய சான்றிதழைப் பெறவும். விண்ணப்ப செயன்முறை குறித்த விரிவான வழிகாட்டுதல்கள்  இங்கே கிடைக்கின்றன.  முன்னுரிமை உற்பத்தி நாடு பற்றிய (COO) சான்றிதழ்கள் வர்த்தக திணைக்களத்தினால் மட்டுமே வழங்கப்படுகின்றன என்பதை ஏற்றுமதியாளர்கள் கவனத்திற்கொள்ள  வேண்டும். ஏற்றுமதியாளர்கள் குறைந்த கட்டணங்களைக் கோருவதற்கு முன்னுரிமை உற்பத்தி நாடு (COO) சான்றிதழ்களைப் பயன்படுத்தலாம். ஐக்கிய இராச்சியத்தின் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வர்த்தகத் திட்டத்தின் (DCTS) பயன்களைப் பெற, ஏற்றுமதியாளர்கள் வர்த்தக திணைக்களத்தில் இருந்து உற்பத்தி நாடு (COO) சான்றிதழைப் பெற வேண்டும். ஒரு பொதுவான உற்பத்தி நாடு (COO) சான்றிதழை  இலங்கை வரத்த்த சங்கம் போன்ற அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளிடமிருந்து பெறலாம்.

மேலே உள்ள படித்தரத்துடன் இணங்குவது கட்டாயமில்லை என்பதை ஏற்றுமதியாளர்கள் கவனத்திற்கொள்வதோடு, மாற்றீடாக, ஐக்கிய இராச்சியத்தின் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வர்த்தகத் திட்டத்தின் (DCTS) பயன்களைப் பெறுவதற்கு ஏற்றுமதியாளர்கள் தாங்களே பொருட்களின்  மூலத்திற்கான ஆதாரத்தை சமர்ப்பிக்கலாம். ஐக்கிய இராச்சியத்தின் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வர்த்தகத் திட்டத்திற்கான (DCTS) ஒரு மூல பிரகடனத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் இந்த   வழிகாட்டுதலைப்பார்க்கவும். கறுவா தவிர்ந்த அனைத்து வாசனைப் பொருட்களையும் ஏற்றுமதி செய்வதற்கான நடைமுறை பற்றிய விரிவான தகவலுக்கு, இந்த  கட்டம் கட்டமான வழிகாட்டியைப் பார்க்கவும்.

## கட்டம் 12: ஏற்றுமதி நிதி

ஏற்றுமதி பரிவர்த்தனைகளுக்கு பணப்பாய்வு மிகவும் முக்கியமானது, குறிப்பாக தயாரிப்பாளர்கள் / ஏற்றுமதியாளர்கள் கொள்வனவாளரிடமிருந்து உடனடியாக பணம் பெற மாட்டார்கள். ஒரு ஏற்றுமதி பரிவர்த்தனையின் முழு காலத்திற்கும் போதுமான திறவத்தன்மை அல்லது பணப்பாய்வை உறுதிப்படுத்த, இலங்கை ஏற்றுமதியாளர்கள் இரண்டு வகையான ஏற்றுமதி நிதியிலிருந்து பயனடையலாம்:

- ஏற்றுமதிக்கு முந்திய நிதி
- ஏற்றுமதிக்குப் பிந்திய நிதி.

கடன்களை வழுங்க ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB) உதவுகிறது. இதற்குத் தகுதிபெற, ஏற்றுமதி கொள்வனவு கட்டளைகள், ஏற்றுமதி கொள்வனவு கட்டளைகளை வெற்றிகரமாகச் செயற்படுத்த நிபுணத்துவம் மற்றும் உட்கட்டமைப்பு மற்றும் நிறுவனத்தின் பணிப்பாளர்களில் ஒருவரின் தனிப்பட்ட உத்தரவாதம் ஆகியவை உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். Refer to this link for more information.

### விரைவான உதவிக்குறிப்பு: உங்கள் ஏற்றுமதி நிதித் தெரிவுகளை அறிந்து கொள்ளுங்கள்

வணிக வங்கிகள் ஏற்றுமதியாளர்களுக்கு நிதியளிப்பு தெரிவுகளை வழங்குகின்றன. ஏற்றுமதிக்கு முந்தைய மற்றும் பிந்தைய பல்வேறு நிதி மாற்று வழிகளை ஆராய்ந்து, உங்கள் நிறுவனத்திற்கு மிகவும் பொருத்தமான நிதியுதவி முறையைத் தீர்மானிக்க, உங்கள் வங்கியின் கணக்கு முகாமையாளருடன் கலந்தாலோசிக்கவும். வட்டி விகிதங்கள், கடன் தகுதிக்கான இணைத் தேவைகள் மற்றும் திருப்பிச் செலுத்தும் நிபந்தனைகள் பற்றி கேட்டறிய மறந்துவிடாதீர்கள்.

### விரைவான உதவிக்குறிப்பு: உலகளாவிய வர்த்தக உதவி கருமபீடத்தைப் பார்க்கவும்

ஒரு குறிப்பிட்ட தயாரிப்புக்கான தேவையைப் புரிந்து கொள்ள சந்தை ஆராய்ச்சியை மேற்கொள்ளவும். உலகளாவிய வர்த்தக உதவி கருமபீடம் (Global Trade Helpdesk) என்பது, உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் இறக்குமதி சந்தையில் ஒரு தயாரிப்பின் ஏற்றுமதி வாய்ப்பு போன்ற முக்கிய சந்தைத் தகவலைக் கண்டறிந்து புரிந்துகொள்வதற்கும், சரியான கட்டண விகிதங்கள், இலத்திரனியல்-வர்த்தக (e-commerce) சந்தைகள், வர்த்தக நிதி வழங்குநர்கள் மற்றும் ஏனைய சாத்தியமான பங்குதாரர்களைக் கண்டறியவும் உதவும் ஒரு கருவியாகும். இது டிஜிட்டல் கட்டணத் தெரிவுகள் மற்றும் புலமைச்சொத்து உரிமைகள் பதிவுக்கான ஏற்புடைய புலமைச் சொத்துரிமை அலுவலகங்களின் விவரங்களையும் வழங்குகிறது.



# ஐக்கிய இராச்சிய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வர்த்தகத் திட்டம்

ஐக்கிய இராச்சிய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வர்த்தகத் திட்டத்தின் கீழ், இலங்கை ஒரு 'மேம்படுத்தப்பட்ட முன்னுரிமை நாடாகும், அதாவது இலங்கை ஏற்றுமதியாளர்கள் பல தயாரிப்பு நிரல்களில் பூஜ்ஜியம் அல்லது குறைக்கப்பட்ட வரி விகிதங்களில் இருந்து பயனடையலாம். ஏற்றுமதியாளர்கள் இந்தப் பயனைப் பெறுவதற்கு 4 படித்தரங்களை DCTS வழிகாட்டி வழங்குகிறது.

### படம் 1: ஐக்கிய இராச்சிய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வர்த்தகத் திட்டம் பற்றிய கண்ணோட்டம்



## ஏற்புடைய கட்டணங்கள்

உங்கள் நாட்டின் அடிப்படையில் உங்கள் தயாரிப்புக்கு ஏற்புடைய கட்டணத்தை தீர்மானிப்பதே ஆரம்ப கட்டமாகும். இதற்கு, ஏற்றுமதியாளர்கள் முதலில் தங்கள் தயாரிப்பின் HS குறியீட்டை அடையாளம் காண வேண்டும். 'கட்டம் 8 ஐப் பார்க்கவும்: உங்கள் தயாரிப்பின் HS குறியீட்டைக் கண்டறிவதற்கான ஒத்திசைவான கணினி குறியீடு மற்றும் தயாரிப்பு வகைப்பாடு மேலே கலந்துரையாடப்பட்டது . ஐக்கிய இராச்சிய ஒருங்கிணைந்த இணையவழி கட்டணக் கருவி யில் ஏற்றுமதியாளர்கள் விரைவான தேடலை மேற்கொள்ளலாம். ஏற்றுமதியாளர்கள் தங்கள் நாட்டிற்கு ஏற்புடைய கட்டண விகிதத்தைக் கண்டறிய வேண்டும். இதை DCTS வாய்ப்பு காட்சிப்படுத்தல் கருவி (DCTS opportunity visualization tool) மூலம் செய்யலாம். இந்தக் கருவி உங்கள் நாட்டைத் தேர்ந்தெடுக்கவும், உங்கள் தயாரிப்பைத் தேடவும், தொடர்புடைய கட்டணங்கள் மற்றும் பிற வர்த்தகம் தொடர்பான தகவல்களைக் கண்டறியவும் உங்களை அனுமதிக்கிறது.

## உற்பத்தி இடம் தொடர்பான விதிகள்

ஒரு நாட்டிலிருந்து "உற்பத்தி இடம்" என்று தகுதி பெறும் மற்றும் முன்னுரிமை கட்டணங்களுக்கு தகுதியான ஏற்றுமதிகள் எவை என்பதை தீர்மானிக்க, உற்பத்தி இடம் தொடர்பான விதிகள் (ROO) பயன்படுத்தப்படுகின்றன. தயாரிப்பாளர்கள/ஏற்றுமதியாளர்கள் வேறு நாடுகளில் இருந்து மூலப்பொருட்களை எந்த அளவிற்கு கொள்வனவு செய்யலாம் மற்றும் முன்னுரிமை கட்டண விகிதங்களில் இருந்து பயனடைவதற்காக, தயாரிப்பு 'இலங்கை' உற்பத்தி இடம் என்று உரிமை கோரலாம் என்பதை உற்பத்தி இடம் தொடர்பான விதிகள் (Rules of origin) குறிப்பிடுகின்றன. உதாரணமாக, இந்தியாவில் இருந்து மிளகாயைப் பயன்படுத்தி இலங்கையில் தயாரிக்கப்படும் காரமான தக்காளி சோஸ், தயாரிப்பு சார்ந்த விதிகள் மற்றும் குறைந்தபட்ச செயலாக்க விதிகள் பூர்த்தி செய்யப்பட்டால், இலங்கையிலிருந்து உற்பத்தி செய்யப்படுருகிறது. ஏற்றுமதியாளர்கள், இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் பெறுமதி, விலை மற்றும் தயாரிப்பு செயன்முறைகள் பற்றிய ஆவண ஆதாரத்தை வைத்திருக்க வேண்டும். பொருட்களின் உற்பத்தி இடத்தைத் தீர்மானிப்பதற்கான அளவுகோல்கள் பற்றிய மேலும் தகவலுக்கு உற்பத்தி இடம் தொடர்பான விதிகள், இணைப்பு I ஐப் பார்க்கவும்.






## தரநிலைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள்

ஐக்கிய இராச்சியத்தில் பொருட்களை விற்க, ஏற்றுமதியாளர்கள் உற்பத்தி, பொதியிடல் மற்றும் சுகாதார இணக்க தரநிலைகள் போன்றவற்றுக்கு இணங்க வேண்டும். இந்த கைநூலின் அத்தியாயங்கள் 2 மற்றும் 3, இந்த கைநூலில் உள்ள தயாரிப்புகளை ஏற்றுமதி செய்வதற்கான ஏற்புடைய தரநிலைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய விரிவான கண்ணோட்டத்தை வழங்குகிறது. தரநிலைகள் மற்றும் ஒழுங்குமுறை இறக்குமதி தேவைகள் பற்றிய DCTS வழிகாட்டி அனைத்து தேவைப்பாடுகள் பற்றிய ஒரு பயனுள்ள கண்ணோட்டத்தை வழங்குகிறது.

**விரைவான உதவிக்குறிப்பு: உங்கள் தயாரிப்பின் ஏற்றுமதித் தகுதியைச் சரிபார்க்கவும்**

இந்த கைநூலில் உள்ளடக்கப்பட்டுள்ள தயாரிப்புகள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு பிரித்தானியாவுக்கு இறக்குமதி செய்யப்படலாம் என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், அவர்கள் ஒரே மாதிரியான தயாரிப்புக் குறியீடுகளுக்குள் வரக்கூடிய ஒத்த மற்றும் புதுமையான தயாரிப்புகளுக்கான தகுதி குறித்து அவர்களது வர்த்தக சங்கம் அல்லது தகுதி தொடர்பான சங்கத்துடன் பேசுவது பெரிதும் பரிந்துரைக்கப்படுகிறது. ஏற்றுமதியாளர்கள் இலங்கையின் ஏற்றுமதி கொள்கையுடன் நன்கு பரீட்சயமாக இருக்க வேண்டும்.

## DCTS இன் கீழ் விருப்பத்தேர்வுகளைக் கோருதல்

DCTS இன் கீழ் விருப்பத் தேர்வுகளை கோர, இலங்கை ஏற்றுமதியாளர்கள் தொடர்புடைய உற்பத்தி இட சான்று மற்றும் துணை ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். உற்பத்தி இடத்தின் சான்றுக்கு, ஏற்றுமதியாளர்கள் மூல அறிவிப்பு அல்லது படிவம் A ஐ வழங்கலாம். ROO பற்றிய மேலதிக வழிகாட்டுதல் இங்கே கிடைக்கிறது. இதைத் தவிர, ஏற்றுமதியாளர்கள் பின்வரும் துணைச் சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும்:

- உற்பத்தி பதிவுகள்: ஏற்றுமதியாளர்கள் மூன்று ஆண்டுகளுக்கு உற்பத்தி பதிவுகளை வைத்திருக்க வேண்டும்
- விலைப்பட்டியல்கள்
- கணக்கியல் விவரங்கள்
- வநியோகஸ்தர்களின் பிரகடனங்கள்

மேலும் தகவலுக்கு, இந்த கைநூலின் இணைப்பு IV ஐப் பார்க்கவும்.




# 02 தயாரிப்பு மற்றும் உற்பத்தி தேவைப்பாடுகள்

வணிகப் பதிவினைத் தொடர்ந்து, பிரித்தானியாவுக்கு வெற்றிகரமாக ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான அனைத்து தயாரிப்புத் தரநிலைகள் மற்றும் தயாரிப்பு விவரக்குறிப்புகளைப் பூர்த்தி செய்வது அடுத்த கட்டமாகும். தயாரிப்பாளர்கள் இரண்டு தேவைப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும்.

முதலாவது பிரித்தானிய சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட கட்டாயத் தேவைப்பாடுகளை உள்ளடக்கியது, அவை இந்த அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டுள்ளன. இரண்டாவது, தன்னார்வத் தேவைப்பாடுகளைக் கொண்டுள்ளது, அவை சட்டப்பூர்வமாகத் தேவையில்லை என்றாலும், இந்த கைநூலின் அத்தியாயம் 3 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி, கொள்வனவாளர்கள் மற்றும் இறுதிப் பயனர்களால் அடிக்கடி கோரப்படுகின்றன.

## பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு ஏற்புடைய தரநிலைகள்

பிரித்தானியாவுக்கு விவசாய உணவுத் துறையில் பொருட்களை வெற்றிகரமாக ஏற்றுமதி செய்ய, ஏற்றுமதியாளர்கள் பின்வரும் தரநிலைகளுக்கு இணங்க வேண்டும்.

### அடையாளக் குறியிடல் தரநிலைகள்

இவை ஏற்றுமதியாளர்கள் தங்கள் தயாரிப்புகளை பிரித்தானியாவுக்கு விற்பனைசெய்வதற்கு இணங்க வேண்டிய அடையாளக் குறியிடல், பொதியிடல், கலவை மற்றும் தயாரிப்புத் தகவல் பற்றிய விரிவான தரநிலைகள் ஆகும். பொதுவாக, உணவு அடையாள குறியிடல்கள் பின்வருவனவற்றைக் கொண்டிருக்க வேண்டும்:

- உணவின் பெயர்
- “இவ்வளவு காலத்திற்கு முன் சிறந்தது” (‘Best before’) அல்லது “இவ்வளவு காலத்திற்குள் பயன்படுத்தவும்” (‘use by’) திகதி
- நிகர அளவு
- உள்ளடக்க கூறுகள் பட்டியல் (ஒவ்வாமை உட்பட)
- உற்பத்தி நாடு
- எச்சரிக்கைகள்
- களஞ்சியப்படுத்தல் நிபந்தனைகள்
- தொகுதி எண்
- பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்
- இறக்குமதியாளரின் பெயர் மற்றும் முகவரி.

பிரித்தானியாவில் உள்ள உணவு கலவை தரநிலைகள், ஏற்றுமதியாளர்கள் தங்கள் தயாரிப்புகளை நேர்மையாக உணவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பெயருடன் பெயரிட வேண்டும் என்பதை தேவைப்படுத்துகிறது. இந்த தரநிலைகள் உணவு ஒரு குறிப்பிட்ட தரத்தில் உள்ளது என்ற நுகர்வோரின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதையும், இந்த உணவுப் பொருட்கள் குறைந்த தரமான மாற்றீடுகளால் பதிலீடுசெய்யப்படும் அபாயத்தைத் தவிர்க்கின்றன என்பதையும் உறுதி செய்கிறது. பிரித்தானிய எல்லையில் இறக்குமதி நிராகரிப்புகளைத் தவிர்க்க, ஏற்றுமதியாளர்கள், அனுமதிக்கப்பட்ட அளவு பூச்சிக்கொல்லிகள் மற்றும் இரசாயன மாசுபடுத்திகள், துல்லியமான தகவல்களைக் காட்சிப்படுத்துதல், “ஒதுக்கப்பட்ட விளக்கங்களுக்கு“ அடையாள குறியிடல் தேவைப்பாடுகளைப் பின்பற்றுதல் போன்ற உணவுக் கலவை தரங்களைச் சரிபார்த்து பூர்த்தி செய்ய வேண்டும்.

### விரைவான உதவிக்குறிப்பு: பூச்சிக்கொல்லிகள் மற்றும் மாசுபடுத்திகளின் அனுமதிக்கப்பட்ட அளவை சரிபார்க்கவும்

உற்பத்தியாளர்கள் பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு முன்னர் உணவுப் பொருட்களில் அனுமதிக்கப்பட்ட பூச்சிக் கொல்லிகள் மற்றும் மாசுபடுத்திகளின் அனுமதிக்கப்பட்ட அளவை சரிபார்க்க வேண்டும். பூச்சிக்கொல்லிகள் என்பது பயிர்களை பயிரிடுதல் மற்றும் களஞ்சியப்படுத்தலின் போது பூச்சிகளைக் கொல்ல அல்லது கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படும் இரசாயன அல்லது உயிரியல் பொருட்கள் ஆகும். பிரித்தானியாவில் அவை "தாவர பாதுகாப்பு பொருட்கள்" என்றும் குறிப்பிடப்படுகின்றன. பூச்சிக்கொல்லிகள் பிரித்தானியாவில் கடுமையாக ஒழுங்குபடுத்தப்படுகின்றன, இதனால் அவற்றின் பயன்பாடு நுகர்வோர், சூழல் மற்றும் பறவைகள், பாலூட்டிகள், மீன்கள் அல்லது மகரந்தச் சேர்க்கை செய்யும் பூச்சிகள் போன்ற இலக்காக கொள்ளப்படாத உயிரினங்களுக்கு தீங்கு விளைவிக்காது.

உணவுப் பொருட்கள் உணவில் பூச்சிக்கொல்லிகளின் அதிகபட்ச எச்ச அளவை (MRL) விட அதிகமாக இல்லை என்பதை உறுதி செய்வதற்கு ஏற்றுமதியாளர்கள் பொறுப்பானவர்கள்.. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு ஆசுடு கணிப்பானைப் பயன்படுத்தி ஏற்றுமதி தயாரிப்பில் ஆசுடு ஐக் கணக்கிடுங்கள். பிரித்தானிய ஆசுடு நியதிச்சட்ட பதிவேடு மூலம் உங்கள் தயாரிப்பின் ஆசுடு அனுமதிக்கப்பட்ட வரம்புகளுக்குள் உள்ளதா என்பதைச் சரிபார்க்கவும். தரவுத்தளங்கள் மற்றும் தொடர்புத் தகவலுக்கான இணைப்புகளைக் கொண்ட மேலதிக தகவல்களை இங்கே காணலாம்.

வணிக அங்கீகாரத்திற்காக ஏற்றுமதியாளர்கள் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நிர்வாகியிடம் பூச்சிக்கொல்லி விண்ணப்பத்தை செய்ய வேண்டும். பூச்சிக்கொல்லி விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஆவணங்கள் மற்றும் தகவல்களைப் பற்றி அறிய இந்த விரிவான வழிகாட்டியை பார்க்கவும். ஏற்றுமதி தயாரிப்பு அனுமதிக்கப்பட்ட ஆசுடு ஐ விட அதிகமாக இருந்தால், ஏற்றுமதியாளர்கள் இந்த வழிகாட்டியை பயன்படுத்தி புதிய ஆசுடு க்கு விண்ணப்பிக்கலாம்.

பிரித்தானியாவில் உள்ள துறைமுக சுகாதார அதிகாரிகளால் எல்லையில் பூச்சிக்கொல்லி சோதனை நடத்தப்படுகிறது என்பதை ஏற்றுமதியாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த படிநிலைக்கு இணங்காதிருப்பது இறக்குமதி நிராகரிப்புகளுக்கு வழிவகுக்கும். இந்த நடைமுறை மற்றும் பிரித்தானியாவுக்குள் தயாரிப்பு உள்வருவதற்கு அனுமதிக்க தேவையான நிபந்தனைகள் பற்றி மேலும் அறிய இங்கே கிளிக் செய்யவும். ஏற்றுமதியாளர்கள் தங்கள் தயாரிப்பை ஏற்றுமதி செய்வதற்கு முன், தங்கள் தயாரிப்பை பிரித்தானியாவுக்கு வெற்றிகரமாக ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான அனைத்து அங்கீகாரங்களையும் பெறுவதை உறுதிசெய்ய, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு அதிகாரியைத் உழுவையுடவ கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இலங்கையில் சுகாதாரம் மற்றும் தாவர சுகாதாரச் சான்றிதழ்களை வழங்கும் அதிகாரிகளைக் கண்டறியவும், ஆய்வக சோதனை மற்றும் மாதிரிகளை மேற்கொள்ளவும் அத்தியாயம் 1 மற்றும் இணைப்பு I ஐப் பார்க்கவும். இது குறித்த மேலதிக வழிகாட்டுதலுக்கு ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபையைத் தொடர்பு கொள்ளவும்

இரசாயனவியல் மாசுபாடுகளில், மைக்கோடாக்சின்கள் (mycotoxins), கன உலோகங்கள் (ஈயம் மற்றும் இரசம்), நிலையான சேதன மாசுபடுத்திகள் (டையாக்சின்கள்) மற்றும் அக்ரிலாமைடு (acrylamide) (பதப்படுத்தப்படும் உணவின் விளைவாக இருக்கும்) ஆகியவை அடங்கும். உணவில் உள்ள இரசாயனவியல் மாசுபாட்டின் அளவுகள் மற்றும் நுகர்வோருக்கு அவற்றின் உணவு வெளிப்பாடு பிரித்தானியாவில் ஒருங்கிணைக்கப்பட்ட ஒழுங்குமுறை (EEC) 315/93 மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது. உணவில் உள்ள இரசாயன மாசுபடுத்திகளின் ஆபத்தை முகாமைத்துவம்செய்ய ஏற்றுமதியாளர்கள் பொருத்தமான உணவு பாதுகாப்பு முகாமைத்துவ செயல்முறைகள் மற்றும் ஆபத்து பகுப்பாய்வு மற்றும் முக்கியமான கட்டுப்பாட்டு புள்ளிகளைக் கொண்டிருக்க வேண்டும். விரிவான தகவலுக்கு, பிரித்தானியாவில் உள்ள உணவு தரநிலைகள் முகவர் நிறுவனத்தின் இந்த வழிகாட்டியை பார்க்கவும்.



சில உணவுகளுக்கு உணவில் ஒரு குறிப்பிட்ட கலவை இருந்தால் மட்டுமே இதைப் பயன்படுத்த முடியும் என்ற "ஒதுக்கப்பட்ட விளக்கம்" உள்ளது. உதாரணமாக, 450 கிராம் ஏதேனும் பழங்களால் ஆன ஜாமை "ஜாம்" என்று பெயரிட முடியாது அதற்கு பதிலாக, அதை "மேலதிக ஜாம்" ('extra jam') என்று பெயரிட வேண்டும். "ஒதுக்கப்பட்ட விளக்கங்கள்" மற்றும் வேறு அடையாளக் குறியிடல் தரநிலைகள் பற்றிய மேலதிக தகவலுக்கு, இணைப்பு II ஐப் பார்க்கவும்.




## சந்தைப்படுத்தல் தரநிலைகள்

இவை தாவர வகைகள், கோழி இறைச்சி, குஞ்சு பொரிக்கும் முட்டைகள் மற்றும் குஞ்சுகள், மாட்டிறைச்சி மற்றும் கன்றிறைச்சி போன்ற குறிப்பிட்ட தயாரிப்புகளுக்கு ஏற்புடையதாகும். ஏற்புடையதாகும் பட்சத்தில், வர்த்தகர்கள் மேலும் தகவலுக்கு சந்தைப்படுத்தல் தரநிலைகள் குறித்த விரிவான வழிகாட்டியைப் பார்க்க வேண்டும்.

### பெட்டி 7: மூலிகைகள் மற்றும் வாசனைத் திரவியங்களுக்கான தரநிலைகள்

பிரித்தானிய சந்தையில் மூலிகைகள் மற்றும் வாசனைத் திரவியங்களை விற்பனைசெய்வதற்கு, ஏற்றுமதியாளர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் தேவைப்பாடுகளுக்கு இணங்க வேண்டும். மூலிகைகள் மற்றும் வாசனைத்திரவியங்களின் நம்பகத்தன்மை மற்றும் உலர்ந்த மூலிகைகள் மற்றும் வாசனைத் திரவியங்களுக்கான ஒவ்வாமை ஆபத்து மதிப்பீடு குறித்த தரநிலைகள் பற்றி அறிய இங்கே கிளிக் செய்யவும்.

சில மூலிகைகள் மற்றும் வாசனைத்திரவியங்களில் நிறங்கள், சுவையூட்டிகள் அல்லது இனிப்பூட்டிகள் இருக்கலாம். இவை இலங்கையில் உணவு அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட்டாலும், அவற்றில் சில பிரித்தானியாவில் அங்கீகரிக்கப்படாமல் போகலாம். இந்த விதிமுறைகளைப் பற்றி அறிய, இந்த விசாரணைப் படிவத்தை பயன்படுத்தி உணவு தரநிலைகள் முகவர் நிறுவனத்தின் உணவு சேர்க்கைகள் குழுவைத் தொடர்பு கொள்ளவும்.

மூலிகைகள் மற்றும் வாசனைத்திரவியங்களுக்கு ஏற்புடைய பூச்சிக்கொல்லிகள், அடையாளக் குறியிடல், பொதியிடல் தேவைப்பாடுகள் போன்றவற்றின் விரிவான தகவலுக்கு, இங்கே கிளிக் செய்யவும்.

### விரைவான உதவிக்குறிப்பு: மூலிகைகள் மற்றும் மூலிகைத் தயாரிப்புகளுக்கான சந்தைப்படுத்தல் தரநிலைகள்

மூலிகைகள், மூலிகைத் தயாரிப்புகள், மூலிகை தேயிலை மற்றும் வாசனைத்திரவியங்களை ஏற்றுமதி செய்யும் உற்பத்தியாளர்கள் தாவர வகைகளுக்கான சந்தைப்படுத்தல் தரநிலைகளைக் குறிப்பிடலாம். பிரித்தானியாவில் தாவர வகைகளின் மீதான புலமைச்சொத்துரிமைகள் தாவர வளர்ப்பாளர்களின் உரிமைகள் என்று அழைக்கப்படுகின்றன. விலங்கு மற்றும் தாவர சுகாதார முகவர் நிறுவனம் ஐக்கிய இராச்சியத்திற்கான உரிமைகளை வழங்குகிறது.

பிரித்தானியாவின் தேசிய பட்டியல்களில் ஒரு தாவர வகையைச் சேர்ப்பது அதை சந்தைப்படுத்த உங்களை அனுமதிக்கிறது.இது தாவர வளர்ப்பாளர்களின் உரிமைகளிலிருந்து வேறுபட்ட ஒரு வித்தியாசமான விண்ணப்ப செயன்முறையைக் கொண்டுள்ளது. முதலில், தாவர வகை பதிவு செய்யப்பட வேண்டுமா என்பதை இங்கே சரிபார்க்கவும். அங்கீகரிக்கப்பட்ட தாவர வகைகளின் பட்டியல் விசேட பதிப்பில் வெளியிடப்பட்டுள்ளது. பின்னர் பிரித்தானியாவின் தேசிய பட்டியலில் புதிய தாவர வகையைச் சேர்க்க இந்த வழிகாட்டியை பார்க்கவும். விவசாய மற்றும் காய்கறி வகைகளுக்கு ஒரே நேரத்தில் தாவர வளர்ப்பாளர் உரிமைகள் மற்றும் தேசிய பட்டியலுக்கு உற்பத்தியாளர்கள் விண்ணப்பிக்கலாம். மேலும் தகவலுக்கு pvs.helpdesk@apha.gov.uk வழியாக உதவி மையத்தை உற்பத்தியாளர்கள் அணுக பரிந்துரைக்கப்படுகிறது.

# இறக்குமதி தேவைப்பாடுகள்

சில தயாரிப்புகள், பிரித்தானியாவில் அத்தயாரிப்பு இறக்குமதி செய்யப்படுவதற்கு முன்பு வணிகங்கள் உரிமங்கள் மற்றும் சான்றிதழ்களைப் பெற வேண்டிய விசேட விதிகளுக்கு உட்பட்டவை. ஒரு நாடு அதிக ஆபத்துள்ள சுகாதார மற்றும் தாவர சுகாதாரப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான சந்தை அணுகலுக்கான அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்று சட்டம் ஆணையிடுகிறது. அந்த நாடு அங்கீகாரத்தினை பெறாத வரை, ஒரு வணிகத்தால் இந்த தயாரிப்புகளை பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்ய முடியாது. இது தொடர்பான கேள்விகள் / விசாரணைகளுக்கு imported.food@food.gov.uk ஐத் தொடர்புகொள்ளவும்.

**விரைவான உதவிக்குறிப்பு**

வர்த்தக கட்டணப் பக்கத்திற்குச் செல்லவும். உங்கள் தயாரிப்பின் பண்டக் குறியீட்டைப் பயன்படுத்தி தயாரிப்புக்குத் தேவையான உரிமங்கள் மற்றும் சான்றிதழ்களின் வகைகள் பற்றிய தகவல்களைப் பெறுங்கள். எல்லையில் எந்தவொரு இறக்குமதி நிராகரிப்பையும் தவிர்க்க இது ஒரு முக்கியமான நடவடிக்கை ஆகும். புதிய ஏற்றுமதியாளர்கள் தங்கள் தயாரிப்புகளை சந்தைப்படுத்துவதற்கும் விற்பனை செய்வதற்கும் ஒரு இறக்குமதியாளர் அல்லது விநியோகஸ்தரின் வலையமைப்பைப் பயன்படுத்துவது பரிந்துரைக்கப்படுகிறது.





# இறக்குமதி கட்டுப்பாடுகள்

இறக்குமதி கட்டுப்பாடுகள் என்பது மனித மற்றும் விலங்குகளின் ஆரோக்கியத்திற்கு ஏற்படும் எந்தவொரு ஆபத்துகளிலிருந்தும் பாதுகாக்க அதிக ஆபத்துள்ள தயாரிப்புகளுக்கான கட்டுப்பாடுகள் ஆகும். இந்த நடவடிக்கைகள் நிலையான உற்பத்தி நடை முறைகளை உறுதி செய்வதற்கும், நுகர்வோர் மற்றும் பிரித்தானிய நிறுவனங்கள் இருபாலாரும் தாங்கள் கொள்வனவு செய்யும் பொருட்கள் உண்மையானவை மற்றும் விவரிக்கப்பட்டுள்ளபடி உள்ளவை என்பதை உறுதி செய்வதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய கட்டுப்பாடுகள் அபாயங்களைக் குறைத்து சந்தையில் தயாரிப்பு ஒருமைப்பாட்டைப் பேணுகின்றன. பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு முன், அனைத்து சான்றிதழ்களுடனும் இணங்குவதை உறுதிசெய்ய பின்வரும் தயாரிப்புகளின் இறக்குமதி கட்டுப்பாடுகளைச் சரிபார்க்கவும்.

- **சேதன உற்பத்திப் பொருட்கள்:** பிரித்தானியாவில் சேதன உற்த்திப் பொருட்களை விற்க, ஏற்றுமதியாளரின் தயாரிப்பு மற்றும் வணிகம் அங்கீகரிக்கப்பட்ட பிரித்தானிய கட்டுப்பாட்டு அமைப்பால் சேதனச் சான்றளிக்கப்பட வேண்டும். அதன் பின்னர், இறக்குமதியாளர் கண்காணிப்புச் சான்றிதழைப் பெற வேண்டும். இந்தச் சான்றிதழை எப்படி, எப்போது பெறுவது என்பது குறித்த தகவல்களை, அங்கீகரிக்கப்பட்ட பிரித்தானிய கட்டுப்பாட்டு அமைப்புகளைத் தொடர்பு கொள்வதன் மூலம் பெறலாம். பிரித்தானியாவுக்கு சேதன உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வது பற்றிய மேலதிக தகவலுக்கு, இணைப்பு II ஐப் பார்க்கவும்.

- **தாவரங்கள் மற்றும் விதைகள்:** பிரித்தானியாவில் பூச்சிகள் மற்றும் நோய்கள் தாவர ஆரோக்கியத்தையும் பயிர்களையும் சேதப்படுத்த முடியும். இந்த காரணத்திற்காக, தாவர பூச்சிகளை வழங்கும் அல்லது காவிச்செல்லக்கூடிய தாவரங்கள் அல்லது தாவரப் பொருட்கள் உள்ளே நுழைவது தடைசெய்யப்பட்டுள்ளது, ஏனையவை சில தேவைப்பாடுகளை பூர்த்தி செய்ய வேண்டும் மற்றும் தாவர சுகாதார சான்றிதழுடன் இருக்க வேண்டும். தயாரிப்பு எந்த வகையான ஆபத்து வகையைச் சேர்ந்தது என்பதைப் பொறுத்து இறக்குமதித் தேவைப்பாடுகள் தீர்மானிக்கப்படுகின்றன.

**விரைவான உதவிக்குறிப்பு: தடைசெய்யப்பட்ட பண்டங்கள் (தாவரங்கள்)**

மூலிகைகள் மற்றும் மூலிகை தேயிலைகளை ஏற்றுமதி செய்யும் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியை மேற்கொள்வதற்கு முன், சூழல், உணவு மற்றும் கிராமிய அலுவல்கள் திணைக்களத்தால் தங்கள் தயாரிப்புகள் தடைசெய்யப்பட்ட பண்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்க வேண்டும்

ஆபத்து வகை மற்றும் ஏற்புடைய இறக்குமதித் தேவைப்பாடுகளைக் கண்டறிய இந்த வழிகாட்டியை பார்க்கவும். பிரித்தானியாவில் இறக்குமதி செய்வதற்குத் தேவையான சான்றிதழ்களைப் பெற ஏற்றுமதியாளர்கள் தங்கள் தயாரிப்புகளை ஏற்றுமதி செய்வதற்கு முன் இந்தத் தேவைப்பாடுகளைச் சரிபார்க்க வேண்டும். இறக்குமதி அறிவிப்புகள் பற்றிய மேலதிக தகவலுக்கு, விலங்கு மற்றும் தாவர சுகாதார நிறுவனத்தை (இங்கிலாந்து மற்றும் வேல்ஸ்) planthealth.info@apha.gov.uk என்ற மின்னஞ்சல் முகவரியிலோ அல்லது 0300 1000 313 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளவும்

- சுகாதார மற்றும் தாவர சுகாதாரப் உற்பத்திப் பொருட்கள்: குறிப்பிட்ட எல்லைக் கட்டுப்பாட்டுப் மையங்கள் மூலம் மட்டுமே இறக்குமதி செய்யக்கூடிய சில தயாரிப்புகளில் இறக்குமதி கட்டுப்பாடுகள் / வரையறைகள் உள்ளன. பொது சுகாதாரத்தைப் பாதுகாக்க இந்தக் கட்டுப்பாடுகள் நடை முறையில் உள்ளன. தற்போது, இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்படும் குடைமிளகாய் இன மிளகுகள் (இனிப்பு அல்லது இனிப்பு அல்லாதவை) மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. பிரித்தானியாவுக்கு இறக்குமதி செய்வதற்கான சரக்குகளை அனுமதிக்க தொடர்புடைய சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களை சேகரிக்க ஏற்றுமதி செய்வதற்கு முன் விதிமுறைகளை சரிபார்க்கவும்.

# தயாரிப்பு பேண்தகுதன்மை தரநிலை

2021ஆம் ஆண்டின் சூழல் சட்டம் “வன-அபாய பொருட்கள்” (FRCs) அல்லது அத்தகைய FRCகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் தயாரிப்புகளை வணிக நடவடிக்கைகளில் பயன்படுத்த முடியாது, ஏனெனில் அவை காடழிப்புக்கு பங்களிக்கின்றன. பெட்டி 8 இல் “வன-அபாய பொருட்களை” (FRCs) பற்றி மேலும் அறிந்துகொள்ளுங்கள்.

ஆண்டுக்கு +50 மில்லியனுக்கும் அதிகமான வருவாய் கொண்ட பிரித்தானியாவுக்கு விநியோகம் செய்யும் உற்பத்தியாளர்கள் இந்தத் திட்டத்திற்கு இணங்க வேண்டும். பெட்டி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள FRC களைப் பயன்படுத்தும், 500 தொன்கள் வருடாந்த அளவைத் தாண்டாத உற்பத்தியாளர்கள், விலக்கு பெற விண்ணப்பிக்கலாம்.

## பெட்டி 8: வன–ஆபத்து பண்டம் என்றால் என்ன?

**FRC என்பது:**

- ஒரு தாவரம், விலங்கு அல்லது உயிரினத்திலிருந்து தயாரிக்கப்படும் ஒரு பொருள் மற்றும்
- ஒரு காடு வெட்டப்பட்டு அந்த பொருளை தயாரிக்க விவசாய நிலமாக மாற்றப்படுகிறது.

பிரித்தானியா ஒரு FRC திட்டத்தை அறிமுகப்படுத்தும் , அதன் கீழ் பின்வரும் தயாரிப்புகள் FRC களாக வகைப்படுத்தப்படும்:

- பால் அல்லாத கால்நடை பொருட்கள் (மாட்டிறைச்சி மற்றும் தோல்)
- கொகோ
- சோயா
- பாமாயில்.

இது ஒரு குறிகாட்டி பட்டியல் என்பதை நினைவில் கொள்ளவும். FRC விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டவுடன் மட்டுமே FRC பொருட்களின் இறுதி பட்டியல் வெளியிடப்படும்.

## பெட்டி 9: ஒரு பேண்தகு எதிர்காலத்திற்கு தயாரிப்பாளர்கள் எவ்வாறு தயாராகலாம்?

- உங்கள் விநியோகஸ்தர்களிடம் அவர்களின் மூலப்பொருட்களின் மூலங்கள் மற்றும் அவற்றை எப்படி காடுகளுக்கு ஏற்றதாக மாற்றுவது என்பதைப் பற்றி பேசுங்கள்.
- ஒவ்வொரு விநியோகஸ்தரிடமிருந்தும் கொள்வனவுகள் போன்ற முக்கிய தகவல்கள் மற்றும் வணிகப் பெயர், உரிமையாளரின் பெயர், அஞ்சல் முகவரி, வர்த்தக சின்னம், மின்னஞ்சல் மற்றும் இணைய முகவரி போன்ற ஒவ்வொரு விநியோகஸ்தரைப் பற்றிய தகவல்களும் பற்றிய பதிவுகளை பேணிவாருங்கள்.
- 2024 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அல்லது 2025 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்படவுள்ள FRC திட்டம் தொடர்பான அனைத்துச் செய்திகளிலும் உங்களைத் தொடர்ந்து இற்றைப்படுத்திக் கொள்ளுங்கள்.
- கழிவுப் பொருட்களைப் பயன்படுத்துதல் அல்லது முற்றிலும் சூழலுக்கு உகந்த பொருட்களைப் பயன்படுத்துவது போன்ற தயாரிப்பு புத்தாக்கங்களில் ஈடுபடுங்கள். இது உங்கள் தயாரிப்புக்கான தனித்துவமான விற்பனைப் புள்ளியாக மாறுவதுடன், ஒரு சிறந்த சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள உங்களை அனுமதிக்கிறது.



# அழிவடைந்து வரும் தாவரங்கள் மற்றும் விலங்குகளில் இருந்தான தயாரிப்புகள்

சில அழிந்து வரும் தாவர மற்றும் விலங்கு இனங்களில் வர்த்தகம் செய்வது அவற்றின் எண்ணிக்கையைக் குறைக்கும் திறன் கொண்டதுடன், சில சந்தர்ப்பங்களில், அவை அழிவடைவதற்கு கூட இட்டுச்செல்லக்கூடும். வன விலங்குகள் மற்றும் தாவரங்களின் அழிந்து வரும் உயிரினங்களின் சர்வதேச வர்த்தகத்திற்கான மாநாடு (CITES) என்பது ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும், இது வன விலங்குகள் மற்றும் தாவரங்களின் மாதிரிகளில் சர்வதேச வர்த்தகம் இந்த இனங்களின் உயிர்வாழ்வை அச்சுறுத்துவதில்லை என்பதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

CITES ஆல் உள்ளடக்கப்பட்ட தாவர மற்றும் விலங்கு இனங்கள், அவற்றால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட பாதுகாப்பின் அளவை அடிப்படையாகக் கொண்டு, மூன்று பிற்சேர்க்கைகளில் பட்டியலிடப்பட்டுள்ளன. இணைப்பு I இல் அழிந்து போகும் அச்சுறுத்தலுக்கு உள்ளான இனங்கள் உள்ளன. இந்த இனங்களில் வர்த்தகம் விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. இணைப்பு II இல் அழிந்து போகும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகாத இனங்கள் உள்ளன் இருப்பினும், உயிர்வாழ்வோடு பொருந்தாத பயன்பாட்டைத் தவிர்க்க அவற்றின் பயன்பாடு கட்டுப்படுத்தப்பட வேண்டும். பின் இணைப்பு III சில நாடுகளால் பாதுகாக்கப்படும் உயிரினங்களைக் கொண்டுள்ளதுடன், அவற்றில் வர்த்தகம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். ஒரு வணிகத்திற்கானது என்றால் என்ன அர்த்தம் என்பதைப் புரிந்து கொள்ள பெட்டி 10 ஐப் பார்க்கவும்.

இலங்கை மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய இரண்டும் CITES இல் கைச்சாத்திட்டுள்ளன. இதன் பொருள் இரண்டு நாடுகளும் அவற்றில் உள்ள வணிகங்களும் அதற்கு இணங்க வேண்டும். இலங்கையில், CITES ஐ அமுல்படுத்துவதற்கு வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் பொறுப்பாகும். CITES இனங்களாக பட்டியலிடப்பட்டுள்ள தாவரங்கள் அல்லது விலங்குகளை ஏற்றுமதி செய்ய விரும்பும் ஒரு ஏற்றுமதியாளர் இந்தத் திணைக்களத்திடமிருந்து CITES சான்றிதழைப் பெற வேண்டும். ஒவ்வொரு ஏற்றுமதிக்கும் CITES அனுமதி தேவை. இந்த அனுமதியைப் பற்றி மேலும் அறிய, வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தை தொடர்பு கொள்ளவும்.

## பெட்டி 10: நடைமுறையில் ஊஜவுநுளு நடைமுறைப்படுத்தலின் உதாரணம்

இலங்கையிலிருந்து வாழை ஒர்க்கிட் (Banana orchid) CITES இன் இணைப்பு II இல் பட்டியலிடப்பட்டுள்ளது. அதாவது வாழை ஒர்க்கிட்களைக் கொண்ட தயாரிப்புகளை ஏற்றுமதி செய்பவர்கள் ஏற்றுமதியை மேற்கொள்வதற்கு முன் இலங்கையில் உள்ள வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்திடமிருந்து CITES அனுமதியைப் பெற வேண்டும்

**விரைவான உதவிக்குறிப்பு: ஏற்றுமதி தயாரிப்புகளில் CITES இனங்கள் உள்ளனவா என சரிபார்க்கவும்**

CITES பிற்சேர்க்கைகளில் ஏதேனும் ஒரு விலங்கு அல்லது தாவரம் பட்டியலிடப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்க, ஏற்றுமதியாளர்கள் இந்த CITES இனங்களின் சரிபார்ப்புப் பட்டியல் ஐ வாசித்து, தேடல் பகுதியில் (search bar) தாவரம் அல்லது விலங்கின் பெயரை உள்ளிடவும். இலங்கையை இருப்பிடமாகத் தேர்ந்தெடுப்பதன் மூலம் தேடலை மேலும் மேம்படுத்தவும். மாற்றீடாக, ஏற்றுமதியாளர்கள் இனங்கள் அல்லது CITES ஆவணங்களைத் தேட Species+ ஐப் பார்வையிடலாம்.




# 03 தன்னார்வ பேண்தகுதன்மை தரநிலைகள்

தன்னார்வ நிலைத்தன்மை தரநிலைகள் (VSSகள்) என்பது தயாரிப்பை உருவாக்குவது சூழலுக்கோ அல்லது தயாரிப்பை உருவாக்கிய நபர்களுக்கோ தீங்கு விளைவிக்கவில்லை என்பதை நிரூபிக்கும் விசேட தரநிலைகள் ஆகும். இவை தன்னார்வமானவை மற்றும் நல்ல சூழல், விவசாய மற்றும் சமூக நடை முறைகளுக்கு சான்றாகும். VSS சான்றிதழ்கள் நுகர்வோருக்கு உற்பத்தியின் தரம் குறித்து உறுதியளிப்பதுடன், அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி, சில அளவுகோல்களை பூர்த்தி செய்கிறது. வணிகங்கள் VSS சான்றிதழ்களால் பயனடையலாம், ஏனெனில் அவை நுகர்வோரிடம் வணிகத்தின் நம்பகத் தன்மையை அதிகரிக்கின்றன, புதிய சந்தைகள் மற்றும் வாய்ப்புகளுக்கான அணுகலை வழங்குகின்றன, செயல்பாட்டு செலவுகளைக் குறைக்கின்றன, காலநிலை மாற்றத்திற்கு வணிகத்தின் தகவமைப்புத் திறனை அதிகரிக்கின்றன.

### விரைவான உதவிக்குறிப்பு

சூழல் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு, நிலையான பொதியிடல், தொழிலாளர் உரிமைகள், வணிக நெறிமுறைகள், உரிய சரிபார்ப்பு மற்றும் கண்டறியக்கூடிய தன்மை போன்றவற்றுக்கான VSS களில் தகவல் மற்றும் போக்குகளைக் கண்டறிய ITC தரநிலை வரைபடத்தை பயன்படுத்தவும். இந்த கருவி பயனர்கள் தாங்கள் ஏற்றுமதி செய்ய விரும்பும் தயாரிப்புகள் மற்றும் அவர்கள் அணுக விரும்பும் சந்தைகளுடன் தொடர்புடைய ஏளுளு களைப் பற்றிய தகவல்களை அடையாளம் காணவும், ஒப்பிடவும் மற்றும் பெறவும் அனுமதிக்கிறது

### பெட்டி 11: கோடெக்ஸ் அலிமென்டேரியஸ் (Codex Alimentarius) உணவுக் குறியீடு

கோடெக்ஸ் அலிமென்டேரியஸ் தரநிலைகள் என்பது சர்வதேச உணவுத் தரநிலைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைக் குறியீடுகள் ஆகும், அவை சர்வதேச உணவு வர்த்தகத்தின் பாதுகாப்பு, தரம் மற்றும் நியாயத்தன்மையினை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன. நுகர்வோர் தாங்கள் கொள்வனவு செய்யும் உணவுப் பொருட்களின் பாதுகாப்பு மற்றும் தரத்தை நம்ப முடியும் மற்றும் இறக்குமதியாளர்கள் தாங்கள் கொள்வனவு கட்டளை செய்த உணவு அவர்களின் விவரக்குறிப்புகளுக்கு ஏற்ப இருக்கும் என்று நம்பமுடியும். பிரித்தானியாவில் உள்ள உணவுத் தரநிலைகள் பொதுவாக கோடெக்ஸ் அலிமென்டேரியஸ் குறியீட்டை விட அதிகமாகவும் அதற்கு அப்பாலும் செல்கின்றன.

VSS சான்றிதழ் செயல்முறை பற்றிய குறிப்பான தகவல் மற்றும் இந்த கைநூலில் உள்ள தயாரிப்புகளுக்கான சர்வதேச அங்கீகாரம் பெற்ற VSS சான்றிதழ்களின் உதாரணங்கள் இணைப்பு III  இல் வழங்கப்பட்டுள்ளன.

### பெட்டி 12: விநியோகஸ்தர் பேண்தகுதன்மை வளங்கள்

இலங்கையில் விநியோகஸ்தர்கள் பேண்தகுதன்மை சான்றிதழ்களை வைத்திருக்கிறார்களா என்பதைச் சரிபார்க்க ITC பேண்தகுதன்மை வரைபடத்தை பயன்படுத்தவும்.  பேண்தகுதன்மை தரநிலைகள் மற்றும் சான்றிதழ்கள் பற்றி மேலும் அறிய, ITC SME வர்த்தக அகாடமியில் உள்ள பல்வேறு கற்கைகளைப் பார்க்கவும்.






## நிறுவனத்தின் குறியீடுகள்

கொள்வனவாளர்கள் உற்பத்தியாளர்-ஏற்றுமதியாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய “நிறுவனக் குறியீடுகள்“ எனப்படும் தங்கள் சொந்த உள்ளக வழிகாட்டுதல்கள் அல்லது நடத்தை விதிகளை நிறுவலாம். இந்த குறியீடுகள் தயாரிப்பின் குறைவாகத் தெரியும் பண்புக்கூறுகள் மற்றும் உற்பத்தி செயல்முறையை முன்னிலைப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. பொதுவாக, ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளின் போது உற்பத்தியாளர்-ஏற்றுமதியாளர்கள் தங்கள் நிறுவனத்தின் குறியீடுகள் அல்லது வழிகாட்டுதல்களுக்கு இணங்க வேண்டியதன் அவசியத்தை கொள்வனவாளர்கள் வலியுறுத்துவார்கள்.

**விரைவான உதவிக்குறிப்பு: தெரிவுகளை ஆராயுங்கள்**

- நிதி ஆதரவைப் பெற்று, பேண்தகுதன்மை தரநிலைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய அதைப் பயன்படுத்தவும். உதாரணமாக, இலங்கையில் பேண்தகு விவசாய முறைமை, புதிய ஏற்றுமதியாளர் அபிவிருத்தித் திட்டம் மற்றும் ஏற்றுமதி நிதி மூலம் போன்ற பல திட்டங்களை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை கொண்டுள்ளது.  நடந்துகொண்டிருக்கும் மற்றும் வரவிருக்கும் நிதி ஆதரவுத் திட்டங்கள் பற்றி மேலும் அறிய ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் நிதிப் பிரிவை தொடர்பு கொள்ளவும்.
- சில சான்றளிக்கும் அமைப்புகள் குழு சான்றிதழை அனுமதிக்கின்றன, இது செலவு குறைந்த தெரிவாக கருதப்படலாம்.
- நீங்கள் ஒரு வர்த்தகர் அல்லது சில்லறை விற்பனையாளராக இருந்தால், அந்த தயாரிப்பு சான்றிதழ் உங்கள் தரச்சின்ன பெயரில் மட்டுமே என்பதை நினைவில் கொள்ளுங்கள்

**விரைவான உதவிக்குறிப்பு: கொள்வனவாளர்களின் எதிர்பார்ப்புகளைப் புரிந்து கொள்ளுங்கள்**

விற்பனை ஒப்பந்தம் பற்றிய பேச்சுவார்த்தையின் போது VSS சான்றிதழ்களைப் பெறுதல் மற்றும் நிறுவனத்தின் நடத்தை விதிகளுக்கு இணங்குதல் ஆகியவற்றின் அடிப்படையில் கொள்வனவாளரின் எதிர்பார்ப்புகளைப் பற்றி கலந்துரையாட நினைவில் கொள்ளுங்கள். விற்பனை ஒப்பந்தத்தில் கலந்துரையாடப்பட்ட மற்றும் இணக்கம் காணப்பட்டதை தெளிவாகக் குறிப்பிடும் ஒரு விதியைச் சேர்க்கவும்.




# 04 சுங்க மற்றும் தொடர்புடைய நடைமுறைகள்

தங்கள் தயாரிப்புகள் பிரித்தானியாவுக்குள் வெற்றிகரமாக நுழைவதை உறுதிசெய்ய, ஏற்றுமதியாளர்கள் தேவையான சுங்க நடைமுறைகள் மற்றும் ஆவணங்களுடன் தங்களை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு பொதுவான வழிகாட்டுதலாக, அனைத்து ஏற்றுமதியாளர்களும் தங்கள் தயாரிப்பு குறியீட்டை சரியாக அடையாளம் கண்டு, தங்கள் உற்பத்திப் பொருட்களை துல்லியமாக மதிப்பிட்டு, DCTS ஐக் கருத்தில் கொண்டு சரிபார்க்க வேண்டும். தயாரிப்பு குறியீடுகள், DCTS மற்றும் கட்டண விகிதங்கள் பற்றிய தகவலுக்கு அத்தியாயம் 1 ஐப் பார்க்கவும்.

**விரைவான உதவிக்குறிப்பு: தீர்வு மற்றும் அனுப்பீட்டு முகவர்களை ஈடுபடுத்துங்கள்**

சுங்க நடைமுறைகள் சிக்கலானவை மற்றும் விரிவானவை. ஏற்றுமதியாளர்கள் இலங்கை சுங்கத்தில் ஏற்றுமதி சரக்குகளை தீர்வுசெய்வதை எளிதாக்கும் தீர்வு முகவர்களை அணுக வேண்டும். அவர்கள் சுங்க வெளிப்படுத்தல்கள், ஆவணங்கள் மற்றும் அனுமதி ஆகியவற்றில் உதவுகிறார்கள். இந்த செயல் முறையை நன்கு பரீட்சயமான தீர்வு முகவர்களுடன் இணையுங்கள். இதற்காக, இலங்கை சுங்கத்தில் உரிமம் பெற்ற தீர்வு முகவர்களைத் தொடர்பு கொள்ளவும். உரிமம் பெற்ற தீர்வு முகவர்களின் பட்டியலை இலங்கை சுங்க வுஜஃேஏயுவு பதிவு பிரிவில் காணலாம்.

## சுங்க வெளிப்படுத்தல்

பொருட்களை ஏற்றுமதி செய்ய, இலங்கையில் உள்ள உற்பத்தியாளர்கள் சுங்கத்தில் ஏற்றுமதி வெளிப்படுத்தலை (CusDec) தாக்கல் செய்ய வேண்டும். சுங்க வெளிப்படுத்தலை (CusDec) ASYCUDA வழியாக இலத்திரனியல் முறையில் அல்லது காகித வடிவத்தில் செய்யலாம்.

ASYCUDA or in paper format. சுங்க வெளிப்படுத்தலுக்கு (CusDec) ஒரு சுங்க நுழைவு எண் கொடுக்கப்பட்டுள்ளதுடன், அது முழு அனுமதி செயல்முறை முழுவதும் ஒரு குறிப்பாகப் பயன்படுத்தப்படுகிறது. எனவே, ஏற்றுமதியாளர்கள் சுங்க வெளிப்படுத்தலை (CusDec) தாக்கல் செய்யும்போது அனைத்து விவரங்களையும் கவனமாக நிரப்ப வேண்டும்.

# சுங்க அனுமதிக்கான ஆவணங்கள்

சுங்க அனுமதியை வெற்றிகரமாக பெற பின்வரும் ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதை உறுதி செய்யவும்.

- வணிக விலைப்பட்டியல்
- உற்பத்தி நாடு (COO) சான்றிதழ்
- ஏற்றுமதி அனுமதிகள்/ உரிமங்கள்/ சான்றுப்படுத்தல்கள் (ஏற்புடையதாயின்)
- கப்பலேற்றல் குறிப்பு
- VAT சான்றிதழ்
- TIN சான்றிதழ்
- பொதிவுப் பட்டியல் (packing list)
- விற்பனை ஒப்பந்தம்
- பில் ஒப் லேடிங் (Bill of lading) BoL
- தாவர சுகாதார சான்றிதழ் (Phytosanitary)
- சுகாதார சான்றிதழ்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பல ஆவணங்களைப் பெறுவதற்கான செயல்முறை இந்த கைநூலின் அத்தியாயம் 1 இல் வழங்கப்பட்டுள்ளது. சில துணை ஆவணங்களைப் பற்றி மேலும் அறிய, இந்த இணைப்பு IV: கைநூலைப் பார்க்கவும்.

### பெட்டி 13: நேரடி வர்த்தகர் உள்ளீடு

நேரடி வர்த்தகர் உள்ளீடு மூலம், ஏற்றுமதியாளர்கள் முழு சுங்க செயல்முறையை அல்லது வழமையான ஒழுங்குகளை தொலைவிலிருந்து தாங்களாகவோ அல்லது அவர்களின் முகவர்கள் மூலமாகவோ முடிக்கலாம். நேரடி வர்த்தகர் உள்ளீட்டை ASYCUDA மூலம் அணுகலாம். இலங்கை சுங்கத்தால் வழங்கப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதன் மூலம் ஏற்றுமதியாளர்கள் நேரடி வர்த்தகர் உள்ளீட்டு பதிவையும் செய்யலாம். இதற்காக, இலங்கை சுங்கத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவைத் தொடர்பு கொள்ளவும். தொடர்பு விவரங்கள் இங்கே கிடைக்கின்றன.






# சுங்க அனுமதி

சுங்க வெளிப்படுத்தல் செயன்முறையாக்கம் மற்றும் பொருட்களை ஆய்வு செய்த பின்னர், சுங்கம் ஏற்றுமதிக்கான சரக்கை விடுவிக்கும். பரிசோதனை விருப்பத்திற்குறியது மற்றும் இலங்கை சுங்கத்தின் தலைமை ஏற்றுமதி அதிகாரியால் அது தீர்மானிக்கப்படுகிறது. அதிகாரி சுங்க வெளிப்படுத்தல் (CusDec) இல் தேவையான முத்திரையை இடுகிறார்: ‘குழு பரிசோதனை’, ‘பரிசோதிக்கப்பட வேண்டிய சரக்கு’ அல்லது ‘சரிபார்க்கப்பட வேண்டிய முத்திரைகள்’ போன்றவை. தலைமை ஏற்றுமதி அதிகாரி எந்த பரிசோதனையும் தேவையில்லை என்று நினைத்தால், அவர்கள் சரக்குகளை பரிசோதனையிலிருந்து விலக்கு அளித்து, ‘விலக்கு அளிக்கப்பட்டது’ என்ற முத்திரையை இடுகிறார்கள். இதன் பின்னர் சரக்கு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு அனுப்புவதற்காக விடுவிக்கப்படுகிறது

### விரைவான உதவிக்குறிப்பு: சுங்க பண்டக சாலைகள்

ஏற்பாட்டியல் நோக்கங்களுக்காக, பொருட்கள் நேரடியாகவோ அல்லது ஐரோப்பிய ஒன்றியம் போன்ற பல்வேறு கப்பல் பாதைகள் மூலமாகவோ பிரித்தானிய எல்லையை அடையலாம். பொருட்கள் பிரித்தானிய எல்லையை அடைந்தவுடன், அவை வழக்கமாக சுங்க பண்டக சாலைகளில் களஞ்சியப்படுத்தப்படும். இறக்குமதியாளர்கள் அனுப்பப்பட்ட பொருட்களின் ஓட்டத்தை கட்டுப்படுத்தலாம், அவற்றை மறுசீரமைக்கலாம் மற்றும் ஏற்புடைய சுங்க வரிகள் மற்றும் ஏனைய வரிகளை தாமதப்படுத்தலாம்.

ஐரோப்பிய ஒன்றியம் வழியாக பிரித்தானியாவுக்கு பொருட்கள் அனுப்பப்பட்டால், அவை சுங்க பண்டக சாலைகளில் களஞ்சியப் படுத்தப்படும், எனவே பொருளாதார செயற்படுத்துனர்கள் பொருட்களின் மீது இறக்குமதி வரிகளை செலுத்த வேண்டியது இல்லை. சுங்கத் தீர்வைகளுக்கு உட்பட்ட பொருட்கள் (அத்தகைய தீர்வைகள் செலுத்தப்படாவிட்டால்) மற்றும் கட்டுப்பாடுகள் அல்லது சுகாதாரத் தேவைப்பாடுகளுக்கு உட்பட்ட பொருட்கள் துணை ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாவிட்டால் களஞ்சியப்படுத்த முடியாது என்பதை நினைவில் கொள்க. பிரித்தானியாவில் சுங்கத்துடன் இணைந்த பண்டக சாலைகள் (Customs bonded warehouses) எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றிய விரிவான தகவலுக்கு இந்த வழிகாட்டியை பார்க்கவும்.


© Shutterstock.com

# 05 போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல்கள்

வெற்றிகரமான ஒரு ஏற்றுமதிக்கு பொருத்தமான போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் முறைகளைத் தேர்ந்தெடுப்பது மிக முக்கியம். விற்பனை ஒப்பந்தத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள இன்கோடெர்ம்ஸ் (Incoterms) விதிகள், போக்குவரத்து முறைகளைத் தெரிவுசெய்தல், ஏற்றுமதிகளை ஒழுங்கமைத்தல், சரக்கு காப்புறுதிளைப் பெறுதல், முன்-ஏற்றுமதி சோதனைகளை நடத்துதல் மற்றும் இறுதி இலக்கை அடைவதை உறுதி செய்தல் போன்ற செயல்முறையின் பல்வேறு அம்சங்களுக்கு எந்த தரப்பினர் பொறுப்பு என்பதை தீர்மானிக்கிறது. குறிப்பாக சரக்கு தொடர்பான கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால், துல்லியமான மற்றும் வெளிப்படையான போக்குவரத்து ஆவணங்களை பேணுவது அவசியம்.

## பில் ஒப் லேடிங்

BoL என்பது சரக்கை எடுத்து செல்பவர் (carrier) (போக்குவரத்து நிறுவனம்) மற்றும் பொருட்களை அனுப்புபவர் / ஏற்றுமதியாளர் / அனுப்புபவர் இடையேயான ஒரு ஒப்பந்தமாகும். இது பொருட்களின் வகை, அளவு மற்றும் சேருமிடம் பற்றிய தகவல்களைக் கொண்டுள்ளது. இது மூன்று முக்கியமான செயற்பாடுகளை செய்கிறது:

- இது BoLஇல் விவரிக்கப்பட்டுள்ள பொருட்களின் உரிமைக்கான ஆவணமாகும்.
- இது அனுப்பப்பட்ட பொருட்களுக்கான ஒரு பற்றுச்சீட்டு
- இது சரக்கு ஏற்றுமதிக்கான விதிமுறைகளைக் கொண்டுள்ளது.

ஒரு BoL இன் உதாரணத்தைக் காண இணைப்பு V ஐ பார்க்கவும்



## விமானப் போக்குவரத்துச் சான்றிதழ்

ஒரு சரக்கு குறிப்பு, அனுப்பும் குறிப்பு அல்லது சரக்குச் சீட்டு என்றும் அழைக்கப்படும் ஒரு விமானப் போக்குவரத்துச் சான்றிதழ் (Air waybill), சரக்கை எடுத்து செல்பவர் (carrier) (விமான வழியாக எடுத்துச் செல்பவர்) மற்றும் பொருட்களை அனுப்புபவர் /சரக்கு அனுப்புனர் / ஏற்றுமதியாளர் இடையேயான ஒரு ஒப்பந்தமாகும். ஒரு விமானப் போக்குவரத்துச் சான்றிதழ் (Air waybill), சரக்கு அனுப்புதல் பற்றிய தகவல்களைக் கொண்டுள்ளதுடன், ஒரு குறிப்பு எண் மூலம் பொருட்களைக் கண்காணிக்கவும் அனுமதிக்கிறது. ஒரு BoL போலல்லாமல், ஒரு விமானப் போக்குவரத்துச் சான்றிதழ் (Air waybill ) பேரம் பேச முடியாதது.

ஒரு விமானப் போக்குவரத்துச் சான்றிதழ் (Air waybill) உதாரணத்தைக் காண இணைப்பு V ஐ பார்க்கவும்.

## காப்புறுதி

அத்தியாயம் 1 இல் விளக்கப்பட்டுள்ளபடி, Incoterms கள் காப்புறுதி போன்ற பொருட்களின் போக்குவரத்து மற்றும் தொடர்புடைய செலவுகளால் ஏற்படும் அபாயங்களை நிர்வகிப்பதற்கான பொறுப்பை தீர்மானிக்கிறது. சரக்குக் காப்புறுதி, பரிமாற்றத்தில் உள்ள பொருட்களுக்கு ஏற்படக்கூடிய சாத்தியமான இழப்புகளுக்கு எதிராக நிதிப் பாதுகாப்பை வழங்குகிறது. உதாரணமாக, ஒரு CIF ஒப்பந்தத்தில், விற்பனையாளர் தங்கள் சொந்த செலவில் சரக்குக் காப்புறுதியைப் பெறுவதற்குப் பொறுப்பானவர். சரக்குக் காப்புறுதியின் விவரங்கள் வர்த்தக விலைப்பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும்.

**விரைவான உதவிக்குறிப்பு: சரக்கு அனுப்புபவர்களைப் (freight forwarders) பயன்படுத்தவும்**

சிறிய அளவிலான ஏற்றுமதிகளைக் கொண்ட சிறிய ஏற்றுமதியாளர்கள் சரக்கு அனுப்புபவர்கள் மற்றும் உள்ளூர் போக்குவரத்து நிறுவனங்களின் சேவைகளிலிருந்து பயனடையலாம்.

**விரைவான உதவிக்குறிப்பு: இடத் தை முன்பதிவு செய்யுங்கள்**

கப்பல் சரக்கு அனுப்புபவர்கள் / ஏற்றுமதியாளர்கள் சரக்கு இடத்தை ஏற்றுமதி திகதிக்கு முன்பே முன்பதிவு செய்ய வேண்டும். கடல் மார்க்கமான சரக்குகளுக்கு, இலங்கை துறைமுக அதிகாரசபையை, தொடர்பு கொள்ளவும், விமான சரக்குகளுக்கு, விமான முகவர்களிடம் பேசவும்.



01

# இணைப்பு I ஒரு இலங்கை ஏற்றுமதியாளராக இருக்க தயாராதல்

## உற்பத்தி சார்ந்த அனுமதிகள்

### அட்டவணை A1: உற்பத்தி சார்ந்த அனுமதிகள்/ உரிமங்கள்/ சான்றிதழ்கள்

| தயாரிப்பு | ஏற்றுமதிக்கு தேவையான உரிமம் / அனுமதி / சான்றிதழ் | பொறுப்பான அதிகாரத் தரப்பு |
|---|---|---|
| தேயிலை (மூலிகை தேயிலை) | தேயிலை சபை பதிவு<br>• மொத்த தேயிலையின் சராசரி ஏல விலையின் சான்றிதழ<br>• ஒவ்வொரு ஏற்றுமதிக்கும் தரச் சான்றிதழ | •<br>• இலங்கை தேயிலை சபை |
| அனைத்து வாசனைத் திரவியங்களும் (கறுவா தவிர) | • உற்பத்தி நாடு (COO) சான்றிதழ்<br>• தாவர சுகாதார சான்றிதழ் (Phytosanitary)<br>• மேலதிக தகவலுடன் (தேவையாயின்) தாவர சுகாதார சான்றிதழ் (Phytosanitary) | •DoC<br>•NPQS<br>•NPQS |
| கறுவா | • உற்பத்தி நாடு (COO) சான்றிதழ்<br>• தாவர சுகாதார சான்றிதழ் (Phytosanitary)<br>• மேலதிக தகவலுடன் (தேவையாயின்) தாவர சுகாதார சான்றிதழ் (Phytosanitary)<br>• இலங்கை தரநிலைகள் முத்திரை/ தரச்சான்றிதழ் (தெரிவுக்குரியது)<br>• தூய இலங்கை தேயிலை இலச்சினையை பயன்படுத்துவதற்கான உரிமம்<br>• GI சான்றிதழ் (தெரிவுக்குரியது) | •DoC<br>•NPQS<br>•NPQS<br>• இலங்கை தரநிலைகள் நிறுவனம்<br>•EDB<br>•EDB |
| தென்னை மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்திப் பொருட்கள் | • CDA பதிவு<br>• உற்பத்தி நாடு (COO) சான்றிதழ்<br>• தாவர சுகாதார சான்றிதழ் (Phytosanitary)<br>• தயாரிப்பு தரத்தின் சான்றிதழ்<br>• உலர்ந்த தேங்காயின் தர உறுதிச் சான்றிதழ்<br>• தேங்காய் தொடர்பான பொருட்களுக்கான சோதனை அறிக்கை | • CDA<br>• DoC<br>•NPQS<br>• இலங்கை தரநிலைகள் நிறுவனம்<br>•CDA<br>•CDA |
| உலர்ந்த பழங்கள் | • உற்பத்தி நாடு (COO) சான்றிதழ்<br>• தாவர சுகாதார சான்றிதழ் (Phytosanitary)<br>• மேலதிக தகவலுடன் (தேவையாயின்) தாவர சுகாதார சான்றிதழ் (Phytosanitary)<br>• களச் சான்றிதழ் (தேவைப்படும் பட்சத்தில்) | •DoC<br>•NPQS<br>•NPQS<br>• விவசாய நிறுவன அபிவிருத்தி மற்றும் தகவல் சேவை மற்றும் NPQS |
| சேதன விவசாய உற்பத்திப் பொருட்கள் | • NOCU பதிவு<br>• உற்பத்தி நாடு (COO) சான்றிதழ்<br>• தாவர சுகாதார சான்றிதழ் (Phytosanitary)<br>• மேலதிக தகவலுடன் (தேவையாயின்) தாவர சுகாதார சான்றிதழ் (Phytosanitary)<br>• ஏற்றுமதி அனுமதி (வனப் பாதுகாப்புத் திணைக்களம்,தேவையாயின்) | • தேசிய சேதன கட்டுப்பாட்டு அலகு<br>•DoC<br>•NPQS<br>•NPQS<br>• இலங்கை வனப் பாதுகாப்புத் திணைக்களம் |
| ஆயுர்வேத மற்றும் மூலிகையினால் ஆக்கப்பெற்ற தயாரிப்புகள் | உள்ளூர் சந்தையிலும் ஏற்றுமதிக்காகவும் சுகாதாரப் பராமரிப்புத் தயாரிப்புகளாக சந்தைப்படுத்தலுக்கான அங்கீகாரம் | ஆயுர்வேதத் திணைக்களத்தின் கீழ் நியமிக்கப்பட்ட மருந்து முறைப்படுத்துனர் குழு |

குறிப்பு: இந்த அட்டவணை இலங்கையிலிருந்து பிரித்தானியாவுக்கு ஒரு பொருளை ஏற்றுமதி செய்யத் தேவையான ஏற்றுமதி அனுமதிகளின் பட்டியலுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகும். சேதன தேயிலை / தயாரிப்புகளுக்கான NOCU இல் பதிவு செய்தல் போன்ற தயாரிப்பு சார்ந்த பதிவுகளின் பட்டியலை இது உள்ளடக்கவில்லை. தயாரிப்பு சார்ந்த மற்றும் வேறு பதிவுகளுக்கு. இந்த கைநூலின் அத்தியாயம் 1 ஐப் பார்க்கவும்.

**விரைவான உதவிக்குறிப்பு: கட்டம் கட்டமான வர்த்தகம்**


ITC மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கு இடையேயான ஒத்துழைப்புடன் அபிவிருத்திசெய்யப்பட்ட கட்டம் கட்டமான செயற்பாடு, பல்வேறு தயாரிப்புகளுக்கான ஏற்றுமதி செயல் முறையை கோடிட்டுக் காட்டும் தெளிவான மற்றும் பயனர் நட்பு நடைமுறை வழிகாட்டியாக உள்ளது.இது ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களின் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான தேவைப்பாடுகளை எளிதாக வழிநடத்த உதவுவதன் மூலம் கட்டம் கட்டமான கண்ணோட்டத்தை வழங்குகிறது. உங்கள் தயாரிப்பை ஏற்றுமதி செய்ய தேவையான கட்டங்களைக் கண்டறிய இந்த வழிகாட்டி ஐ பார்க்கவும்.

## உங்களுக்குத் தெரியுமா?

**சராசரி ஏல விலை:** ஒரு சராசரி ஏல விலை சான்றிதழ், ஏற்றுமதி சந்தையில் வெளிப்படைத்தன்மை மற்றும் நியாயத்தை உறுதி செய்து, மொத்த தேயிலையின் சராசரி ஏல விலையை சரிபார்க்கிறது. சர்வதேச சந்தைகளில் இலங்கை தேயிலையின் நம்பகத்தன்மை மற்றும் தர நியமங்களைப் பேண இந்த சான்றிதழ் மிக முக்கியமானது. தேயிலையை வெற்றிகரமாக ஏற்றுமதி செய்வதற்கு இது ஒரு முன்நிபந்தனையாகும். இந்த சான்றிதழைப் பெற இலங்கை தேயிலை சபை I தொடர்பு கொள்ளவும்.

**இலங்கை தரநிலைகள் முத்திரை:** இந்த முத்திரை குறித்த தயாரிப்பு தேவையான தரநிலைகளை பூர்த்தி செய்கிறது மற்றும் ஏற்புடைய விதிமுறைகள் மற்றும் சட்டங்களுக்கு இணங்குகிறது என்பதை சான்றுப்படுத்துகிறது. இது இலங்கை தரநியமங்கள் நிறுவனத்தால் (SLSI) வழங்கப்படுகிறது. இது சர்வதேச தரநியமங்கள் அமைப்பு (ISO) 9001 தரநியமங்களை அடிப்படையாகக் கொண்டது. இந்த தரநியமம் பற்றிய மேலதிக தகவல்களைஇங்கே பெறலாம்.

**தூய இலங்கை கறுவா இலச்சினை:** இந்த இலச்சினை நுகர்வோருக்கு தயாரிப்பின் தரம் குறித்து உறுதியளிப்பதுடன், தயாரிப்பு தூய இலங்கை கறுவா சான்றிதழ் தரநிலைகளை பூர்த்தி செய்கிறது என்பதைக் குறிக்கிறது இந்த இலச்சினையைப் பெறுவது ஏற்றுமதியாளர்களுக்கு தெரிவுக்குரியது. இது ஏற்றுமதி அபிவிருத்திச் சபையால் (EDB) ஆல் வழங்கப்படுகிறது. இந்த இலச்சினையைப் பயன்படுத்துவதற்கான உரிமத்தைப் பெற இங்கே விண்ணப்பிக்கவும்.







# ஒரு மாதிரி விற்பனை ஒப்பந்தத்தின் பகுதி

Seller

Pages
1 of 1

**படம் A1: மாதிரி விற்பனை ஒப்பந்தம்**



Invoice Number

SALESCONTRACT

Date
06 Jul 2022

Seller
Buyer
ABC Exports
4300 Longbeach Blvd
Longbeach, California, 90807
United States
+12138447711
Randy Clarke
Company Tax ID: 93377112
info@abcexports.com

Pages
1of1

Delivery Date

InvoiceNumber
INV-34567S

Date
04 Jul 2022

Buyer
XYZ Imports
Method of Dispatch
410 Queen Street
Brisbane, Queensland, 4814
Australia
Port of Loading
+61404822536
Bob Jones

Type of Shipment

Port of Discharge

DeliveryDate
04 Jul 2022
Terms / Method of Payment

Product Code | Description of Goods | Unit Quantity | Unit Type | Price | Amount

MethodofDispatch
Sea

TypeofShipment
FCL

Terms/MethodofPayment
30% DEPOSIT, BALANCE UPON BILL OF LADING

PortofLoading
Long Beach

PortofDischarge
Sydney

| ProductCode | DescriptionofGoods | UnitQuantity | UnitType | Price | Amount |
|---|---|---|---|---|---|
| B-STOOL | BAR STOOL ALUMINIUM 500 X 100 X 100MM STAINLESS STEEL | 150 | EACH | 77.20 | 11,580.00 |
| B-TABLE | BAR TABLE ALUMINIUM 1000 X 600 X 400MM STAINLESS STEEL | 75 | EACH | 110.40 | 8,280.00 |
| Total This Page | | 225 | | | 19,860.00 |
| Consignment Total | | 225 | | | 19,860.00 |

Conditions
SUBJECT TO OUR STANDARD TRADING CONDITIONS

TOTAL: $19,860.00

Incoterms® 2020
FOB LONGBEACH

Currency

Signatory Company
ABC Exports

Name of Authorized Signatory
Randy Clarke

Bank Details
Account Name: ABC EXPORTS
Bank Account Number: 845590XXXX
Bank Name: Community Federal Savinsg Bank
ACH Routing Number: 02607XXXX
Fedwire Routing Number: 02607XXX
SWIFT Code: CMFGUS33
Bank Address: 89-16 Jamaica Ave, Woodhaven, New York, NY 11421

Signature
Randy Clarke

மூலம்: https://incodocs.com/template/sales_contract

# இன்கோடெர்ம்ஸ்

விற்பனை ஒப்பந்தங்களில் சர்வதேச வர்த்தக சபையால் உருவாக்கப்பட்ட 11 பொது விதிகளின் தொகுப்பான இன்கோடெர்ம்ஸ் விதிகள் (Incoterms) அடங்கும்.  இந்த விதிகள் சர்வதேச விற்பனை பரிவர்த்தனையில் விற்பனையாளர்கள் / ஏற்றுமதியாளர்கள் மற்றும் கொள்வனவாளர்களின் பொறுப்புகளை வரையறுக்கின்றன.

இந்த சர்வதேச அளவில் தரப்படுத்தப்பட்ட விதிமுறைகள் போக்குவரத்து செலவு, காப்புறுதிக் கட்டணங்கள், சுங்க அனுமதி போன்றவற்றைப் பற்றி தரப்புகளுக்குத் தெரிவிக்கின்றன. அவை ஒவ்வொரு தரப்பினரும் ஏற்க வேண்டிய பொறுப்புகளைக் குறிப்பிடுவது மட்டுமல்லாமல், விற்பனையாளரிடமிருந்து கொள்வனவாளருக்கு ஆபத்து மாற்றப்படும் மற்றும் தரப்புகளுக்கு இடையே செலவுகளைப் பிரிப்பது பற்றிய புள்ளியையும் குறிப்பிடுகின்றன.

## அட்டவணை A2: Incoterms சுருக்கம்

| இன்கோடெர்ம் | கொள்வனவாளரின் பங்கு | விற்பனையாளரின் பங்கு |
|---|---|---|
| ExWorks (EXW) | ஏற்றுமதியாளரின் வளாகம் முதல் சென்றடையும் இடம் வரை அனைத்திற்குமான பொறுப்பு | அவர்கள் பொருட்களை தங்கள் வளாகத்தில் கிடைக்கச் செய்ய மட்டுமே வேண்டும் |
| **பிரீ கேரியர்**<br>Free Carrier (FCA) | ஏற்றுமதியாளரின் வளாகம் முதல் ஊர்தி இடம் வரை அனைத்திற்குமான பொறுப்பு | கொள்வனவாளரால் நியமிக்கப்பட்ட ஊர்திக்கு பொருட்களை வழங்க வேண்டும் |
| **பிரீ எலோங்சைட் சிப்**<br>Free Alongside Ship | ஏற்றுதல் துறைமுகம் முதல் சென்றடையும் இடம் வரை அனைத்திற்குமான பொறுப்பு | கொள்வனவாளரால் நியமிக்கப்பட்ட ஊர்திக்கு பொருட்களை வழங்க வேண்டும |
| **பிரீ ஒன் போர்ட்**<br>Free On Board (FOB) | ஏற்றுதல் துறைமுகம் முதல் சென்றடையும் இடம் வரை அனைத்திற்குமான பொறுப்பு | பொருட்களை ஏற்றும் துறைமுகத்தில் கப்பலில் பொருட்களை ஏற்ற வேண்டும் |
| **செலவு மற்றும் சரக்கனுப்புக் கட்டணம்** (CFR) | ஏற்றுதல் துறைமுகம் முதல் சென்றடையும் இடம் வரை அனைத்திற்குமான பொறுப்பு | ஏற்றும் துறைமுகத்தில் கப்பலில் பொருட்களை ஏற்ற வேண்டும் |
| **செலவு காப்புறுதி சரக்கனுப்புக் கட்டணம்** (CIF) | ஏற்றுதல் துறைமுகம் முதல் சென்றடையும் இடம் வரை அனைத்திற்குமான பொறுப்பு | சென்றடையும் துறைமுகத்திற்கு சரக்குகளை எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதோடு, சரக்கிற்கு கட்டணம் செலுத்த வேண்டும் |
| **செலவு செலுத்தப்பட்டது** | ஊர்தி செல்லும் இடம் முதல் சேருமிடம் வரை அனைத்திற்கும் பொறுப்பு | பெயரிடப்பட்ட சேருமிடத்திற்கு சரக்குகளை எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதோடு சரக்கு கட்டணம் செலுத்த வேண்டும் |
| **ஏந்தூர்தி மற்றும் காப்புறுதி செலுத்தப்பட்டது** | ஊர்தி செல்லும் இடம் முதல் சேருமிடம் வரை அனைத்திற்கும் பொறுப்பு | பெயரிடப்பட்ட இடத்திற்கு பொருட்களை எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும், சரக்கு கட்டணம் செலுத்தி காப்புறுதி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் |
| **இடத்தில் விநியோகம் செய்யப்பட்டது** | இறக்குதல் தவிர, ஏற்றுமதியாளரின் வளாகம் முதல் சேருமிடம் வரை அனைத்திற்கும் பொறுப்பு | கொள்வனவாளரின் வளாகத்திற்கோ அல்லது வேறு பரிந்-துரைக்கப்பட்ட இடத்திற்கோ பொருட்களை வழங்க வேண்டும் |
| **இறக்கப்பட்ட இடத்தில் வழங்கப்பட்டது** | விற்பனையாளரின் வளாகம் முதல் சேருமிடம் வரை, இறக்குதல் உட்பட அனைத்திற்கும் பொறுப்பு | கொள்வனவாளரின் வளாகத்திற்கோ அல்லது வேறு பரிந்துரைக்கப்பட்ட இடத்திற்கோ பொருட்களை வழங்க வேண்டும் அவற்றை இறக்கவும் வேண்டும் |
| **வழங்கப்பட்ட தீர்வை செலுத்தப்பட்டது** | பொருட்களை ஏற்றுக்கொள்ள மட்டுமே வேண்டும் | ஏற்றுமதியாளரின் வளாகம் முதல் சேருமிடம் வரை, இறக்குதல் மற்றும்  சுங்க அனுமதி உட்பட அனைத்திற்குமான பொறுப்பு |



# தயாரிப்பு வகைப்பாடு: HS குறியீடுகள்

### HS குறியீடுகள் மற்றும் UKCCகள் பற்றிய மேலோட்டம்

HS குறியீடுகள் என்பது உலக சுங்க அமைப்பால் எல்லையைக் கடக்கும் தயாரிப்புகளை வகைப்படுத்த உருவாக்கப்பட்ட ஒரு கருவியாகும். ஒரு பொருளின் உளு அல்லது கட்டணக் குறியீடு ஏற்புடைய கட்டணக் குறியீடு, இறக்குமதி / ஏற்றுமதி உரிமங்களின் பிரயோகம், உள்ளக வரிகள் மற்றும் ஏனைய தேவைப்பாடுகள் மற்றும் கட்டுப்பாடுகளைத் தீர்மானிக்க உதவுகிறது. எனவே, விற்பனையாளர்கள் தயாரிப்பை விவரிக்கும் போது சரியான தயாரிப்பு வகைப்பாடு அல்லது HS குறியீட்டை சார்பு விலைப்பட்டியல் (pro forma invoice) மற்றும் விற்பனை ஒப்பந்தத்தில் சேர்க்க வேண்டும்.

பிரித்தானியாவில், பொருட்களின் வகைப்பாடு அட்டவணை 10 இலக்க அளவில் தயாரிப்புகளை வகைப்படுத்துகிறது. தயாரிப்பு வகைப்பாட்டின் பல்வேறு நிலைகளை HS குறியீடு மற்றும் அட்டவணை A3 இல் காட்டப்பட்டுள்ள UKCC இன் படி மிளகுக்கான தயாரிப்பு வகைப்பாட்டின் உதாரணத்தைப் பயன்படுத்தி காட்சிப்படுத்தலாம்.

### உங்களுக்குத் தெரியுமா ?

HS குறியீடு ஒத்திசைக்கப்பட்ட பொருட்களின் விபரம் மற்றும் குறியீட்டு முறை தொடர்பான சர்வதேச சமவாயத்தில் உள்ளடங்கி உள்ளது. HS குறியீட்டின் தொடர்புடைய அத்தியாயம், தலைப்பு மற்றும் உப தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தயாரிப்பு விளக்கத்தின் அடிப்படையில், ஒவ்வொரு தயாரிப்புக்கும் ஆறு இலக்கங்களைக் கொண்ட தயாரிப்புக் குறியீடு அல்லது HS குறியீடு உள்ளது. எவ்வாறாயினும், நாடுகள் HS குறியீட்டிற்கு அப்பால் ஒரு கட்டம் சென்று, மேலும் தயாரிப்பு வகைப்பாடு நிரல்களை அறிமுகப்படுத்தலாம். THS (தாவரப்) பெயரிடுமுறை இங்கே பார்க்கலாம்.

## அட்டவணை A3: HS குறியீடு மற்றும் UKCC இன் படி மிளகுக்கான தயாரிப்பு வகைப்பாடு

| HS குறியீடு | | | |
|---|---|---|---|
| **HS அத்தியாயம்** | 2 இலக்கங்கள் | 09 | கோப்பி, தேயிலை, மேட் மற்றும் வாசனைத் திரவியங்கள் |
| **HS தலைப்பு** | 4 இலக்கங்கள் | 09 04 | வால் மிளகு (Piper) இனத்தைச் சேர்ந்த மிளக் கேப்சிகம் இனத்தைச் சேர்ந்த அல்லது வெள்ளை மிளகு (Pimenta) இனத்தைச் சேர்ந்த உலர்ந்த அல்லது நொறுக்கப்பட்ட அல்லது அரைக்கப்பட்ட பழங்கள் |
| **HS உபதலைப்பு** | 6 இலக்கங்கள் | 0904.11 | நொறுக்கப்படவோ அல்லது அரைக்கப்படவோ இல்லை |
| **UKCC** | | | |
| **UKCC உப தலைப்பு** | 10 இலக்கங்கள் | 0904.1100.10 | கருப்பு வால் மிளகு (Piper) |
| **UKCC உப தலைப்பு** | 10 இலக்கங்கள் | 0904.1100.90 | வேறு |

## அட்டவணை A4: இந்த கைநூலில் உள்ளடக்கப்பட்ட தயாரிப்புகளுக்கான UKCC களின் குறிப்பான பட்டியல்

| UKCC | விபரம் |
|---|---|
| கோப்பி, தேயிலை, மேட் மற்றும் வாசனைத் திரவியங்கள் | |
| 0904.1100.10 | வால் மிளகு (Piper) இனத்தைச் சேர்ந்த மிளகு கேப்சிகம் இனத்தைச் சேர்ந்த அல்லது வெள்ளை மிளகு (Pimenta) இனத்தைச் சேர்ந்த உலர்ந்த அல்லது நொறுக்கப்பட்ட அல்லது அரைக்கப்பட்ட பழங்கள் - மிளகு - நொறுக்கப்படாத அரைக்கப்படாத - கருப்பு மிளகு (பைபர்) |
| 0904.1200.00 | வால் மிளகு (Piper) இனத்தைச் சேர்ந்த மிளக் கேப்சிகம் இனத்தைச் சேர்ந்த அல்லது வெள்ளை மிளகு (Pimenta) இனத்தைச் சேர்ந்த உலர்ந்த அல்லது நொறுக்கப்பட்ட அல்லது அரைக்கப்பட்ட பழங்கள் - மிளகு - நொறுக்கப்பட்ட அல்லது அரைக்கப்பட்ட |
| 0906.1100.00 | கறுவா மற்றும் கறுவா மரப் பூக்கள் - நொறுக்கப்படாத அல்லது அரைக்கப்படாத - கறுவா (Cinnamomum zeylanicum blume) |
| 0908.1100.00 | சாதிக்காய், சாதிபத்தரி மற்றும் ஏலக்காய் - சாதிக்காய் - நொறுக்கப்படாத அல்லது அரைக்கப்படாத |
| 0908.1200.00 | சாதிக்காய், சாதிபத்தரி மற்றும் ஏலக்காய் - சாதிக்காய் - நொறுக்கப்பட்ட அல்லது அரைக்கப்பட்ட |
| 0908.2100.00 | சாதிக்காய், சாதிபத்தரி மற்றும் ஏலக்காய் - சாதிபத்தரி - நொறுக்கப்படாத அல்லது அரைக்கப்படாத |
| 0908.2200.00 | சாதிக்காய், சாதிபத்தரி மற்றும் ஏலக்காய் - சாதிபத்தரி - நொறுக்கப்பட்ட அல்லது அரைக்கப்பட்ட |
| பழங்கல் | |
| 0804.3000.10 | பேரித்தம் பழம், அத்திப்பழம், அன்னாசிப்பழம், ஆணைக்கொய்யா, கொய்யா, மாம்பழம் மற்றும் மங்குஸ்தான், புதிய அல்லது உலர்ந்த - அன்னாசிப்பழம் - உலர்ந்த |
| 0801.1100.00 | தேங்காய், பிரேசில் கொட்டைகள் (Brazil nuts) மற்றும் முந்திரிப்பருப்பு, புதிய அல்லது உலர்ந்த, ஓடு நீக்கப்பட்ட அல்லது உரிக்கப்படாத - தேங்காய் - உலர்த்திய |
| 0801.1200.00 | தேங்காய், பிரேசில் கொட்டைகள் மற்றும் முந்திரி, புதிய அல்லது உலர்ந்த, தோல் நீக்கப்பட்ட அல்லது உரிக்கப்படாத - தேங்காய் - உள்தோல் (endocarp) |
| 0801.1900.00 | தேங்காய், பிரேசில் கொட்டைகள் மற்றும் முந்திரி, புதியதாகவோ அல்லது உலர்ந்ததாகவோ,தோல் உரிக்கப்பட்டதாகவோ அல்லது உரிக்கப்படாமலோ - தேங்காய் - மற்றவை |

## படம் A2: மிளகு/வாசனைத் திரவியங்களுக்கான UKCC-களுக்கான அத்தியாயக் குறிப்புகளின் உதாரணம்

**Notes for commodity 0904110010**

**Chapter notes**

1. Mixtures of the products of heading 0904 to 0910 are to be classified as follows:
   - (a) mixtures of two or more of the products of the same heading are to be classified in that heading;
   - (b) mixtures of two or more of the products of different headings are to be classified in heading 0910.

   The addition of other substances to the products of heading 0904 to 0910 (or to the mixtures referred to in paragraph (a) or (b) above) shall not affect their classification provided that the resulting mixtures retain the essential character of the goods of those headings. Otherwise such mixtures are not classified in this chapter; those constituting mixed condiments or mixed seasonings are classified in heading 2103.
2. This chapter does not cover cubeb pepper (Piper cubeba) or other products of heading 1211.

**Section notes**

1. In this section the term 'pellets' means products which have been agglomerated either directly by compression or by the addition of a binder in a proportion not exceeding 3% by weight.

▶ General Rules for the Interpretation of goods



# அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வர்த்தகத் திட்டம்

ஐக்கிய இராச்சியத்தின் DCTS ஆனது வளரும் நாடுகளுக்கு அதன் சந்தைக்கான முன்னுரிமை அணுகலை வழங்குகிறது, இது குறைக்கப்பட்ட அல்லது பூஜ்ஜிய வரி விகிதத்தில் இறக்குமதிகளை அனுமதிக்கிறது. இந்தத் திட்டம் முன்னைய பொதுமைப்படுத்தப்பட்ட விருப்பத்தேர்வுகள் திட்டத்திற்குப் பதிலாக மாற்றப்பட்டது.

படம் A3 இல் காட்டப்பட்டுள்ளபடி, மூன்று விருப்பத்தேர்வு வகைகளில் ஒன்றாக   நாடுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன, இது அத்தகைய நாடுகளில் இருந்து ஏற்றுமதியாளர்களுக்கு தயாரிப்புகளின் எண்ணிக்கையை பூஜ்ஜியம் அல்லது குறைக்கப்பட்ட கட்டண விகிதங்களில் நிர்ணயிக்கிறது. இலங்கை DCTS இன் கீழ் மேம்படுத்தப்பட்ட முன்னுரிமை நாடாகும். ஏற்றுமதியாளர்கள் 92% மீது பூஜ்ஜிய கட்டணத்தை அனுபவிக்க முடியும். DCTS நிரல்களுக்கு வெளியே உள்ள அனைத்து தயாரிப்புகளுக்கும் பிரித்தானிய பொது கட்டண முறையின்படி கட்டணம் விதிக்கப்படும்.

## DCTS இன் கீழ் கட்டண விகிதங்கள்

உற்பத்தியைப் பொறுத்து, ஏற்றுமதியாளர்கள் பல்வேறு வகையான கட்டணங்களைச் செலுத்த வேண்டியிருக்கும். உதாரணமாக, புதிய பழங்கள் மற்றும் காய்கறிகளை ஏற்றுமதி செய்பவர்கள் மதிப்பீட்டு விகித கட்டணங்களுக்கு மேலதிகமாக பருவகால கட்டணங்களையும் செலுத்த வேண்டியிருக்கும். DCTS இன் கீழ் ஏற்புடைய அனைத்து கட்டணங்களையும் ஒரு ஏற்றுமதியாளர் எவ்வாறு அடையாளம் காண முடியும்? கட்டணங்களை அடையாளம் காண்பது தொடர்பான DCTS வழிகாட்டல் ஆவணம் வெவ்வேறு, ஆனால் ஏற்புடைய கட்டண வகைகளின் பயனுள்ள கண்ணோட்டத்தை வழங்குகிறது. மேலும் தகவலுக்கு, படம் A4 இல் உள்ள விளக்கப்படத்தைப் பார்க்கவும்.

## படம் A3: DCTS நாடுகள் வகைப்பாடு

| Product tariff | Comprehensive Preferences | Enhanced Preferences | Standard Preferences |
|---|---|---|---|
| Tariff free products (0%) | 99.8% | 92% | 65% |
| Products with 0% to 5% tariffs | 0.2% | 0.4% | 10% |
| Products with 5% to 10% tariffs | 0% | 0.4% | 12% |
| Products with more than 10% tariffs (including Specific Tariffs* | 0% | 7.2% | 13% |

*Specific tariffs are tariffs calculated as a fixed charge on a unit of the product. The product unit could be weight, volume, number of items or other criteria.

### படம் A4: DCTS இன் கீழ் அறிவிடப்படும் வெவ்வேறு கட்டணங்கள்

**Ad-valorem tariffs**

Most tariffs under the DCTS are ad-valorem tariffs. An ad-valorem tariff is a percentage of the value of the product. The value refers to the total customs value of the product.

For example, the tariff for white chocolate for Comprehensive and Enhanced Preference Tiers is 0%, while Standard Preferences is 4.5% of the value of the product.

**Specific tariffs**

Specific tariffs are tariffs calculated as a fixed charge on a unit of the product. The product unit could be weight, volume, number of items or other criteria.

For example, the tariff for carcasses and half carcases of domestic swine is £44 per 100kg.

**Compound tariffs**

Compound tariffs are a combination of ad-valorem tariffs and specific tariffs.

**Example of compound tariffs:**

| Commodity Code | Product Description | Tariff |
|---|---|---|
| 04032051 | Yoghurt, whether concentrated, flavoured or with added fruit, nuts or cocoa, sweetened, in solid forms, of a milkfat content by weight of less than or equals to 1.5% | 4.5% plus £79 per 100 kg |

In this example, the ad-valorem tariff is the 4.5% charged on the value of the product while the specific tariff is £79 per 100 kg.

**Seasonal tariffs**

Seasonal tariffs are tariffs that change depending on the time of the year.

## உற்பத்தி இடம் தொடர்பான விதிகள்

உற்பத்தி இட விதிகள் பொருட்களின் பொருளாதார ரீதியான தேசியத்தை தீர்மானிக்க நாடுகளால் பயன்படுத்தப்படுகின்றன. DCTS இன் கீழ் எந்த முன்னுரிமை கட்டணங்கள் ஏற்புடையதாகும் என்பதைக் கண்டறிவதில் அவை முக்கியமானவை. தயாரிப்பாளர்கள் தங்கள் பொருட்கள் இலங்கையில் இருந்து முழுமையாக பெறப்பட்ட விதி அல்லது போதுமான செயற்பாட்டு அல்லது செயன்முறையாக்க விதியைப் பயன்படுத்தி உருவாக்கப்படுகிறது என்பதைக் காட்ட முடியும்.

இறக்குமதி செய்யப்பட்ட எந்த மூலப்பொருட்களையும் உள்ளடக்காமல், முழுவதுமாக இலங்கையில் தயாரிக்கப்படும் தயாரிப்புகள், முழுமையாக பெறப்பட்ட விதியின் கீழ் 'இலங்கையில் உற்பத்திசெய்யப்பட்டவை' ('Originating in Sri Lanka') என வகைப்படுத்தலாம்.

பச்சையான தேயிலை இலைகள் உற்பத்திக்காக (உலர்த்துதல், கலத்தல், பொதியிடல், அடையாளக் குறியிடல் போன்றவை) நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டால், இறுதி உற்பத்தி செய்யப்பட்ட தயாரிப்பு தயாரிப்பு சார்ந்த விதிகளைப் பூர்த்தி செய்தால் "இலங்கையில் உற்பத்திசெய்யப்பட்டவை" என்று வகைப்படுத்தலாம். உற்பத்திஇடம் பற்றி மேலும் அறிய உற்பத்தி இடத்தைப் புரிந்துகொள்வது குறித்த DCTS வழிகாட்டுதல் ஆவணத்தை பார்க்கவும்.



# 02 இணைப்பு II அடையாளக் குறியிடல் தரநிலைகள்

பிரித்தானியாவில் பொருட்களை விற்பனை செய்ய உற்பத்தியாளர்கள் கடைபிடிக்க வேண்டிய நான்கு முக்கிய அடையாளக் குறியிடல் தரநிலைகள் உள்ளன.

**விரைவான உதவிக்குறிப்பு: தகவலை எவ்வாறு காட்சிப்படுத்துவது?**

தகவல் தெளிவாகவும், வாசிக்கக்கூடியதாகவும், அகற்ற கடினமாகவும் (அழிக்க முடியாததாகவும்) இருக்க வேண்டும். தயாரிப்பின் அடையாளக் குறியிடல் நுகர்வோர் ஒரே நேரத்தில் தயாரிப்பின் பெயரையும் நிகர அளவையும் பார்க்க அனுமதிக்க வேண்டும். இது பற்றிய மேலதிக தகவல்களை இங்கே பெறலாம்.

## நுகர்வோருக்கு உணவுத் தகவல்களை வழங்குதல்

பிரித்தானிய சந்தையில் முன்பொதியிடப்பட்ட உணவுப் பொருட்களை விற்க இது பின்பற்ற வேண்டிய ஒரு கட்டாய படியாகும். முன் பொதிசெய்யப்பட்ட உணவு என்பது விற்பனைக்கு வைப்பதற்கு முன்பு பொதியிடப்படும் எந்தவொரு உணவாகும், மேலும் பொதியைத் திறக்காமல் அல்லது மாற்றாமல் அதை திருத்த முடியாது. தயாரிப்பு பொதியிடல் அல்லது பொதியிடலில் இணைக்கப்பட்ட அடையாளக் குறியீட்டில் பின்வரும் கட்டாயத் தகவலைக் காட்சிப்படுத்தவும்:

- உணவின் பெயர்
- அளவு மூலப்பொருட்கள் அறிவிப்பு
- மூலப்பொருட்களின் பட்டியல் ( ஒவ்வாமைகள் உட்பட)
- உணவின் எடை அல்லது அளவு (நிகர அளவு)
- A"இவ்வளவு காலத்திற்கு முன் சிறந்தது" (Best before) அல்லது "இவ்வளவு காலத்திற்குள் பயன்படுத்தவும்" (use by) திகதி
- உணவுத் தகவலுக்குப் பொறுப்பான உணவு வணிக இயக்குனரின் பெயர் மற்றும் முகவரி.

### பெட்டி A1: உற்பத்தி நாடு மற்றும் களஞ்சியப்படுத்தல் தகவல்

சொற்கள் அல்லது படங்கள் வேறு எங்கிருந்தோ வந்ததாக வெளிப்படுத்தப்பட்டால், தயாரிப்பின் உற்பத்தி நாடு அல்லது இடத்தை பொதியிடலில் குறிப்பிடவும். உற்பத்தி நாடு (COO) என்பது உணவு எந்த நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது என்பதை நுகர்வோருக்குத் தெரிவிக்கிறது, மேலும் 'தோற்ற இடம்' (place of provenance) என்பது உணவு உற்பத்தி செய்யப்பட்ட ஒரு நாட்டிற்குள் உள்ள நாடுகள் அல்லது பிராந்தியங்களின் தொகுதியைப் பற்றி நுகர்வோருக்குத் தெரிவிக்கிறது. மேலும் தகவலுக்கு, உற்பத்தி நாடு ('COO') அடையாளக் குறியிடல் குறித்த வழிகாட்டுதல் ஐ பார்க்கவும்.

தயாரிப்பை எவ்வாறு சரியாகச் களஞ்சியப்படுத்துவது அல்லது உட்கொள்வது என்பது குறித்து நுகர்வோருக்குத் தெரிவிக்க, பொதியிடலில் உள்ள களஞ்சியப்படுத்தல் நிபந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள். உதாரணமாக, ஒரு தயாரிப்புக்கு 'குளிர்சாதன பெட்டியில் வைத்து திறந்த ஐந்து நாட்களுக்குள் பயன்படுத்தவும்' அல்லது 'குளிர்ந்த மற்றும் உலர்ந்த இடத்தில் களஞ்சியப்படுத்தவும்' என்ற வார்த்தைகள் தேவைப்படலாம்.

பொதியிடலில் நுகர்வோருடன் பகிர்ந்து கொள்ளத் தேவையான தகவல்கள் குறித்த விரிவான வழிகாட்டுதலை இங்கே காணலாம். இது தவிர, உணவு தரநிலைகள் முகவர் நிறுவனத்தால் வழிகாட்டுதலும் வழங்கப்படுகிறது, அதை இங்கே. அணுகலாம்.

### பெட்டி A2: மூலப்பொருட்கள் பட்டியல்

தயாரிப்பாளர்கள் பொதியிடலில் உள்ள அனைத்து மூலப் பொருட்களையும் பட்டியலிட வேண்டும். “மூலப்பொருட்கள்“ என்ற தலைப்பின் கீழ் இந்தப் பட்டியல் சேர்க்கப்பட வேண்டும். சில உணவுப் பொருட்களுக்கு மூலப்பொருள் பட்டியல் தேவைப்படுவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. உங்கள் தயாரிப்பு விலக்கு அளிக்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிய இங்கே பார்க்கவும். உங்களுக்கு இன்னும் உறுதியாக தெரியவில்லை என்றால், உள்ளூர் வர்த்தக தரநிலை அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும். தயாரிப்பாளர் பின்வரும் குறிப்பான தகவல்களை வழங்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும்: (1) இனிப்பூட்டிகள் அல்லது சர்க்கரைகள் (2) செயற்கைச் சர்க்கரை வகை (aspartame) மற்றும் நிறமிடல்கள் (3) அதிமதுரம் (liquorice) (4) காஃபின் (caffeine) மற்றும் (5) ஏற்புடையதாயின் பாலியோல்கள் (polyols).

# உணவு கலவை தரநிலைகள்

இந்த தரநிலைகள் நுகர்வோர் ஒரு குறிப்பிட்ட தரம் கொண்டதாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் உணவுப் பொருட்களுக்கு அல்லது குறைந்த தரம் கொண்ட மாற்றுகளுக்கு மாற்றாக ஆபத்தில் உள்ளவற்றுக்கு ஏற்புடையதாகும். சில உணவுகளுக்கு உணவில் ஒரு குறிப்பிட்ட கலவை இருந்தால் மட்டுமே இதைப் பயன்படுத்த முடியும் என்ற “ஒதுக்கப்பட்ட விளக்கம்” உள்ளது. அவையாவன:

- பாண் மற்றும் மாவு
- கொழுப்புகள் மற்றும் எண்ணெய்கள்
- பழச்சாறுகள், தேன் மற்றும் இன்சுவைகள்
- ஜாம்கள் மற்றும் ஒத்த தயாரிப்புகள்
- இறைச்சி கொண்ட தயாரிப்புகள்
- பால் மற்றும் பால் உற்பத்திகள்
- கரையக்கூடிய கோபி மற்றும் சிக்கரி சாறுகள் (chicory extracts);
- சுக்ரோஸ் அல்லது குளுக்கோஸ் சிரப்கள் போன்ற குறிப்பிட்ட சர்க்கரை தயாரிப்புகள்.



உங்கள் உணவுப் பொருளின் கலவைத் தேவைப்பாடுகளைக் கண்டறிய, அடையாளக் குறியிடல் மற்றும் கலவை குறித்த வழிகாட்டுதலை பார்க்கவும்



# உணவு விலைக்குறியிடல் தேவைப்பாடுகள்

பிரித்தானிய சந்தையில் உணவுப் பொருட்களை வெற்றிகரமாக விற்பனை செய்ய, விலைக்குறியிடல் தெளிவாகவும் படிக்க எளிதாகவும், நிரந்தரமாகவும், புரிந்துகொள்ள எளிதாகவும், எளிதில் தெரியும் வகையிலும் தவறாக வழிநடத்தாமலும் இருக்க வேண்டும். தகவல் மற்றும் மூலப்பொருட்கள் பட்டியலை வழங்குவதோடு மட்டுமல்லாமல், உற்பத்தியாளர்கள் சில எச்சரிக்கைகளையும் சேர்க்க வேண்டும்.

உதாரணமாக, தயாரிப்பில் “இனிப்பூட்டிகள” இருந்தால், எச்சரிக்கையில் “இனிப்புட்டல் (கள்)“ என்று குறிப்பிடப்படவேண்டும். செயற்கைச் சர்க்கரை வகை (aspartame) விடயத்தில், எச்சரிக்கையில் “ஃபினைலலனின் (phenylalanine) மூலத்தைக் கொண்டுள்ளது” என்று குறிப்பிடப்பட வேண்டும். உணவு மற்றும் பான எச்சரிக்கைகளின் பட்டியலை பார்க்க இந்த இணைப்பை பார்க்கவும்.

# சேதன உணவு அடையாளக் குறியிடல் தரநிலைகள்

பிரித்தானியாவில் சேதனப் பொருட்களை விற்பனை செய்வதற்கு உற்பத்தியாளர்கள் தங்கள் தயாரிப்புகளை அங்கீகரிக்கப்பட்ட பிரித்தானிய சேதனக் கட்டுப்பாட்டு அமைப்பின் மூலம் சான்றுப்படுத்திக்கொள்ள வேண்டும். உங்கள் தயாரிப்பு பிரித்தானியாவில் “சேதன உற்பத்தி“ என்ற வரையறையின் கீழ் வருகிறதா என்பதைக் கண்டறிய அவர்களைத் தொடர்பு கொள்ளவும். உணவுப் பொருட்களை சேதன அடிப்படையிலானவை என்று அடையாளக் குறியிடப்பட, அவை:

- அவை சேதன உற்பத்தி விதிகளை பூர்த்தி செய்கின்றன்
- விவசாய மூலப் பொருட்களில் குறைந்தது 95% சேதனம் சார்ந்தவை்
- ஏனைய அனைத்து மூலப் பொருட்கள், சேர்க்கைகள் மற்றும் செயலாக்க உதவிகள் சேதன விதிமுறைகளுக்குள் அனுமதிக்கப்பட்டபடி நிரட்படுத்தப்பட்டுள்ளன்
- உற்பத்திப் பொருள், அதன் அடையாள குறியீடுகள் மற்றும் எந்தவொரு விநியோகஸ்தர்களும் அங்கீகரிக்கப்பட்ட பிரித்தானிய சேதன கட்டுப்பாட்டு அமைப்பால் சான்றுப்படுத்தப்பட்டுள்ளனர்.

பிரித்தானியாவுக்கு சேதன உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய, கட்டுப்பாட்டு அமைப்பின் குறியீட்டு இலக்கம் மற்றும் விவசாய உற்பத்தி இடம் குறித்த அறிக்கை ஆகியவை உள்ளடக்கப்பட வேண்டும். கரிமப் பொருட்களை ஏற்றுமதி செய்வது பற்றி மேலும் அறிய, இந்த வழிகாட்டியை பார்க்கவும்.

**விரைவான உதவிக்குறிப்பு: சேதன இலச்சினையை பயன்படுத்துதல்**

பிரித்தானியாவுக்கு சேதனப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் உற்பத்தியாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட பிரித்தானிய சேதனக் கட்டுப்பாட்டு அமைப்பில் பதிவு செய்யப்பட வேண்டும். ஏற்றுமதியாளர்கள் தாங்கள் பதிவுசெய்யப்பட்ட அமைப்பால் தேவைப்படுத்தப்படும் சேதன உற்பத்தி தரநிலைகளை பூர்த்தி செய்து தேவையான சான்றிதழைப் பெற வேண்டும். சான்றிதழ், உற்பத்தியாளரின் சேதன என்ற கூற்றை படிகமாக்கும் ஒரு இலச்சினையுடன் வருகிறது. இந்த இலச்சினை நுகர்வோர் சேதனப் பொருட்களை அடையாளம் காண்பதை எளிதாக்குகிறது. BDA சான்றிதழ் (BDA certification), சேதன விவசாயிகள் மற்றும் செய்கையாளர்கள் CIC (Organic Farmers and Growers CIC) மற்றும் மண் சங்கம் Soil Association ஆகியவை இந்தத் துறையில் ஈடுபட்டுள்ள நன்கு அறியப்பட்ட சான்றிதழ் வழங்குநர்களில் சில. பிரித்தானிய நுகர்வோர் சந்தை அவர்களின் இலச்சினைகளை நன்கு அறிந்திருக்க வாய்ப்புள்ளது.

03

# இணைப்பு III தன்னார்வ பேண்தகுதன்மை தரநிலைகள்

அத்தியாயம் 3 இல் குறிப்பிட்டுள்ளபடி, VSSகள் தயாரிப்பு தரத்தை உறுதிசெய்து நுகர்வோரின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ய உதவுகின்றன. அவற்றுக்கு விண்ணப்பிக்க,

தயாரிப்பாளர்கள் இரண்டு முக்கிய தேவைப்பாடுகளை நன்கு அறிந்திருக்க வேண்டும்:
(1) சான்றிதழ் பெறுவதற்கான பொதுவான செயல்முறை மற்றும்
(2) ஏற்புடைய சில தொடர்புடைய சான்றிதழ்கள்.

## சான்றிதழ்களைப் பெறுவதற்கான படித்தரங்கள்

### கட்டம் 1: சரியான தரநிலையை அடையாளம் காணவும்

வெவ்வேறு VSS சான்றிதழ்கள் உணவுப் பாதுகாப்பு பொருளாதாரம், சூழல் மற்றும் சமூக அம்சங்கள் போன்ற பேண்தகுதன்மையின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியது - மேலும் சில நாடுகளில் மட்டுமே பயன்படுத்தப்படலாம். சில நேரங்களில், இறக்குமதியாளர் தயாரிப்பாளர் பெற வேண்டிய VSS சான்றிதழைக் குறிப்பிடலாம் வேறு சூழ்நிலைகளில், கொள்வனவாளருடன் விற்பனை ஒப்பந்தம் குறித்து பேரம் பேசுவதற்கு முன்னர் ஏற்றுமதியாளர்கள் பல்வேறு வகையான VSS சான்றிதழுடன் தங்களைப் பரீட்சயப்படுத்திக் கொள்ளுங்கள். அவ்வாறு செய்ய ITC தரநிலைகள் வரைபடத்தின் “தரநிலைகளை அடையாளம் காணவும்” மற்றும் “ஒப்பிடுக’ கருவிகளைப் பயன்படுத்தவும்.




### கட்டம் 2: ஒரு இடைவெளி பகுப்பாய்வினை மேற்கொள்ளவும்

ஏற்கனவேயுள்ள வணிக நடைமுறைகள் மற்றும் அடையாளம் காணப்பட்ட VSS இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இடையில் ஏதேனும் இடைவெளிகளைக் கண்டறிய தயாரிப்பாளர்கள் ஒரு இடைவெளி பகுப்பாய்வினை மேற்கொள்ள வேண்டும். பகுப்பாய்வில் இடைவெளிகள் கண்டறியப்பட்டால், தயாரிப்பாளர்கள் அடுத்த கட்டங்கள், செலவுகள் மற்றும் அத்தகைய அடுத்த கட்டங்களைச் செயற்படுத்துவதற்கான காலம் உட்பட பொருத்தமான நடவடிக்கையைத் தீர்மானிக்க வேண்டும். அவை செயற்படுத்தப்பட்டதும், கட்டம் 3 க்குச் செல்லவும். இடைவெளி பகுப்பாய்விலிருந்து எந்த இடைவெளிகளும் அடையாளம் காணப்படவில்லை என்றால், தயாரிப்பாளர்கள் நேரடியாக கட்டம் 3 க்கு செல்லலாம்.



### கட்டம் 3: சான்றிதழுக்கு விண்ணப்பிக்கவும்

விண்ணப்பிப்பதற்கு முன், ஒரு தயாரிப்பாளர் சான்றுப்படுத்தலின் விலையை கட்டமைத்திருப்பதை உறுதி செய்வது முக்கியம். செலவுகளில் அங்கத்துவக் கட்டணங்கள், கணக்காய்வுக் கட்டணம் (தேவைப்படுத்தப்படும் வருகைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து மாறுபடும்), மாதிரியை பரிசோதிப்பதற்கான ஆய்வக கட்டணம், தயாரிப்பு தரநிலைக்கும் VSS சான்றுப்படுத்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தரநிலைகளுக்கும் இடையே இடைவெளி இல்லை என்பதை உறுதி செய்வதற்கான செலவு ஆகியவை அடங்கும்.

தயாரிப்பாளர் ஏற்புடைய செலவை நிர்ணயித்து திட்டமிட்டவுடன், தயாரிப்பாளர்கள் சான்றிதழுக்காக VSS அமைப்பிற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பத்தைத் தொடர்ந்து, தயாரிப்பாளர்-விண்ணப்பதாரர் ஒரு கணக்காய்வாளர் / கண்காணிப்பாளரை ஒரு தள மதிப்பீட்டை (on-site assessment) மேற்கொள்ள அழைப்பார். வெவ்வேறு VSS சான்றுப்படுத்தல்கள் செயற்படும் ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு அங்கீகரிக்கப்பட்ட அல்லது அனுமதியளிக்கப்பட்ட கணக்காய்வாளர்களைக் கொண்டுள்ளன.

உதாரணமாக, இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட ISO 22000 கணக்காய்ளர்களில் சில இலங்கை தரநியமங்கள் நிறுவனம், பீரோ வெரிடாஸ்  ஸ்ரீலங்கா மற்றும் SGS ஸ்ரீலங்கா ஆகியவை ஆகும். GOTS சான்றிதழைப் பெற விரும்பும் தயாரிப்பாளர்கள் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வாளரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

### கட்டம் 4: கண்காணிப்பு மற்றும் திருத்த நடவடிக்கைகோரிக்கைகள்

பின்னர் தயாரிப்பாளர்கள் ஒரு கணக்காய்வுக்குத் தயாராக வேண்டும், இதன் போது உற்பத்தி அலகின் இடத்திலேயே மதிப்பீடு கணக்காய்வாளரால் நடத்தப்படும், அவர் உணவு முகாமைத்துவ முறைமையைச் சரிபார்த்து, அதன்படி, ஒரு கணக்காய்வு அறிக்கையைப் பகிர்ந்து கொள்வார்.

கணக்காய்வாளர் திருத்த நடவடிக்கை கோரிக்கைகளையும் வழங்கலாம், இது ஏற்கனவே உள்ள வணிக நடைமுறைகளுக்கும் VSS சான்றிதழின் கீழ் தேவைப்படுத்தப்படும் தரங்களுக்கும் இடையே உள்ள இடைவெளிகளை சரிசெய்ய தயாரிப்பாளர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை விவரிக்கிறது. திருத்த நடவடிக்கை கோரிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டவுடன், இடைவெளிகள் சரியாக நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த புதிய கணக்காய்வு நடத்தப்படும்.

கணக்காய்வு அறிக்கையில் தெளிவற்ற பத்திகள் இருந்தால், கணக்காய்வாளரிடம் விளக்கம் கேட்க வேண்டும். தெளிவற்ற முடிவு வெளியிடப்பட்டால், விளக்கங்களை கோருவதுடன், தேவைப்பட்டால், முடிவை எதிர்த்து மேன்முறையீடு செய்யவும்.

### கட்டம் 5: சான்றுப்படுத்தல், கண்காணிப்பு மற்றும் புதுப்பித்தல்

கணக்காய்வு முடிந்தவடைந்து மற்றும் சரிசெய்தல் நடவடிக்கை கோரிக்கைகள் எதுவும் நிலுவையில் இல்லை என்றிருந்தால் சான்றிதழ் வழங்கப்படும். சான்றுப்படுத்தப்பட்ட தயாரிப்பாளர் தொடர்ந்து ஏற்புடைய தேவைப்பாடுகளுக்கு இணங்குவதை உறுதிசெய்ய, VSS சான்றுப்படுத்தலின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பொறுத்து, தள அல்லது கைவழி அடிப்படையிலான சரிபார்ப்பு (On-site or desk-based verification) கணக்காய்வுகளும் செய்யப்படலாம்.

ஒவ்வொரு சான்றுப்படுத்தலுக்கும் வெவ்வேறு செல்லுபடியாகும் காலம் உள்ளதுடன், அதற்கேற்ப புதுப்பிக்கப்பட வேண்டும். புதுப்பித்தலின் அடுத்த திகதியைத் தீர்மானிக்கவும் அதற்கேற்ப திட்டமிடவும் தயாரிப்பாளர்கள் சான்றிதழ் பெறப்பட்ட இணையதளத்தை ஆராய வேண்டும்.



# தொடர்புடைய சான்றுப்படுத்தல்கள்

### ISO 22000

ISO 22000 என்பது நிறுவனங்கள் உணவுப் பாதுகாப்பு அபாயங்களைக் கண்டறிந்து கட்டுப்படுத்த உதவும் ISO-வின் உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ தரநிலைகள் ஆகும். இந்தச் சான்றிதழ் உணவு நுகர்வுக்குப் பாதுகாப்பானது என்பதை உலகளாவிய உணவு விநியோகச் சங்கிலிக்குள் உறுதிப்படுத்துகிறது. இது நல்ல உற்பத்தி நடைமுறைகள், ஆபத்து பகுப்பாய்வு மற்றும் முக்கியமான கட்டுப்பாட்டு புள்ளிகள் மற்றும் ஏனைய தடுப்பு நடவடிக்கைகளின் கூறுகளை ஒருங்கிணைக்கிறது.

சான்றிதழ் பெறுவது எப்படி? இலங்கை தரநியமங்கள் நிறுவனத்தால் (SLSI) மூலம் சான்றிதழைப் பெறுங்கள்.. விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்து, ISO 22000 தரநிலைகளைப் பூர்த்தி செய்வதற்கான அனைத்துத் தேவைப்பாடுகளுக்கும் நீங்கள் இணங்குவதை உறுதிசெய்யவும்.

### உணவுப் பாதுகாப்பு முறைமை சான்றுப்படுத்தல் (FSSC) 22000

FSSC 22000 என்பது உலகளாவிய உணவுப் பாதுகாப்பு முன்முயற்சியால் அங்கீகரிக்கப்பட்ட உணவுப் பாதுகாப்புத் தரநிலையாகும், மேலும் இது ஏற்கனவே உள்ள ISO தரநிலைகளை அடிப்படையாகக் கொண்டது. உணவுப் பாதுகாப்பு தரநிலைகள் மற்றும் செயல் முறைகளை உறுதி செய்வதற்காக உணவு உற்பத்தித் துறையிலும் தொடர்புடைய விநியோகச் சங்கிலியிலும் பயன்படுத்தக்கூடிய ஒரு கட்டமைப்பை FSSC வழங்குகிறது. மேலும் தகவலுக்கு, இந்த வழிகாட்டுதல் ஆவணத்தைப் பார்க்கவும்: உணவுப் பாதுகாப்பு மற்றும் தர கலசாரம்.

சான்றிதழ் பெறுவது எப்படி? FSSC 22000 சான்றிதழைப் பெற இந்த கட்டம் கட்டமான வழிகாட்டி l பின்பற்றவும். சான்றிதழைப் பெற, பீரோ வெரிடாஸ் ஸ்ரீ லங்கா (Bureau Veritas Sri Lanka), SGS Sri Lanka போன்ற FSSC-உரிமம் பெற்ற அமைப்பைக் கண்டறியவும்.



### பிரித்தானிய சில்லறை வணிக கூட்டமைப்பு உலகளாவிய தரநிலை (BRCGS)

BRCGS என்பது உணவுப் பாதுகாப்பு, பொதியிடல் பொருட்கள், களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகம் போன்றவற்றுடன் தொடர்புடைய தரநிலைகளின் தொகுப்பாகும். அவை நல்ல உற்பத்தி நடைமுறைகளுக்கு சான்றாகும், மேலும் உணவுப் பொருட்கள் பாதுகாப்பானவை, சட்டப்பூர்வமானவை மற்றும் உயர் தரமானவை என்பதை நுகர்வோருக்கு உறுதி செய்கின்றன. பிரித்தானிய சந்தைக்கு தயாரிப்புகளை விற்பனை செய்யும் போது அவை குறிப்பாக பொருத்தமானவை. BRCGS என்பது ஒரு உலகளாவிய உணவுப் பாதுகாப்பு முயற்சித் திட்டம் என்பதோடு சர்வதேச அளவில் பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. RBRCGS உணவுப் பாதுகாப்பு தரநிலை பற்றி இங்கே மேலும் வாசிக்கவும்.

சான்றிதழ் பெறுவது எப்படி? சான்றிதழ் செயல்முறையைப் புரிந்துகொள்வதற்கான கட்டம் கட்டமான வழிகாட்டி இங்கே கிடைக்கிறது. BRCGS சான்றிதழை BRCGS-அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் அமைப்பின் மூலம் மட்டுமே பெற முடியும். இலங்கையில் உள்ள அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளின் பட்டியல் BRCGS விவரத்திரட்டில் கிடைக்கிறது. 'சான்றுப்படுத்தல் அமைப்பு' என்பதைக் கிளிக் செய்து, பின்னர் 'இலங்கை' என்பதை நாடாகத் தேர்ந்தெடுக்கவும். இலங்கையில் உள்ள அனைத்து அங்கீகரிக்கப்பட்ட சான்றுப்படுத்தும் அமைப்புகளின் பெயர்கள் மற்றும் தொடர்பு விவரங்கள் விவரத்திரட்டில் காட்சிப்படுத்தப்படும். BRCGS ஐ பூர்த்திசெய்ய தயாரிப்பாளர்கள் பயிற்சி வழ பெறலாம்.

### பெயார்ட்ரேட் இன்டர்நேஷனல்

பெயார்ட்ரேட் இன்டர்நேஷனல் சான்றிதழ் உற்பத்தியாளர்களையும் நுகர்வோரையும் இணைப்பதில் அதன் முதன்மை கவனத்துடன், உலகளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது நியாயமான வர்த்தக நிலைமைகளை பிரதிநிதித்துவப்படுத்துகிறது மற்றும் உற்பத்தியாளர்கள் பெயார்ட்ரேட் சமூக, சூழல் மற்றும் பொருளாதார தரநிலைகளை பூர்த்தி செய்திருப்பதை நுகர்வோருக்கு உறுதி செய்கிறது. ஒரு தயாரிப்பாளராக,உங்கள் தயாரிப்புக்கான குறைந்தபட்ச விலை மற்றும் உயர்மதிப்பைப் பெறுவதன் மூலம் நீங்கள் பயனடைகிறீர்கள், மேலும் உற்பத்தியாளர் வலையமைப்புகள் மற்றும் நிறுவனங்களுக்கான அணுகலையும் பெறுகிறீர்கள்.

சான்றிதழ் பெறுவது எப்படி? சான்றிதழ் நடைமுறை FLOCERT ஊடாக செய்யப்படுகிறது. விண்ணப்பிக்கும் முன், நீங்கள் அனைத்து அளவுகோல்களுக்கும் இணங்குகிறீர்களா என்பதைச் சரிபார்க்கவும். கட்டம் கட்டமான நடைமுறை இங்கே கிடைக்கிறது.

### சர்வதே சிறப்பம்ச தரநிலை (IFS)

சட்டத் தேவைப்பாடுகள் மற்றும் வாடிக்கையாளர் விவரக்குறிப்புகளின்படி பாதுகாப்பான, நம்பகமான மற்றும் தரமான தயாரிப்புகளை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளரின் திறனை மதிப்பிடுவதற்கு IFS தயாரிப்புகள் மற்றும் உற்பத்தி செயல்முறைகளை மதிப்பாய்வு செய்கிறது. தனியார் அடையாள குறியீடுகளைப் பயன்படுத்தும் உற்பத்தியாளர்களுக்கு இது மிகவும் நன்மை பயக்கும். உணவு உற்பத்தியாளரால் பயன்படுத்தப்படும் தனியார் அடையாள குறியீடுகள் அல்லது தரநிலைகள் வாடிக்கையாளர் விவரக்குறிப்புகளுக்கு இணங்குகின்றன என்பதை IFS சான்றிதழ் நிரூபிக்கிறது. இது உலகளாவிய உணவு பாதுகாப்பு முன் முயற்சியால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

சான்றிதழ் பெறுவது எப்படி? IFS சான்றிதழைப் பெறுவதற்கான ஒரு வரைபடம் இங்கே கிடைக்கிறது. IFS தரநிலைகளைப் பூர்த்தி செய்ய, உற்பத்தியாளர்கள் . IFS அகாடமியில் பயிற்சி பெறலாம் தணிக்கை நடத்தி சான்றிதழைப் பெற SGS Sri Lanka போன்ற IFS சான்றிதழ் அமைப்புகளைத் தொடர்பு கொள்ளவும்.

04

# இணைப்பு IV சுங்க நடைமுறைகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்

அத்தியாயம் 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, தயாரிப்புகள் சுங்கம் வழியாக செல்வதை உறுதிசெய்ய, ஏற்றுமதியாளர்கள் சுங்க நடைமுறைகள் மற்றும் துணை ஆவணங்களுடன் நன்கு பரீட்சயமாக இருக்க வேண்டும். சில ஆவணங்கள் பற்றி கீழே விளக்கப்பட்டுள்ளன:

## வணிக விலைப்பட்டியல்

ஒரு வணிக விலைப்பட்டியல் என்பது சர்வதேச கப்பல் போக்குவரத்தில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி அனுமதி செயல் முறைக்குத் தேவையான ஒரு ஆவணமாகும். இது பின்வரும் தகவல்களைக் கொண்டுள்ளது:

- விற்பனையாளர், கொள்வனவாளர் மற்றும் இறுதி பெறுநரின் முழுப் பெயர், முகவரி மற்றும் தொடர்பு விவரங்கள் (இது கொள்வனவாளரிடமிருந்து வேறுபட்டால்)
- வர்த்தக விலைப்பட்டியல் இலக்கம் மற்றும் வழங்கப்பட்ட திகதி
- கொள்முதல் கட்டளை அல்லது ஒப்படைப்புப் பொருள் விளக்கப்பட்டியல் (proforma invoice) இலக்கம் மற்றும் வழங்கப்பட்ட திகதி (குறிப்பாக ஒரே ஒப்பந்தத்தின் கீழ் பல கட்டளைகள் இருந்தால்)
- HS குறியீடு, தயாரிப்பு விபரம், Incoterms, பொருட்களின் உற்பத்தி நாடு
- போக்குவரத்து பாதை மற்றும் பொருட்களின் உண்மையான பெறுமதி

**விரைவான உதவிக்குறிப்பு: மாற்று விகித ஏற்ற இறக்கங்களைக் கருத்திற்கொள்ளுங்கள்**

மாற்று விகித ஏற்ற இறக்கங்களிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ள, பின்வரும் உதவிக்குறிப்புகளைக் கவனியுங்கள்.

- பணம் செலுத்தும் நாளில் ஏற்புடைய மாற்று விகிதத்தைப் பயன்படுத்துங்கள் அல்லது அந்நிய செலாவணி கணக்கில் வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- விலை ஏற்ற இறக்கங்களைக் கணக்கிடுதல் மற்றும் மேலதிக கட்டணத்தைச் சேர்த்து சாத்தியமான இழப்புகளை ஈடுகட்டுதல்.
- உங்கள் வங்கி முகாமையாளரிடம் அல்லது முன் அனுபவமுள்ள ஒரு நிபுணரிடம் பேசுங்கள்.



## பொதிவுப் பட்டியல் (packing list)

இது சரக்கில் உள்ள ஒவ்வொரு பொதி பற்றிய தகவலையும் குறிப்பிடும் ஒரு ஆவணம். ஏற்றுமதியாளரால் தயாரிக்கப்பட்ட, ஒரு பொதிவுப் பட்டியலில் பின்வருவன போன்ற சரக்கு பற்றிய விரிவான தகவல்கள் உள்ளன:

- தயாரிப்பு விபரம்
- அலகுகளின் எண்ணிக்கை மற்றும் மொத்த எடை
- பொதியிடல் அறிவுறுத்தல்கள்
- பயன்படுத்தப்படும் பொதியிடல் வகை, அதாவது சிறு தொகுதிகளா அல்லது அட்டைப்பெட்டிகளில் அடைக்கப்பட்டதா, அதன் பரிமாணங்கள் மற்றும் பொதியிடலில் உள்ள அடையாளங்கள்
- விற்பனையாளர் மற்றும் கொள்வனவாளர் பற்றிய குறிப்பு.

**விரைவான உதவிக்குறிப்பு: குழப்பத்தைத் தவிர்க்கவும்**

ஒரு பொதிவுப் பட்டியல் வர்த்தக விலைப்பட்டியல் போன்றது அல்ல. உங்கள் தயாரிப்புகளை வெற்றிகரமாக ஏற்றுமதி செய்ய இரண்டு ஆவணங்களும் அவசியம்.

ஏனைய எல்லா ஆவணங்களையும் போலவே, இது கொள்வனவாளர், விற்பனையாளர் மற்றும் போக்குவரத்தை மேற்கொள்பவர் பற்றிய குறிப்புகளைக் கொண்டிருக்க வேண்டும். சரக்கு அனுப்புபவர்கள் அல்லது சரக்கு ஏற்றுமதி செய்பவர்கள் சரக்குக் கட்டணத்தைத் (bill of lading) தயாரிக்க பொதிவுப் பட்டியலைப் (packing list) பயன்படுத்துகின்றனர்.

## உற்பத்தி இடத்தின் சான்று

அத்தியாயம் 1 இல் விளக்கப்பட்டுள்ளபடி, இலங்கை ஏற்றுமதியாளர்கள் DCTS இன் கீழ் முன்னுரிமை கட்டண விகிதங்களைக் கோருவதற்கு, அவர்களது பொருட்கள் இலங்கையில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட என்பதை நிரூபிக்க வேண்டும். ஏற்றுமதியாளர்கள் பின்வரும் வகையான மூலச் சான்றுகளைச் சமர்ப்பிக்கலாம்:

- படிவம் A
- உற்பத்தி இட பிரகடனம்

மூலச் சான்று, மூலப் பொருட்களின் ஒற்றை ஏற்றுமதிக்கு ஏற்புடையதாகும். இது பின்வருவன போன்ற ஒரே மாதிரியான பொருட்களின் பல ஏற்றுமதிகளுக்கும் ஏற்புடையதாகும்: (1) அதே விற்பனை ஒப்பந்தத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டது(2) அதே பண்டக் குறியீட்டைக் கொண்டது, (3) அதே ஏற்றுமதியாளரால் அதே இறக்குமதியாளருக்கு பிரத்தியேகமாக விற்கப்பட்டதுடன் பிரித்தானியாவில் உள்ள அதே சுங்க அலுவலகத்தில் நுழைவு ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டது (4)12 மாதங்களுக்கு மிகாமல் குறிப்பிடத்தக்க வர்த்தக பெறுமதியின் அடிக்கடி மற்றும் தொடர்ச்சியான வர்த்தக ஓட்டங்களின் கட்டமைப்பிற்குள் இறக்குமதி செய்யப்பட்டது. மூலச் சான்று பற்றி மேலும் அறிய DCTS விருப்பங்களைக் கோருவது குறித்த வழிகாட்டுதலை பார்க்கவும்.

### பெட்டி A3: உற்பத்தி இட விதிகள் (சுமுழு) உடன் இணங்குவதை நிரூபிக்க தேவையான ஆவணங்கள்

ஏற்றுமதியாளர்கள் உற்பத்தி இட விதிகளை நிரூபிக்க பின்வரும் ஆவணங்களை பிரித்தானிய அதிகாரிகளிடம் பேணி வழங்க வேண்டும்.

- பொருட்களின் உற்பத்தி செயல்முறை தொடர்பான ஆவணங்கள்
- பொருட்களின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் கூறுகள் / பொருட்களை கொள்வனவு செய்வது தொடர்பான செலவை நிரூபிக்கும் ஆவணங்கள்.
- பொருட்கள் மற்றும் கூறுகள் / பொருட்களின் உற்பத்தி மூல நிலையைக் காட்டும் ஆவணங்கள்
- ஏற்புடையதாயின், தயாரிப்பின் பிராந்திய பெறுமதி உள்ளடக்கத்தை தீர்மானிப்பதற்கான சான்றுகள்

## உற்பத்தி இட பிரகடனம்

ஒரு மூல பிரகடனமானது "விலைப்பட்டியல் அறிவிப்பு" அல்லது 'மூல அறிக்கை" என்றும் குறிப்பிடப்படுகிறது. இலங்கை ஏற்றுமதியாளர்கள் உற்பத்தி இட பிரகடனத்தை வழங்க வேண்டும், இது வர்த்தக விலைப்பட்டியல், பொதிவுப் பட்டியல் அல்லது விநியோக குறிப்பு போன்ற வர்த்தக ஆவணத்தில் செய்யப்பட வேண்டும். இது இந்த வழிகாட்டி யின் பிரிவு 2 இல் பட்டியலிடப்பட்டுள்ள தகவலைக் கொண்டிருக்க வேண்டும் என்பதோடு, பெட்டி A5 இல் வழங்கப்பட்டுள்ள "உற்பத்தி இடம் குறித்த பிரகடன வாசகங்களை" உள்ளடக்கியிருக்க வேண்டும். உற்பத்தி இட பிரகடனம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதோடு, ஏற்றுமதியாளரின் கையொப்பத்தை உள்ளடக்கியிருக்க வேண்டும், மேலும் ஏற்றுமதியாளரிடமிருந்து இறக்குமதியாளருக்கு இலத்திரனியல் முறையில் அனுப்பப்படலாம். மூல பிரகடனம் இரண்டு ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும், மேலும் இந்த இரண்டு ஆண்டுகளுக்குள் ஐக்கிய இராச்சிய வருவாய் மற்றும் சுங்கத் துறையிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். விதிவிலக்கான சூழ்நிலைகள் இருந்தால், இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் இது ஏற்றுக்கொள்ளப்படலாம்.

### பெட்டி A4: உற்பத்தி இட பிரகடனத்தைத் தயாரிப்பதற்கான நிபந்தனைகள்

- முன்னுரிமை கட்டண முறைக்கு (preferential tariff treatment) தகுதியான பொருட்களின் தயாரிப்பு மற்றும் விநியோகத்திற்கான பொருத்தமான வர்த்தக கணக்கியல் பதிவுகளை பேணவும்
- தயாரிப்பாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களிடமிருந்து பொருட்களின் உற்பத்தி இடத்தை காட்டும் துணை ஆவணங்கள் அல்லது எழுத்துப்பூர்வ கூற்றுக்களை இலங்கை சுங்கம் அல்லது வேறு எந்த அதிகாரத் தரப்பிடமும் வழங்க தயாராக இருங்கள்.

### பெட்டி A5: உற்பத்தி இட பிரகடன வாசகங்கள்

**வர்த்தக விலைப்பட்டியல் அல்லது பொதிவுப் பட்டியலில் உள்ளடக்கப்பட வேண்டும்**

இந்த ஆவணத்தால் உள்ளடக்கப்பட்ட தயாரிப்புகளின் ஏற்றுமதியாளர் (EORI இலக்கத்தை உள்ளிடவும்) வேறுவிதமாக தெளிவாகக் குறிப்பிட்டாலேயே அன்றி, இந்த தயாரிப்புகள் ஐக்கிய இராச்சியத்தின் DCTS இன் உற்பத்தி இட விதிகளின் படி (பொருட்களின் உற்பத்தி இடத்தை உள்ளிடவும்) முன்னுரிமை உற்பத்தி இடத்தைச் சேர்ந்தவை என்று வெளிப்படுத்துவதுடன், பூர்த்தி செய்யப்பட்ட உற்பத்தி இட அளவுகோல் (தயாரிப்புகள் முழுவதுமாக பெறப்பட்டவை: 'P' என்ற எழுத்தை உள்ளிடவும் போதுமான அளவு செயன்முறையாக்கப்பட்ட தயாரிப்புகள்: ஒரு HS தலைப்பைத் தொடர்ந்து 'W' என்ற எழுத்தை உள்ளிடவும் (உதாரணம் 'W' 9618)).

________________ [ ][ ] [ ][ ] [ ][ ][ ][ ]

(இடமும் திகதியும் (ஆவணத்திலேயே சேர்க்கப்பட்டிருந்தால் இதைத் தவிர்க்கவும்))

____________________________________________

(ஏற்றுமதியாளரின் பெயர் மற்றும் கையொப்பம்)



## படிவம் A

மேலே குறிப்பிட்டவாறு, இலங்கை ஏற்றுமதியாளர்கள் உற்பத்தி இடத்தின் ஆதாரத்தைக் காட்ட படிவம் A ஐ மாற்றீடாக சமர்ப்பிக்கலாம். படிவம் A இல் தொடர் இலக்கம் அல்லது வர்த்தக பற்றிய குறிப்பு இருக்க வேண்டும், மிக முக்கியமாக, இலங்கை வர்த்தக திணைக்களத்தினால் கையொப்பமிட்டு முத்திரையிடப்பட வேண்டிய அவசியமில்லை. படிவம் A ஐ பூர்த்தி செய்தல் குறித்து பிரித்தானிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதலைப் பார்க்கவும்.

பொருளாதார செயற்படுத்துனர்கள் பதிவு மற்றும் அடையாள இலக்கம்

பிரித்தானியாவில் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும், பொருட்கள் பிரித்தானிய எல்லையில் இருக்கும்போது சுங்க பிரகடனத்தை வெளியிடுவதற்கும் ஒரு EORI இலக்கம் தேவை. பிரித்தானியாவை தளமாகக் கொண்ட இறக்குமதியாளர்கள் பொதுவாக ஒரு EORI இலக்கத்துக்கு விண்ணப்பித்து பெறுவார்கள். நேரடி ஏற்றுமதி மற்றும் விற்பனையின் போது, வர்த்தகர்கள் EORI இலக்கத்தைப் பெறுவதற்கும் சுங்க அதிகாரிகளுடன் ஈடுபடுவதற்கும் பிரித்தானியாவில் நிறுவப்பட்ட சுங்க முகவர்கள் அல்லது தரகர்களை அமர்த்தலாம்.

கப்பலேற்றல் குறிப்பு

துறைமுகத்திற்கு பொருட்களை கொண்டு செல்வதற்கு முன், ஏற்றுமதியாளர் இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதிப் பிரிவுக்கு துறைமுகக் கட்டணங்களைச் செலுத்த வேண்டும். இந்தக் கட்டணங்களைச் செலுத்த, ஏற்றுமதியாளர்கப்பல் சரக்கு அனுப்பப்பட்ட விவரங்களை கப்பல் சரக்கு குறிப்பு -(EXP 3a) இல் நிரப்பி, குறிப்பின் மூன்று பூர்த்தி செய்யப்பட்ட பிரதிகளை இந்தப் பிரிவுக்கு சமர்ப்பிக்க வேண்டும். கட்டணங்களைச் செலுத்தியவுடன், ஒரு பிரதி இலங்கை துறைமுக அதிகாரசபையால் தக்கவைக்கப்படும், மேலும் இரண்டு பிரதிகள் ஏற்றுமதியாளருக்கு பதிவு பராமரிப்புக்காக வழங்கப்படும். இது கப்பல் சரக்கு குறிப்புகளின் கட்டணங்கள் செலுத்தப்பட்ட பிரதிகள் என்று அழைக்கப்படுகிறது.

சரக்கு அனுப்பும் குறிப்பு

சரக்கு அனுப்பும் குறிப்பு -(EXP 3b) சரக்கு தொடர்பான அனைத்து தகவல்களையும் கொண்டுள்ளது, அதாவது அதன் விளக்கம், அளவு, ஏற்றும் கொள்கலன், ஏற்றும் துறைமுகம், வெளியேற்றும் துறைமுகம் போன்றவை. இது ஏற்றுமதியாளரால் தயாரிக்கப்பட்டு, சரக்குகளை அனுப்புவதற்கான அங்கீகாரத்தைப் பெற இலங்கை துறைமுக அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.



05

# இணைப்பு V போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல்

## ஒரு பில் ஒப் லேடிங் (Bill of lading) உதாரணம்

படம் A5: மாதிரி பில் ஒப் லேடிங் (Bill of lading)

Date: **BILL OF LADING** Page 1 of ______

**SHIP FROM**

Name:
Address:
City/State/Zip:
SID#: FOB: ☐

Bill of Lading Number: ____________________

BAR CODE SPACE

**SHIP TO**

Name: Location #: __________
Address:
City/State/Zip:
CID#: FOB: ☐

CARRIER NAME: ____________________
Trailer number:
Seal number(s):

SCAC:
Pro number:

BAR CODE SPACE

**THIRD PARTY FREIGHT CHARGES BILL TO:**

Name:
Address:
City/State/Zip:

Freight Charge Terms: *(freight charges are prepaid unless marked otherwise)*
Prepaid ______ Collect ______ 3rd Party ______

SPECIAL INSTRUCTIONS:

☐ (check box) Master Bill of Lading: with attached underlying Bills of Lading

**CUSTOMER ORDER INFORMATION**

| CUSTOMER ORDER NUMBER | # PKGS | WEIGHT | PALLET/SLIP (CIRCLE ONE) | | ADDITIONAL SHIPPER INFO |
|---|---|---|---|---|---|
| | | | Y | N | |
| | | | Y | N | |
| | | | Y | N | |
| | | | Y | N | |
| | | | Y | N | |
| | | | Y | N | |
| | | | Y | N | |
| | | | Y | N | |
| GRAND TOTAL | | | | | |

**CARRIER INFORMATION**

| HANDLING UNIT | | PACKAGE | | WEIGHT | H.M. (X) | COMMODITY DESCRIPTION<br>Commodities requiring special or additional care or attention in handling or stowing must be so marked and packaged as to ensure safe transportation with ordinary care. See Section 2(e) of NMFC Item 360 | LTL ONLY | |
|---|---|---|---|---|---|---|---|---|
| QTY | TYPE | QTY | TYPE | | | | NMFC # | CLASS |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | RECEIVING | | |
| | | | | | | STAMP SPACE | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | GRAND TOTAL | | |

Where the rate is dependent on value, shippers are required to state specifically in writing the agreed or declared value of the property as follows:
"The agreed or declared value of the property is specifically stated by the shipper to be not exceeding ____________ per ____________."

COD Amount: $ ____________________
Fee Terms: Collect: ☐ Prepaid: ☐
Customer check acceptable: ☐

**NOTE Liability Limitation for loss or damage in this shipment may be applicable. See 49 U.S.C. ▪ 14706(c)(1)(A) and (B).**

RECEIVED, subject to individually determined rates or contracts that have been agreed upon in writing between the carrier and shipper, if applicable, otherwise to the rates, classifications and rules that have been established by the carrier and are available to the shipper, on request, and to all applicable state and federal regulations.

The carrier shall not make delivery of this shipment without payment of freight and all other lawful charges.
____________________ Shipper Signature

**SHIPPER SIGNATURE / DATE**
This is to certify that the above named materials are properly classified, packaged, marked and labeled, and are in proper condition for transportation according to the applicable regulations of the DOT.

Trailer Loaded:
☐ By Shipper
☐ By Driver

Freight Counted:
☐ By Shipper
☐ By Driver/pallets said to contain
☐ By Driver/Pieces

**CARRIER SIGNATURE / PICKUP DATE**
Carrier acknowledges receipt of packages and required placards. Carrier certifies emergency response information was made available and/or carrier has the DOT emergency response guidebook or equivalent documentation in the vehicle.
*Property described above is received in good order, except as noted.*



## ஒரு விமானப் போக்குவரத்துச் சான்றிதழ் (Air waybill) உதாரணம்

படம் A6: விமானப் போக்குவரத்துச் சான்றிதழ் (Air waybill) மாதிரி

Shipper's Name and Address | Shipper's Account Number

Not negotiable
**Air Waybill**
**(Air Consignment note)**
*issued by*

Copies 1,2 and 3 of this Air Waybill are originals and have the same validity

Consignee's Name and Address | Consignee's Account Number

It is agreed that the goods described herein are accepted in apparent good order and condition (exept as noted) for carriage SUBJECT TO THE CONDITIONS OF CONTRACT ON THE REVERSE HEREOF. ALL GOODS MAY BE CARRIED BY ANY OTHER MEANS INCLUDING ROAD OR ANY OTHER CARRIER UNLESS SPECIFIC CONTRARY INSTRUCTIONS ARE GIVEN HEREON BY THE SHIPPER, AND SHIPPER AGREES THAT THE SHIPMENT MAY BE CARRIED VIA INTERMEDIATE STOPPING PLACES WHICH THE CARRIER DEEMS APPROPRIATE. THE SHIPPER'S ATTENTION IS DRAWN TO THE NOTICE CONCERNING CARRIER'S LIMITATION OF LIABILITY. Shipper may increase such limitation of liability by declaring a higher value for carriage and paying a supplemental charge if required.

Issuing Carrier's Agent Name and City | Accouting Information

Agent's IATA Code | Account No.

Airport of Departure (Addr. of First Carrier) and Requested Routing | Reference Number | Optional Shipping Information

| To | By First Carrier | Routing and Destination | To | By | To | By | Currency | CHGS Code | WT/VAL | | Other | | Declared Value for Carriage | Declared Value for Customs |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | PPD | COLL | PPD | COLL | | |

Airport of Destination | Flight/Date | For Carrier Use Only | Flight/Date | Amount of Insurance | INSURANCE If Carrier offers insurance, and such insurance is requested in accordance with the conditions thereof, indicate amount to be insured in figures in box marked "Amount of Insurance"

Handling information

(For U.S.A. use only) These commodities, technology or software were exported from the Unated States in accordance with the Export Admini stration Regulations. Diversion contrary to USA law prohibited | SCI

| No of Pieces RCP | Gross Weight | kg lb | Rate Class / Commodity Item No. | Chargeable Weight | Rate / Charge | Total | Nature and Quantity of Goods (incl. Dimensions or Volume) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

| Prepaid | Weight Charge | Collect | Other Charges |
|---|---|---|---|
| | Valuation Charge | | |
| | Tax | | |
| | Total Other Charges Due Agent | | |
| | Total Other Charges Due Carrier | | |

Shipper certifies that the particulars on the face hereof are correct and that insofar as any part of the consignment contains dangerous goods, such part is properly described by name and is in proper condition for carriage by according to the applicable Dangerous Goods Regulations.

Signature of Shipper or his Agent

| Total Prepaid | Total Collect |
|---|---|
| | |
| Currency Convertion Rates | CC Charges in Dest. Currency |

Executed on (date) at (place) Signature of issuing Carier or its Agent

| For Carrier's Use only at Destination | Charges at Destination | Total Collect Charges |
|---|---|---|
| | | |

# #SheTrades

*Her success. Our future.*

The International Trade Centre's SheTrades Initiative is a global movement to unlock women's full economic potential through trade.

By working with governments, business support organizations, the private sector, and women producers and entrepreneurs, we create the right capacities and conditions for sustainable impact at scale.